தீண்டாதார் யார்?



இயற்றியோர்
மூவர்.

ஓம் சிவம்

வசீகர மனோகரி

அல்லது

தீண்டாதார் யார்?


(புதுவது புனைந்த ஓர் நாடக நூல்).

இயற்றியோர்
மூவர்.

வெளியிட்டோர்
வேல்முருகன் அண்டு கம்பெனி,
கிருஷ்ணம்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.

1930

 [விலை அணா 8



வேள் - என். துரைக்கண்ணன்.

கி. ரா. சுந்தரமூர்த்தி. வை. மு. பரமானந்தம்.

INTRODUCTION.

NOVELISTS can be divided into three classes. First, those who write Novels with the purpose of interpreting the mind of man, not from any particular stand-point but from the stand-point of one eternal universal spirit. These writers' object is not to dissect the human family into sections and water-tight compartments and to interpret them as separate, isolate and unconnected units. They are interested in expounding the meaning and message of the universal mental conceptions derived from the fact of human life. Theylook at man and his society as a component part of Infinite, one undivided Whole. These writers, in their inimitable way with all the power and skill at their command, give a practical and concrete shape to the universal human ideals which the philosophers interpret in a cold, abstract and theoretical language, These writers transcend the boundaries of geography, time and race. Time and space abide in them. They are universalists. They are Idealists. They belong to all countries, to all people, and to all ages. These writers are known as Idealists. It is to this class Shakespeare of England, Goethe of Germany, Kalidasa of India belong.

The second class of writers are those who are surrounded by limitations of time, place and racial considerations. They are interpreters of characters

as they see and understand. They do not care to penetrate behind and beyond the externalities of the images which stand before them in their concrete shape and form. They do not like to take upon themselves the office of those who invade into the realm of possibility and Idealism and find out the meaning of the appearances which are clothed in the raiment of time, place and race. These writers may be called the Realists Richardson of England, Zola of France, and Hauptanam of Germany belong this class.

The third class of writers are those whose passion for writing novels is neither guided by aims and ideals of the first class of writers nor the actual facts of life which inspire the realists. But it is guided by the rich, fertile, colourful, vivacious imagination of their own The characters they produce are the inventions of their own thinking. Heroes and heroines whom they produce can be treated as reflections of their moods in different atmospheres and under different circumstances. These writers immolate objectivity and the contents whereof on the altar of their own subjective broodings.

Abler and better critics may classify the novelists in other ways than I have chosen to do. This classification is by no means absolute or exhaustive.

Now coming to the novel which is before me to-day it is a mixture of idealism, realism, subjective

brooding and a good deal more. It is the time-spirit which has moved the three young men of three different occupations and of three different castes. This novel would not have seen the dawn of day but for the agitation and restlessness which are prevailing in our country to-day. The outstanding demand of these three young minds is to popularise knowledge. They believe in the supreme importance of acquainting the multitude with the findings of true sages and seers who are inspired by the disinterested ideal of service. They believe in tradition as their heritage but not at the cost of reason; they believe in reason as the clear light which helps their discerning eyes to see things in their proper perspective but not at the cost of tradition. These young men seem to believe both in evolution as well as in revolution. They are living in an age when old concepts are being perceptibly weakened and altered by democratised educational ideals, foreign travel and by the ruthless onslaughts on their social and religious ideals by the foreign propagandists. It is no wonder that this novel should come out as the product of the earnest desire of these young men whose minds are moved, agitated and fired by the ideal of purging their society from all its socio-religious evils. It is the fearless adventure and daring enterprise of my youthful friends and nobly and courageously executed.

I would request my readers not to look upon this book purely as a socio-religious reform novel, nor would I request my friends to look upon it as a

novel, the theme of which is a romance, not even as a novel written for the sake of exhibiting literary taste and skill. This tiny little book, no doubt, contains germs of socio-religious reform, romance between a young man and a young woman and light attemps at pen-pictures. But these are merely auxilliary and subsidiary implements which the writers have used. Their main idea is to proclaim in a simple, clear and unambigious language the just and lawful demands of all right thinking, young patriots of our country to-day. What could those demands be? I shall name only one which I find in this three-chapter novel: and it is this, the sovereignty and the divinity of man, the sovereignty and divinity of woman. The society and religion are as much for men and women, as men and women are for society and religion. This one idea is enough to make the novel dear to all truth-loving and self-sacrificing patriots.

As I said above, it is the product of time-spirit of our country to-day. Throughout the length and breadth of our land there is a demand, a just demand for transvaluation of all old values of life; obedience and loyalty for all ancient and effete customs and traditions are being questioned. Double standards of life—one for man and the other for woman—are also being questioned. The doctrine of infallibility of the teachings of a particular book or an individual is also being questioned. The exclusive sanctity of any particular place as the only place where God resides is being vehemently

repudiated by all true students of our religion. The exclusive and absolute monopoly of any particular class or caste of people as the only chosen few of God's children is being denounced in a most uncompromising language. The pureile doctrine that an elderly man must be respected because he is elderly ; a young man must be decried because he is young, is being put down as the doctrine of a senile, wounded and an old fashioned obscurantist. The primitive leaching that a woman should always and under all circumstances obey blindly and irrationally not only her husband but also his other male relatives because she happens to be a woman and a man may conduct himself in a most shockingly rude, irresponsible and immoral manner towards his wife without being questioned by her as to the sanity and soundness of his conduct and character because he happens to be a man is being mereilessly rediculed as the ethies of a cave man. The sovereignty of a man's right as a man, the sovereignty of a woman's right as a woman, is being imperiously and imperatively demanded from those who come in the name of priests and preceptors. The power,the authority, the force and the energy with which our young men and women demand this right is simply unique, extraordinary and divine. It is this thirst for winning for man his suzerainity once again in this world, it is this ardent desire to enthrone him on the high pedestal of his manhood that has emboldened my young friends to clothe their ideas in a concrete, practical and direct language.

As far as the theoretical ideals which are found in this book are considered, they are not new. They are as old as our *Upanishads* and *Kural*. God dwells in man and He in him, all human beings are God's children, we are all one, we must see the entire human race in God and the God in the entire human race, are but oft quoted truisms. They are not new; but what is new is putting the ideals which are being interpreted in theoretical and abstract language by our thinkers and public workers on platforms as a piece of academic debate or past-time pleasure, in a simple, forceful, living and concrete manner. They take it for granted once for all that the only national and rational way in which our people should live and prosper is the way which is described in a clear language by "Vaseekaran and Manohari." Their language does not countenance whitewashing of any philosophical nonsense. They are against explaining away religious frauds in an abstruse and an ununderstandable language. I admire the daringness and courage with which they have given a concrete shape to the idea that all are one—irrespective of caste, creed or colour. Caste, creed and colour are mere *Shibboleths*. They are external wrappages. They are of no permanent importance. The externalities are mere stamp-marks. They will wear out; the essence alone will remain for ever; the Spirit only is eternal. Men and women are the vehicles of the one only Eternal Spirit. They are all His children.

I do not like to indulge in sermonising through this preface. I am no preacher; but is it not necessary that I should point out to all those who come in the name of public workers that mere high sounding ethico-metaphysical ideas will take us nowhere? What is necessary to-day is that we should gird up our loins and translate our words into action· When we are burning with passion to make our country free and great, mere words, howsoever noble, lofty and unique they may appear, will not snffice. Our rulers will care not a jot or title for the phyro-technic expressions in which we indulge with ability and with expert skill. What will move them and yield to our demands is the dynamic energy, all-consuming fire, power and enthusiasm which are the results of our direct companionship with *the Truth*. He who believes in Truth and lives in *Truth* is a man of action—strong, powerful action. He who talks big things in the Government House, The Legislative Council, The Legislative Assembly and on Public platsforms but lives a narrow, crooked, cramping and bigoted life of a particularist, separatist or monopolist keeps his companionship with untruth. Such a man misleads others and misleads himself; such a man ruins the country and ruins himself.

Coming to the plot of this novel, it is very simple and its characters are few in number. If you can test the importance of a novel by the desire it creates in the reader's mind not to leave the book till it is finished at one stretch, I can safely say

that this is a successful one. It has its shortcomings but it is the first attempt of my young friends who are yet in their teens; all books have their defects. It is difficult to produce a perfect book, especially to-day, when human problems are so many and so complex.

As for the style, it is written neither in Pandit's Tamil which is sanskritised, nor in Tamil Munshi's pedantic and high flown language. Its style is simple and direct and its language is easy and understable even by a man in the street. Their zeal for directness and simplicity have not made them sacufice Their taste for literary beauty, idiom and grammar.

In my humble opinion, comedy (which this novel may be called) has the softening effects on man's enthusiasm. Instead of sharpening the adventurous and enterprising appetites of men and women, Comedies have the tendency. to blunt the edges of their purpose. I believe in tragedy ; for life is more a tragedy than a comedy. I believe in life's reality and divinity because of its tragic nature. I do agree with the critics that those who run post-haste with a morbid desire to court sorrow and suffering for the fun of courting sorrow and suffering are fanatics and unbalanced *bigots.* But I make bold to say that those who shirk dangers and difficulties, those who are afraid of courting calumny and unpopularity, are subhuman. The super-men and super-women are they who

do not believe in the path of least resistance nor do they believe that they should be righteous out of fear of losing their crown. There is a materialism which is not ashamed to teach people that they should be righteous because it will bring them the rewards of heaven and they should shun vicious actions because it will bring them the tortures of hell. This kind of materialism may be baplized as religious materialism. I hate to give my assent to any doctrine which preaches an arbitrary ethical teaching of rewards for good life and punishment for vicious one. My experience is that it is the scoundrel who gets the crown very often and the saint is invariably lifted up on the cross for his innocence, purity and unselfish devotion to humanity. What we must teach our young men and women is that they should not give up their fight because they are met with constant defeats. They must be asked to arm themselves with perseverance and energy as often as they are defeated. What we must instil into the young minds of our generation is that life is made sacred and divine by the number of tears it sheds in the interest of others. We must learn to suffer and die before we can think of living a good, beautiful and prosperous life. It is because of this reason I find it very difficult to believe with my young friends in the last scene of their novel. It is in no way true to the fact of life of our people as we find it to-day in our country. How is it possible for me to believe that our country has become so soon, so same as to produce

a judge, an audience, the parents of the heroine and the relations of the bridegroom as to give their placid consent and extol the couple for their heroic deed and pronounce their blessing and benedictions for their long life, plenty and prosperity? But I accept that it must be our goal. I also believe that some time in future we may that be able to produce such an atmosphere as we find it in the last part of the novel. The last part of the novel is contrary to the fact of life that we witness it in our midst to-day. The sword of persecution has not yet lost its keenness, the fire of fanaticism has not yet left us, the poison of bigotery has not yet lost its bitterness. They are still there.

I would have rather liked to see the girl die for the boy or the boy for the girl out of regard for their highest ideals of life wherein they believed.

One word more and I am done. I am glad that my young friends have thought it fit to expose some of the most shallow and narrow ideals of life which the parents of our young men and women are not ashamed of placing before them in the name of culture, civilisation and Dharma. For instance, how often does not Monohari's stepmother attempt to convince her husbands of the utter futility and great harmfulness of giving high education to his daughter and that too in English. She is neither afraid nor ashamed of telling her husband that all that is necessary to make his child an obedient, loyal and respectful daughter is a little knowledge in Tamil and a little knowledge

of music. She is not tired of dinning this kind of homely into his ears again and again. Contrary to the teachings of her stepmother, my young friends insist in giving a very high education to our girls as well as boys and that in a language which is democratising our mind to a very great extent. My friends are justified in exposing her shallownesi The passion for western science and civilisation has revolutionised our modes and methods of living. It has revolutionised our ways of communication and transportation. It has also revolutionised our physical appearance. It has revolutionized our political views to a remarkable degree. But what it has not revolutionised is our mode of thinking in regard to our socio-religeous matters. It gives me immense joy to see that my young friends have justly laid due emphasis on a right and important point. It is this. Our thinking in socio-religeous matters also must be revolutionised. We must not think in old grooves, we must cut new paths and embark on new ideas of lie.

I said that the authors are inspired both by the evolutionary as well as revolutionary ideals of life. This novel may be called a revolutionary one because of the matrimonial alliance between an Adi-Dravad and a Brahmin girl. But it is also evolutionary because they advocate self-exertion, self-reliance and self-education. I am disgusted with those who are never tired of complaining about their envionment, etc. I believe in the doctrine of the survival of the fittest. I use the word

fittest in the sense it is used for the strongest and best. It is nothing extraordinary that a man should be surrounded by a number of impediments and dangers, but it is really extraordinary that he should allow himself to be conqured by them. Freedom does not comd to him who is afraid of fighting for it, education does not come to him who does not seek it with care, deligence and strennousness. Life is a battle and one must learn to face it with zeal, courage and wisdom. Authors' Vasikaran was a strong, deligent and a wise young man. He did not allow himself to be conquered by his caste difficulties. He strugled hard, and passed his high university examinations. Manohari who was his classmate watched him carefully. She was a young Brahmin girl endowed with intelligence and sagacity. She appreciated the worth and merit of Vasikaran as a young Adi-Dravida who fought the battle of his life nobley and well. In the battle of life those who are lazy, indolent and weak will naturally perish and those who are industrious, vigilant and courageous will naturally come out successfully and live a happy and prosperous life. I am glad to notice that my young authors have realiged this supreme lesson of the gospel of Evolution.

In fine, I pray to Him, the giver of all good things, the Shaper of our thoughts and ideas help my young friends' march into the field of life which they have chosen, with courage and enthusiasm till they make their country the real abode of Gods

and Goddesses and themselves enjoying the beautiful things which they have ushered into existence through their literary efforts.

VEPERY,
8th June 30

S. P. Y. Surendranath Voegely
Arya Garu,
M.A., B.D., S. T. M.

PREFACE.

" All are but parts of one stupendous whole
Whose body, *Nature* is, and God the *Soul.*"—*Pope.*

THIS small book written in the dramatic style is with the object of proving that no one is in any way degraded or considered low-born by birth alone. These distinctions of caste, especially, in the Aryan tradition, have come into vogue not from any distant period, as we find from the old writings. No divisions or communities are barred from sharing the social, moral and intellectual attainments, although the manner and circumstances are said to be humble and poor. The Almighty God is the Father of all the living races and no one will dare deny that God's love is equal to all. From a certain period, it is now so arrived at, a certain people were ousted from enjoying the equal rights and customs, which practice developed day by day as a maze and deeply rooted in the arrogant and self-willed persons who, boasting the chance of their being so high, coolly planned out the undermining and classifying the unlucky ones as untouchable and unapproachable which is inhuman and disgraceful.

The subsequent process of this development instilled and impressed more in the hearts of the self-conceited people who, for their better advantage and selfishness, made the last mentioned unfortunates serfs and slaves and treated them far

worse than animals. Hence, by this traditional change, the division and classification varied without number; and the consequence thereof is the outcome of the present lot in the life of the so-called oppressed community, *Untouchables* or *Pariahs.* We deeply feel sorry from the very core of our hearts for repeating this word and hope sincerely that our present task will do well to prove that there is no such difference at all by birth..

In the following pages, we have before us an ideal hero and the better half of his life, whose birth and status in life, is though far and out of reach, yet their true harmony of love brought them together and made them unrivalled example for the world. No doubt, the readers of right understanding, after perusing this book carefully and looking to the present state of affairs, will hardly wonder that the time is very near, when the equality of all the human races will be declared and there shall be no more strife between the unconvincing birth-upholders who even at this advanced pace of civilisation though suffer inwardly yet vainly think to overawe shamlessly the less fortunates and destitutes by the mere virtue of their birth alone.

Many inspired pioneers of Social reform moved this earth from end to end and lo! the irremediable conditions prevalent in this eastern hemisphere are now brightening up here, there and everywhere. The crusade against all trash and orthodoxies is begun now in right earnest. Down, down with

immorality; down with superstitious bug-bear religionists; down with old scruples and customs; down with ignorance and down with hypocrisy.

Friends! do not be stupefied and astounded at the above and take the same for utter blasphemy. Young India! sink all differences; move out of narrow grooves, grow out of your surroundings and rice superior to in-born prejudices and unite in one chorus for the homage and adoration of Brotherhood and set at rest all minor disputes arising out of caste and birth. Only this Universal love of Brotherhood alone will save India from its present catastrophe.

As we think that a long preparatory note will be felt tedious for any busy reader, we conclude this with the great Swami Vivekananda's message :—

> " Be proud that you are an Indian; say in pride, I am an Indian: every Indian is my Brother; say the ignorant Indian, the poor Indian, the Brahmin Indian the Pariah Indian is my brother—be clad in torn rags and say in pride at the top of your voice, the Indians are my brothers; the Indians are my very life!"

N.B.—*Along and with the efforts of ours in bringing out this maiden work to the dawn of light, another sincere friend has taken a good deal of interest and rendered his best and utmost services, who, though not wished to take part in the photographical group or his name mentioned out of extreme coyness, equally deserves the reader's sympathies.*

AUTHORS.

திருவாளர்—தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், M.A., B.L.,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

"வசீகர மனோகரி அல்லது தீண்டாதார் யார்?" என்னும் புனைந்துரையை மகிழ்ச்சியுடன் ஓதினேன். சீர்திருத்தக் கொள்கையைப் பரப்பி மக்கள் மனதில் எழும் திடுக்காட்டத்தை இந்நூல் ஒழித்து விடுமென்பதில் ஐயமில்லை. மேற்குடி மகனர் பழங்குடி மகளாரை மணந்த வரலாற்றை நேரே கண்டறிந்தோம். ஆனல் மேற்குடி மகளார் பழங்குடி மகனுரை மணப்பது இன்னும் வெளியாகவில்லை யாதலின், அதைக் கேட்டுச் சிலர் மனந்திடுக்கிடலாம். புனைந்துரைகள் வழியாக இவ் வழக்கு மக்கள் மனதிடைப் பரவி, எண்ணத்தில் ஊறிக் கனவாகத் தளிர்த்தால் உண்மைத் திருமணம் என உலகில் முற்றிப் பழுத்து எவர்க்கும் இனிமை தந்து இன்பம் ஊட்டும். அவ்வகையில் இந்நூலை எதிர் கொண்டு அழைக்கின்றேன்.

தமிழகம்
17—5—30.

இங்ஙனம்:

தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை.

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர்—திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்,

இராயப்பேட்டை, சென்னை.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்" என்பது மறைமொழி. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதி வாழ்தல், கூர்தல் அல்லது உள்ளது சிறத்தல் (Evolution) என்னும் இயற்கை அறத்தின் வளர்ச்சிக்குக் கேடு சூழ்வதாகும். அப்பேரறத்திற்குத் துணைபுரியும் நாடு எல்லாத் துறைகளிலும் வளம் பெற்று ஆக்கமுறும். அவ்வறத்திற்குத் துணை புரியா நாடு தனது இயற்கை நலன்களை இழந்து வாட்டமுறும்.

பழந் தமிழ் மக்கள் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதி வாழ்வு நடாத்தினர்களில்லை. அவர்கள் நாளில் நாடு எல்லா நலன்களையும் பெற்றிருந்தது. இதற்குப் பண்டை அகப்புற நூல்கள் சான்று கூறும். பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் பேதைமை இடைக் காலத்தில் நமது நாட்டிடை நுழைந்தது. அந்நாள் தொட்டு நாடு நலனிழந்து வாட்டமுற்று வரல் கண்கூடு. இவ்வேளையில் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் பேதைமை போக்க ஆங்காங்குள்ள அறிஞர்கள் முயலுதல் வேண்டும்.

பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் பேதைமை போக்குதற்குரிய வழிகள் பல உண்டு. அவைகளுள்

ஒன்று கலப்புமணம் என்பது. கலப்புமணம் என்று காமம் என்னும் எரிவாய் நிரயம் புகுதலாகாது. கலப்பு மணம் காதல்வழி நடைபெறுதல் வேண்டும். இந்நூல் கலப்பு மணத்தைக் காதல் வழி நின்று அறிவுறுத்தல் கண்டு களிபேருவகை யெய்துகிறேன். இந்நூல் காலத்திற்கேற்ற ஒன்று என்பதில் ஐயமில்லை. இந்நூலாசிரியன்மாருக்கு எனது நன்றி உரியதாக. இவர்கள் வாயிலாக இத்தகைய நூல்கள் பல வெளிவரல் வேண்டுமென்பது எனது வேணவா. இம்முயற்சியும் நாட்டின் விடுதலைக்குரிய துறைகளுள் ஒன்று என்று கூறல் மிகையாகாது.

இராயப்பேட்டை
25—5—30.

இங்ஙனம்:
திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

அறிஞருரைகள்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும் மறைத்திருவாளர் மறைமலையடிகள்,

பொதுநிலைக் கழகம், பல்லாவரம்.

"வசீகர மனோகரி அல்லது தீண்டாதார் யார்?" என்னுந் தமிழ் உரை நாடகத்தைச் சிறிது படித்து அதன் அமைப்பையும், அதன் நோக்கத்தையும் உணர்ந்து பார்த்தேன். நாடக அமைப்பு ஆங்கில நல்லிசைப் புலவரான செகப்பிரியருக்கு நன்கு வாய்த்தாற்போல, ஏனை நல்லிசைப் புலவர்க்கும் வாய்த்திலது. ஆயினும் நாடக நூல்கள் கூடிய வரையில் நல்ல அமைப்புடன் வெளிவருதல் தமிழ் மொழிக்கு ஓர் ஆக்கமேயாகும். இப்போது இவ்விளைஞர்கள் அமைத்திருக்கும் இந்நூல் நாடக நலன்கள் பெரும்பாலும் வாய்த்திருக்கின்றது. இந்நூலின் நோக்கமும் மக்களின் முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் வழிகாட்டுவதாயிருக்கிறது. அவ்வகையில் இதனைக் கற்பது பயன்தரற் பாலதேயாகும். கையெழுத்துப் படியிலேயே இந்நூல் என் பார்வைக்குக் கிடைத்திருக்குமாயின், இதிலுள்ள சில சொல் வழுக்களும் வேறு சில வழுக்களுங் களையப்பட்டிருக்கும். ஆயினும், இவை இந்நூலுணர்ச்சிக்கு இடையூறு பயக்கும் முதன்மையுடைய அல்ல. இரண்டாம் பதிப்

பின்கண் அச்சில வழுக்களுங் களையப்பட்டு வெளி வருமென்னும் நம்பிக்கையுடையேன். முழுப்பார்வையில் நின்று நோக்குங்கால், இந்நாடகநூல் சிறிய வடிவிற் சுவை பல அடக்கிக், கற்பார்க்கு இன்பமும் பயனும் அளிக்கும் நீர்மையதாய் இருக்கின்றது. எல்லாம் வல்ல இறைவனருளால் இவ்விளைஞர்கள் இன்னும் இது போன்ற நலன் தரும் நூல்கள் பல இயற்றி நீடு வாழ்க.

பொதுநிலைக் கழகம்
28—5—30.

இங்ஙனம்:
மறைமலையடிகள்.

நாடக உறுப்பினர்கள்.

வசீகரன் ... நாடக நாயகன்

மனோகரி ... நாடக நாயகி

சுந்தராங்கி ... வெங்கடேச பத்தரின் மகள்

சந்தானகிருஷ்ணன் ... சுப்பண்ணசாஸ்திரியின் மகன்.

குஞ்சிதபாதம்ஐயர் என
வழங்கும் பஞ்சாப
கேச ஐயர் ... மனோகரியின் தந்தை

நீலலோசனி ... குஞ்சிதபாதமய்யரின் இரண்டாம் மனைவி.

சுப்பண்ணசாஸ்திரி ... வைதீகக் கோட்டியைச் சேர்ந்த ஒருவர்.

வெங்கடேசபத்தர் என
வழங்கும் வெங்கட
சாமி பத்தர் ... தரகர்.

மற்றும், நீதிபதி, வழக்கறிஞர்கள், போலீஸ் உத்தியோகஸ்தர்கள், குப்பு சாஸ்திரி, அப்பு சாஸ்திரி, நீலகண்ட சாஸ்திரி முதலாயினோர்.

ஓம் சிவம்.

அணிந்துரை.

சாத்திரம் பலபேசுஞ் சழக்கர்காள்!
கோத்திரமுங் குலமுங்கொண்டு என்செய்வீர்?
பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே.

—திருநாவுக்கரசர்.

இப்பரந்த மண்ணுலகத்துப் பிறந்த மக்கள் ஒவ்வொருவரும் துன்பக்கலப்பில்லாத முழு இன்பத்தையே நுகர விரும்புகின்றனர். அவ்வின்பத்தை யடைதற்கே மக்களால் பல்வித முயற்சிகள் செய்யப் படுகின்றன. இவ்விதம் பலவிதமாக முயன்று முழு இன்பத்தை யடைய விழைந்தவர்களில் சிலர், அடிமை வாழ்விலும், கட்டுப்பட்ட தன்மையிலும் நின்று விடுபட்டாலன்றி முழு இன்பத்தையடைய வியலாது என்னும் உண்மையைத் தங்கள் அநுபவத்தில் கண்டார்கள். பிறருக்கு அடிமைப்பட்டு வாழ்வோரும், கட்டுப்பட்டு நடப்போரும் எங்ஙனம் தம் இச்சையின்வண்ணம் நடக்க முடியும்? எங்ஙனம் முழு இன்பத்தை நுகர முடியும்? எனவே, முழு இன்பத்தை நுகர வேண்டுவோரெல்லாம் அடிமை வாழ்வையும், கட்டுப்பட்ட தன்மையையும் விட்டு விலகவே முயற்சிப்பர். மனிதனின் இயற்கை வாழ்க்கையில் அடிமை வாழ்வும், கட்டுப்பட்ட தன்மையும் உண்டா?. என்று வினவில், இல்லை யென்றே

இயற்கை சொல்லும். இறைவன் மக்களை இவ்வித துன்ப வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்தானல்லன். கருணைக் கடலான அவன் அவ்வாறு செய்வானு மல்லன். அங்ஙனம் ஆண்டவனே மக்களுக்குத் துன்ப வாழ்க்கையை அளித்தான் என்று சொல்லுவோர் உள ராயின், அவர்கள் அவன் அருட்டன்மைக்கு இழுக்குத் தேடினோரே யாவர். சிற்றறிவும் சிறுதொழிலு முடைய மக்கள் தாங்களாகவே-தாங்கள் செயற்கையாகச் செய்து கொண்ட செயலின் வழியாகவே—துன்ப வாழ்க்கையை மேற்கொண்டார்கள் என்பதே மெய்யுணர்வுடைய ஆன் ரோரது துணிபு.

மக்கள் எங்ஙனம் துன்ப வாழ்க்கையை மேற் கொண்டார்கள் என்று ஆராயின், அவர்களில் ஒரு சில ரிடையே பேராசையும், தருக்கும் உண்டாயதே அதற் குக் காரணமாகும் என்ற முடிவுக்கு வரலாம். மக்கள் ஆதியில் எளிய உணவை யுட்கொண்டு, எளிய வாழ்க் கையை நடத்தி, யாவருடனும் அளவளாவி அன்பு பாராட்டி வாழ்ந்து வருங்காலத்து முழு இன்பத்தை நுகர்ந்து வந்தார்கள். அவ்வாறு வாழ்ந்து வந்த மக்களில் ஒரு சிலரிடையே, மற்றவர்களைக் காட்டிலும் தாங்கள் ஆடம்பர வாழ்க்கையை—டாம்பீக வாழ்க் கையை—நடத்தவேண்டு மென்னும் எண்ணம் எழுந்து, தங்களுக்கு அமைந்த உணவினும் அதிகமான உணவை யுண்டு, தங்களுக்கு வேண்டும் பொருளினும் அதிகமான பொருளைத் தொகுத்து வைத்து அவர்கள் அவாவிய ஆடம்பர வாழ்க்கையில் புரண்டார்கள். அதனோடு அவர்கள் அமையாது, வேண்டியதை வேண்டியாங்கு அளித்தற்கும், எண்ணியதை எண்ணியாங்கு முடித்

தற்கும் ஏதுவான பொருளைத் தாங்கள் மிகுதியாக ஈட்டி வைத்து மற்றவரினும் மேம்பட்டு விளங்குதலால், தாங்கள் யாவரினும் உயர்ந்தார்; எல்லாவற்றானும் மேம்பட்டார்—இவ்வித வகையில் தங்கள் இனத்தவரல்லாதாரெல்லாம் தாழ்ந்தார்—கீழ்ப்பட்டார் என்னும் வேற்றுமையை உண்டாக்கலானார்கள். இவ்விதம் முதலில் ஒருசிலர் வேற்றுமை கற்பித்து இருபிரிவு உண்டாக்கவே, மற்றையோரும், 'இவர்கள் இவ்வாறு செய்தனராதலால், நாமும் நம்மின் மெலியாரைத் தாழ்த்தி நாம் மேலுயர்வோம்' என்று எண்ணித் தங்களுள் பல பிரிவுகளை யுண்டாக்கி உயர்ந்தார்—சிறிது தாழ்ந்தார்—அதினும் கீழ்ப்பட்டார்—இவற்றினடங்காத தீண்டாதார்—ஒதுக்கப்பட்டார்—என்று வைத்து அவ்வவற்றிற்குப் பிரிவினைக் காட்டும் ஒவ்வொரு பெயர் இட்டு வழங்கினார்கள். எனவே, இங்ஙனம் உண்டான வேற்றுமைப் பிரிவுகளே இருபதாம் நூற்றாண்டு துவக்கம் வரை பல சாதிகளாகத் தலைவிரித்தாடின; இஞ்ஞான்றும் ஓரோரிடத்துத் தாண்டவமாடி வருகின்றன. இவற்றினிடையே பல பெரியோர்கள் இவ்வேற்றுமை யுணர்வுகளை யொழித்து ஒற்றுமையுண்டாக்கிப் பண்டைய நிலையை யடையச் செய்யப் பாடுபட்டார்கள். அவ்வான்றோர்களின் முயற்சியெல்லாம் அவரவர்கள் காலத்தில் பயன் தந்து, பின்னர் அவர்களைப் பின்பற்றியவர்களின் முரண்பட்ட செயல்களால் பயனிலவா யொழிந்தன. எனினும், இடை யிடையே வந்த பெரியோர்கள் சிலர் உறைத்து நின்று ஆற்றிய தொண்டின் பயனாக, இவ்விருபதாம் நூற்றாண்டில் பெரும்பாலான மக்கள் உள்ளத்தில் இவ்வேற்றுமை

யொழிந்து பண்டைய நிலையில் நாம் ஒழுகுதல் வேண்டு மென்னும் எண்ணமுண்டாய் எழுச்சி பெற்றன. எனவே, இவர்களுள் சீர்திருத்தக்காரர்கள் பலர் தோன்றி அஞ்சாது தங்கள் கொள்கைகளை யெடுத் துரைத்தார்கள். இன்றும் அக்கொள்கைகளை முழங்கி வருகிறார்கள். அவ்விதம் கூறிவருபவர்கள் இப் போலித் தருக்கும், சாதிவேற்றுமையும் ஒழிதற்குக் கொண்ட வழி ஒன்றுண்டு. அதாவது கலப்பு மணத்தைப் பரவச் செய்தலாம். கலப்புமணம் என்பது ஆடவரும் மகளிரும் போலி சாதி வேற்றுமை கருதாது, அக்கட்டினை யறுத் தெறிந்து, இயற்கையாக எழும்—பயன் கருதாது பிறக் கும்—தூய காதல் வழியாக ஒருவரை யொருவர் மணஞ் செய்து கொள்ளுதலாம். ஆனால் இஞ்ஞான்று ஒரு சிலர் கலப்பு மணம் என்னும் பெயரால் பொருந்தா மணம்—தகாத மணம்—நெறியினீங்கிய மணம்—பல செய்கின்றனர். வெப்பமிகுந்த காமத்தின் வாய்ப்பட்ட துச்சாரிகள் இக்கலப்பு மணத்தைத் துணையாகக் கொள்ளுகின்றனர். இவ்வித செயல் கலப்புமணத்தின் அடிப்படையான கொள்கையையே வேரோடு கெல்லி எறிவதாகும். தகாத ஒழுக்க முடையோர்க்குத் தூய தன்மை வாய்ந்த கலப்பு மணத்தில் இடமே கிடையாது. சீர்திருத்தக்காரர்களாயினோர் இத்தன்மை வாய்ந்தோர்க் குச் சிறிதும் இடங் கொடுத்தலாகாது. அது கிடக்க, இங்ஙனம் கூறும் கலப்புமணமே உண்மையாக, சாதி வேற்றுமையையும், போலித் தருக்கையும் ஒழித்து ஒற் றுமை உண்டாக்குவதாகும்.* இவ்வித மணமே நமது

* சமூகச் சீர்திருத்தக்காரர்களில் ஒருவராய திரு. எம். ஆர். ஜயகர் என்பார் ஆங்கிலேயர் ஒருவரிடத்து,

மூதாதையர்களால்—பண்டையோர்களால்—தமிழ் முது மக்களால்-கையாளப்பட்டு வந்தது. கலித்தொகை, அக நானூறு, இறையனு ரகப்பொருள், திருச்சிற்றம்பலக் கோவையார் முதலிய தொன்மைவாய்ந்த பெரும் நூல் களைப் பார்ப்பின் இவ்வுண்மை தெள்ளிதின் புலனும்.

இவ்வித கலப்பு மணத்தை—காதல் மணத்தை—அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டதே இச்சிறு நாடக நூலாகும். சாதி வேற்றுமையாலும், போலித் தருக்காலும் பல பிரிவுபட்ட மக்கள் கூட்டத்தை ஒன்று படுத்தலும், அவ்விதம் ஒன்று படுத்தற்கு ஏதுவாயிருக் கும் கலப்பு மணத்தை—காதல் மணத்தை—யாண்டும் பரப்புதலுமே இச் சிறு நூலின் முக்கிய நோக்கமாகும்.

ஆனல் வைதீக நெறியினெழுகும் பெரியோர்கள் சிலர், கலப்பு மணம் நன்மை பயப்பதொன்றன்று; பின்னர் அது பல பேரிடர்களை விளைக்கும். இப்போதி ருக்கும் சாதி வேற்றுமையெல்லாம் இருந்தே தீருதல் வேண்டும். மக்களிடையே ஒற்றுமை தானகவே யுண் டாகும். ஆண்டவன் திருவுள்ளத்தின் வண்ணமே இப் பிரிவுகளெல்லாம் இருக்கின்றன. இவற்றை யொழிக்க முயல்தல் அறிவுடைமை யாகாது என்று கூறிக் கலப்பு

இந்தியா சட்டசபையில் தாம் கலப்புமண மசோதாவைக் கொண்டுவரப் போவதாகவும், அவ்வாறு அம்மசோதா வைக் கொண்டுவர வேண்டுவதன் அவசியத்தையும் பற்றிக் கூறியபொழுது, அவ்வாங்கிலேயர், 'எங்களை யெல்லாம் இந்தியாவைவிட்டுத் துறத்தப்போகிறீர்களா?' என வினவினராம். இதன் கருத்தை அன்பர்கள் உய்த் துணர்தல் வேண்டும்.

மணத்தால் உண்டாகும் தீங்கினைக் காட்ட முயல்பவர், நெறி தவறியோர் கலப்பு மணம் என்னும் பெயரால் செய்யும் போலிமணத்தை எடுத்துக் காட்டுகின்றனர். அவர்கள் கூற்று அன்னார்வரை ஒப்பாகுமென்று கொள்ளுதலன்றி அதிகமொன்றும் அதுபற்றி நாம் கூறுதற்கில்லை. பெரும்பாலான மக்களுக்கு ஒப்பான இக்கலப்பு மணம் முதலிய ஒற்றுமை நிலவச் செய்தற்குரிய சீர்திருத்தங்கள் மேற் கூறப்பட்ட ஒரு சிலர்க்கு ஒப்பானதல்லை என்று கூறின், அது அறிஞர் பெருமக்களால் ஆராய்ச்சி செயற்பால தொன்றும். யாங்கள் ஒன்றுமட்டும் கூறுவோம். நாட்டுக்கு நலனுண்டாதற்கும், மக்களிடையே ஒற்றுமை யுண்டாதற்கும் ஏதுவாகவுள்ள பல சீர்திருத்தங்களுள் கலப்பு மணமுமொன்று என்று எண்ணி எங்கள் போன்றோர் அம்மணத்தைப் பரப்ப முயல்கின்றோம். மேற்கூறிய பெரியோர்கள் சொல்லும் வண்ணம், இக்கலப்பு மணம் தவறானது; தீங்கினைப் பயப்பது என்று எங்கள் மனதுக்குத் தோன்றுங்காலம்—அருள்வடிவான ஆண்டவன் அறிவுறுத்துங்காலம்—வரின் நாங்கள் அச்சமயம் அதனை நெகிழவிடுவோமன்றி, யாதோ ஒரு நலங்கருதி கூறுவோரின் உரைகளை ஒரு பொருளாகக் கொள்ளோம் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அது கிடக்க, எங்களுக்குச் சிறு பருவத்திருந்தே இவ்வித சீர்திருத்த உணர்ச்சி பெருகி வரலாயிற்று. நாட்டு நலன் ஒன்றையே கருதி அல்லும் பகலும் உழைக்கும் சீர்திருத்தப் பெரியோர்கள் சிலரின் கூட்டுறவு கிடைக்கப்பெற்று, அவர்களோடு இணங்கிய இணக்கத்

தின் பயனே அதற்குக் காரணமாகும். அதன் பின்னர். சாதி வேற்றுமையால் வரும் கேடுகளையும், கலப்பு மணத்தால் சாதி வேற்றுமையொழிந்து ஒற்றுமை நிலவி அதன் வாயிலாக வரும் நன்மைகளையும், ஒத்த பிறப்பினராய மக்களுள் தீண்டாதார்-ஒதுக்கப்பட்டார்—என்பார் எவரும் இலர் என்பதையும், அவ்வித கொடிய வேற்றுமையைத் தன்னலமிக்க பெரியார் சிலர் உண்டாக்கினர் என்பதையும் விளக்கிக் காட்டி ஒரு தனி நூல் இயற்றுதல் வேண்டுமென்னும் பேரவா எங்கள் மனத்துள் வேரூன்றி வரலாயிற்று. எனவே, யாங்கள் மூவருஞ் சேர்ந்து 'வசீகர மனோகரி அல்லது தீண்டாதார் யார்?' என்னும் இச்சிறு நாடக நூலைத் திருவருள் துணைகொண்டு எழுதி முடித்தோம்.

இனி, இச்சிறு நாடக நூலை யாங்கள் மூவரும் கருத்தொன்றுபட்டு எழுதியது போன்று, இனி எழுதவிருக்கும் பலவகைப்பட்ட நூல்களையும் இம்முறையிலேயே ஒருமித்த கருத்துடையராய் எழுத எண்ணியிருக்கிறோம். மூவர் ஒன்று சேர்ந்து நூல்கள் எழுதுவது யாங்கள் கொண்ட புதிய முறையன்று. மேனாடுகளில் பலர் ஒன்று சேர்ந்து பலவிதமான நூல்களையும், ஆராய்ச்சிகளையும் எழுதியும் செய்தும் வருகின்றனர். இத் தென் தமிழ் நாட்டிலும் ஓரோரிடங்களில் இவ்வித முறையில் நூல்கள் வெளிவருகின்றன. ஆதலின் யாங்கள் கொண்ட முறை அறிஞர் பெருமக்களால் ஏற்றுக் கொள்ளப் படுவனவே யாகும் என்னும் நம்பிக்கை யுடையோமா யிருக்கிறோம்.

"வசீகர மனோகரி அல்லது தீண்டாதார் யார்?" என்னும் பெயரிய இந்நாடக நூல், பொழுது போக்கிற்

கென வரையப்படும் கட்டுக்கதை யன்று; புனைந்துரையு மன்று. இது பெரும்பாலும் உலகநடையைத் தழுவி, மக்கள் தங்கள் வாழ்க்கையைச் செம்மையான வழியில் நடத்துதற்குக் கடைப்பிடிக்க வேண்டும் ஒழுகலாறுகளை —இயற்கையாக மக்களிடையே நடைபெறும் வாழ்க்கை நுட்பங்களை—யாங்கள் கண்டவளவில் ஒன்று திரட்டி யமைத்து எழுதப்பட்டதாகும். எனவே, இந்நூல் மக்கள் சமூகத்துக்குப் பெரும்பயன் தருமென்று எதிர் பார்க்கிறோம்.

இந்நாடகநூலுக்கு ஆங்கிலத்திலும், தீந்தமிழிலும் சிறப்புரைகளை நல்கிய அறிஞர் பெருமக்களுக்கு யாங் கள் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள் ளோம். வேண்டுவார் வேண்டுவதே ஈவானாகிய எல்லாம் வல்ல முழுமுதற் பெருமான், இச்சிறு நாடகநூல் வெளிவருதற்குத் துணை புரிந்ததுபோல், இனி முறையே யாங்கள் எழுதி வெளியிட விருக்கும் நூல்களையும் ஒன்றன்பின்னொன்றாக வெளிவரச் செய்து சிறியோங் களின் சிறுதொண்டைப் பொது மக்களுக்கு ஆட் படுத்தி யருள் செய்ய வேண்டுமென்று, அவனது இணை மலரடிகளை இறைஞ்சுகின்றோம்.

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்து
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே.

—மாணிக்கவாசகர்.

பிரமோதூத ஆண்டு
வைகாசித் திங்கள்

ஆசிரியர்கள்.

ஓம் சிவம்.

வசீகர மனோகரி

அல்லது

தீண்டாதார் யார்?

களம் I. இடம்:—மருதவனத்தின் பாங்கருள்ள ஆற்றோரம்.

அங்கம் 1. காலம்:—பிற்பகல்.

(வசீகரன் பிரவேசித்தல்.)

வசீகரன்:—(தனியாக) ஆ! இதுபோதே நான் சிறிது ஒய்வுபெற்றேன். என்னான்று எனக்கு நற்காலம் உண்டாகுமோ! ஈசா! எக்கால் என் அடிமைத்தன்மையை ஒழிப்பாயோ! இதோ ஆகாயத்தில் பறக்கும் பன்னிற சிறு பறவைகளுமல்லவோ சுயேச்சையாகக் காலங்கழிக்கின்றன; தத்தம் பேடைகளுடன் கூடிக்குலாவி மகிழ்கின்றன. அவைகள் மகிழ்வதோடு பார்க்கும் பிறரையுங் களிக்கச் செய்கின்றன. நீல நிறம் வாய்ந்த குயில்களும், அதனோடு பொன்னிறமுங் கலந்து அழகுத்திர

ளாய் விளங்கும் மயில்களும், மணிமாடப்புறுக்களும், இன்னும் பலநிறப் பறவைகளும் என்ன காட்சி வழங்கு கின்றன. இம்மரங்களைப் பார்! தன்னையொப்பாரும் மிக்காருமில்லை யென்று தருக்குற்று இருக்கும் சில மக்களைப்போல் தலைநிமிர்ந்து ஆடுகின்றன! பல கோடும் கவடுகளும் விட்டுப் பசிய இலைகளைத்தாங்கி விளங்கும் இப்பரிய மரங்களின் காட்சிதான் என்னே! இப்பசிய கொடிகளுமன்றோ இப்பரு மரங்களுடன் போட்டி போட்டுக்கொண்டு அவைகளின்மேல் படர்ந்து, அவைக ளினும் தாங்கள் உயர்ந்து நிற்றலைக்காட்டி, இம்மரங்களி னும் தாங்கள் தாழ்ந்தனவல்லவென்று சொல்லிச் சில கோபமுறுவனபோல் சிவந்த பூக்களைக் காட்டியும், சில சிரிப்பனபோல் வெள்ளைப்பூக்களைப் பூத்தும் நிற்கின் றன! நாற்கால் விலங்குகளாய மிருகங்கள்—அவைக ளும் தங்கள் இச்சையின்வண்ணம் இக்காட்டில் திரி கின்றன! அப்புலியைப்பார்! எவ்வளவு தருக்கோடு செல் கின்றது! யானை மரங்களையெல்லாம் வீசியடித்துக் கொண்டு கம்பீரமாய் நடக்கின்றது. மான்கூட்டம் துள்ளி விளையாடித் துன்பமின்றி யிருக்கின்றன! இவ் வாற்றிலுள்ள மீன் முதலியவற்றைக் காண்போம். வெள்ளித்துண்டங்கள் போன்று தண்ணீரில் மின்னி யொளிரும் மீன்களின் வாழ்வுதான் என்ன! இவ்வாறு ஊர்வன, பறப்பன, நடப்பன, திரிவனவாகிய உயிர்க ளெல்லாம் தன்னிச்சையாய் தன் மனைவி மக்களோடு யாதொரு தாழ்வுமின்றி வாழ—ஆ! (பெருமூச்செறி கின்றான்) இப்பாழும் மனிதருள் எத்துணை கட்டுப்பாடு! உயர்வு தாழ்வு என்ன! மனிதனாய்ப் பிறந்தவன் சுயேச் சையாய் வாழ முடிகின்றதா! ஒருநாளேனும் முழு

இன்பமனுபவிக்கலாகின்றதா! ஒருவரை யொருவர் அடக்கியாள வேண்டுமென்னும் எண்ணம் இம்மனிதக் கூட்டத்துள் இருக்கும்வரையும் இன்பமேது! சுதந்தர மேது! சுகவாழ்வேது! உயர்ந்த சாதியில் பிறந்த ஒருவ னுக்குத் தாழ்ந்த சாதியில் பிறந்த ஒருவன் கட்டுப்பட வேண்டுமாம். அதிலும் இந்த இந்து சமூகத்தில் தான் இவ்விதக் கொடுமையெல்லாம்!—எனக்குத் தாய் தந்தை யர் யார் என்பது தெரியாது. என்னை வளர்த்துவருப வள் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவள். அதனல் நானும் தீண்டப்படாதவனும். பிறருக்கு அடிமைப்பட வேண்டுமாம். யான் உயர்தர (பி. ஏ.) பட்டமும் கட வுள் திருவருளால் பெற்றுவிட்டேன். எனினும் எனக்கு உத்தியோகமேது! நடுவே சாதி வேற்றுமை யிருக்கிறதன்றே! ஆ! என்னுடைய காதலி—உயிரினு மினிய பெண்ணரசி—என் இன்ப உறையுள்—அவளு மன்றே—என் சாதியைக் கேட்ட நாள்முதல் ஒருவா ருக நடந்துகொள்ளுகின்ருள். சாதிக்கட்டுப்பாட்டி ஞல் எத்தனைபேர் உண்மைக் காதலையிழந்து துன்புறுப வர்கள்! அவர்களுக்கு வாணுளெல்லாம் சாணுளாகவல் லவோ முடிகின்றது. மனேகரி—என் உயிர் மனேகரி என்னை மறப்பளா! அவ்வாறு மறப்பளாயின்—சாதிக் கட்டுப்பாட்டினல் வேறு ஒருவனுக்கு மனைவியாவளா யின்—என் நிலை என்னும்! பாழ் நரகமன்றே! அன்றே யிழந்தேன் என் ஆருயிரை! அப்புறம் இன்பவாழ்வேது! இவ்வுலகேது! எல்லாம் வெறும்பாழ்! அவ்வாறு செய் யாள்! என் அருங்கண்மணியனையாள்! பழைமையை மறப்பளோ! உறுதியைத் துறப்பளோ! என்னைப் புறக் கணிப்பளோ!........................

(திடீரென மனோகரி பிரவேசித்து.)

மனோகரி:—என்ன சொன்னீர் காதலா! உம்மையு மறப்பனோ! உறுதியைத் துறப்பனோ! நன்று நன்று! ஏனோ இவ்வாறு ஐயுறுகின்றீர்! எக்காலும் உம்மை மறவேன். கனவினும் பிறரை நினையேன்! இவ்வுலகமே பரிசாய்க் கிடைப்பினும். ஈதுறுதியென நினைவீர் நாதா!

வசீகரன்:—கண்மணி! கவலையுறற்க. யான் ஏதோ நினைந்தேன். நம் சமூக நிலையை யாராயுங்கால் நம் உறுதி எவ்வாறுமென யோசித்தேனேயன்றி உன்னிடம் ஐயமொன்றுமில்லை!—நீ எவ்வாறு வந்தாய்? நான் இங்கிருப்பது உனக்கு எவ்வாறு தெரியும்? உன்னை உன் தாய் தேடாளா!

மனோகரி:—என் தாய்க்கு வேண்டியன சொல்லி வந்தேன்; ஆதலின் அவள் என்னைத் தேடாள். உம் முகம் ஏன் ஒருவாறு வாட்டமுற்றிருக்கின்றது? காரணமென்னவென யான் அறியலாகாதா! (என்று அவள் வசீகரனின் செந்தாமரையன்ன முகத்தைத் தன் இரு கைகளால் தடவினள்.)

வசீகரன்:—ஒன்றுமில்லை. மனோகரி! என் முகம் வாட்டமுற்று இருக்கிறது? உனக்கு அவ்வாறு தோன்றுகிறதோ! அது கிடக்கின்றது! வா இப்பசிய புற்றரைமேல் உட்காரலாம்.

மனோகரி:—நாதா! இப்பறவைகளுமன்றோ தன் இனத்தோடு கூடி மகிழ்கின்றன! அக்குயிலைப் பாருங்கள். தன் பேட்டினுக்கு இரை கொணர்ந்து அதன் வாயில் ஊட்டுகின்றது! நமக்கு நன்னாள் வரும் நாள்

என்நாளோ! (என்று கண்ணீர் ததும்ப ஆர்வமேலீட்டினால் வசீகரனைத் தழுவி அவன் முகத்தோடு தன் முகத்தைப் பொருத்தல்.)

(இச்சமயம் வெங்கடேச பத்தர் பிரவேசித்தல்.)

வெங்கடேச பத்தர்:—(மனோகரியும் வசீகரனும் ஒருவரையொருவர் தழுவி நிற்றலைக் கண்ணுற்றதும் திடுக்கிட்டு) யாரது! மனோகரியா! நம் குஞ்சிதபாதமய்யரின் மகள் மனோகரியா! அவளா ஆதிதிராவிடனான வசீகரனைத் தழுவி நிற்கின்றாள்! அவன் நம் ஊர்ப்புறத்துள்ள சேரியில் வசிக்கும் ஆதிதிராவிடப் பெண்ணால் வளர்க்கப்படுபவனன்றோ! யான் காண்பது கனவா! உண்மைதானோ! (தன் இருகைகளாலும் கண்களைப் பிசைந்துக்கொண்டு பார்த்தல்.) உண்மைதான். என் கண்ணும் பொய்க்கவில்லையே! என்ன அநியாயம். ஒரு பார்ப்பனப்பெண் தீண்டப்படாதானாகிய ஆதிதிராவிடப் பையலோடு ஒன்று சேர்ந்திருப்பதா! நன்று நன்று! இவர்களின் கலாசாலை சிநேகம் இவ்வாறு காதலாக முதிர்ந்ததுபோலும்? நல்லவேளையாக நாம் இன்று இக்காட்சியைப் பார்க்க நேர்ந்ததே! நமக்கு நல்லகாலமே! பணவருவாய்க்கு இது ஒரு ஏதுவாகவே யிருக்கிறது. வருவது தானே வரும். நான் அவர்களிடஞ்சென்று அவர்களைப் பயமுறுத்திப் பார்க்கிறேன். (என்று அவர்கள் பின்புறமிருந்து எதிரேபோய் நிற்கின்றார்.)

(பத்தரைக் கண்டதும் காதலரிருவரும் துணுக்குற்று ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து நிற்றல்.)

பத்தர்:—வசீகரா! மனோகரி! நன்றாயிருக்கிறது உங்கள் செய்கை! பிள்ளைகளிருந்தால் இவ்வாறல்லவோ

இருக்கவேண்டும். என்ன வேலே செய்கிறீர்கள். எங்கே யாகிலும் இவ்வித அக்கிரமம் நடக்குமோ! இதுதான் (Western Civilisation) தற்கால நவீன நாகரீகமோ! மிக உயர்ந்த ஒரு பார்ப்பனக் குலத்துதித்த பெண், எல்லாரினும் தாழ்ந்த ஆதிதிராவிடனுடன் சிநேகங் கொண்டு தன் தாய் தந்தையர்க்குத் தெரியாது இங்கு வந்து சரச சல்லாபஞ் செய்து மகிழ்கிறது—ஐயோ—எங்கு நடக்கும். அநியாயம்—அநியாயம். குடி முழுகிப் போய் விட்டதே. கடவுள் பொறுப்பானோ! ஆ! இவ்வாறு ஒரு குலத்துக்கும் சமூகத்துக்கும் அடாப்பழியை வருவிக்கும் நெறியினீங்கிய செயலேச் செய்யும் உங்களே லேசில் விடுகிறேனு; பார்! எல்லாரையும் கொண்டுவந்து உங்களேச் சித்திரவதை செய்யச் சொல்லுகிறேன். உங்கள் களியாட்ட மெல்லாம் எவ்வாறு ஆகிறது. உம். விடேன்; விடேன். (என்று கர்ச்சனே செய்தார்.)

(இதைக் கேட்டதும் வசீகரனும் மனோகரியும் முன்னிலும் அதிகமாகப் பயந்து விதிர்விதிர்த்துப் பத்தரை நோக்கிக் கெஞ்சும் பாவனேயாக நின்றார்கள்.)

பத்தர் :—என்ன விழிக்கிறீர்கள்! நம் கள்ள நட்பு வெளியாய் விட்டதே என்று நினேக்கிறீர்களா! நீங்கள் என்ன ஆந்தைபோல் விழித்தாலும் விடமாட்டேன்.

வசீகரன் :—பத்தரே! தயவுசெய்து கோபியாதேயும். நாங்கள் ஒரு கலாசாலே மாணவர்களாதலால் பேசிக்கொண்டிருந்தோம். நீர் ஏதோ தப்பபிப்பிராயம் கொண்டு கண்டவாறு பேசுகிறீரே! இது தகுமா!

பத்தர்:—நன்று நன்று! என்னடா! முழுபூசணைக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிருய்! நான் நேரில் கண்டேன். நீங்கள்........................... கண்டதை ஒரே அடியாக இல்லையென்கிருயே! இப்படிப்பட்ட பொய்யனுகிய நீ எதைச் செய்யத்தான் துணியமாட்டாய்! காதகா!

மனோகரி:—(இதுகாறும் பதுமைபோல் வாளாவிருந்தவள் துணிந்து) போதுமய்யா! அதிகம் பேசாதேயும். நாக்கை உள்ளிழுத்துப் பேசும். என்னமோ பிரமாதமாக அளக்கிறீரே! பெரியவராயிற்றே என்று பேசாமலிருந்தால் அதிகமோடுகிறீர்! நாங்களெவ்வாறிருந்தால் வழியே போகும் உமக்கென்ன! எல்லாரிடமும் போய்ப் பிதற்றப் போகிறீரா! பிதற்றும். அதற்கொன்றும் அஞ்சப்போவதில்லை.

பத்தர்:—(தன் சாகசம் இனி செல்லாதென்று மெதுவாக) இல்லையம்மா! கோபித்துக் கொள்ளாதே! நீங்கள் இவ்வாறிருப்பதை யாராகிலும் பார்த்தால் ஊரெல்லாம் தூற்றி விடுவார்களேயென்று சொன்னேன். நான் பார்த்தது ஒருவாறு நல்லதாயிற்று. ஏனெனில் நான் யாரிடமும் சொல்லேன். ஏதோ பிள்ளைகள் வாலிபமல்லவா! இவ்வாறுதான் இருப்பார்களென்று எண்ணிப் பேசாமலிருப்பேன். ஊர்வாயை மூட முடியுமா! அதனுல் தான் உங்களுக்கு எச்சரிக்கை செய்தேன். வேறொன்றுமில்லை அம்மா.

மனோகரி:—(பத்தரின் உள்ளக் கருத்தையறிந்து) நல்லது ஐயா! உமது கருணைக்கு மிக வந்தனம். (தன் கழுத்திலிருந்த பொன் சங்கிலியைக் கழற்றி யெடுத்து)

இந்தாரும். இதைப் பெற்றுக் கொள்ளும். நீர் இவ்வளவு பெருந்தன்மை வாய்ந்தவராயிருந்தால் இச் செய்தியை—இங்கு நடந்ததை—யாரிடமும் சொல்லா தீர்! அவ்வாறு சொல்லுவீரென்று நான் நினைக்கவில்லை.

பத்தர் :—(மனோகரி கொடுத்த பொன் சங்கிலியை வேண்டா வெறுப்பாக வாங்குவதுபோல் அபிநயித்து வாங்கிக்கொண்டு) நான் யாரிடமும் சொல்லேனம்மா; மனோகரி! என் வார்த்தையை உறுதியாக நினை. நான் அப்பேர்ப்பட்டவனல்ல. வசீகரா! பயப்படாதே! யௌவனம் வாய்ந்த உங்கள் சிநேகத்திற்குப் பங்கஞ்செய்யேன். நீங்கள் சந்தோஷமாக இருங்கள். மற்றவர் கண்களில் படாதீர்கள். அது தான் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது. போய்வருகிறேன். மனோகரி! வசீகரா!

(என்று மெதுவாக அவர்களை விட்டுப்போதல்)

வசீகரன்:—(இதுகாறும் மனோகரியின் சமயத் துக்குத் தக்க பேச்சையும் செயலையும் கண்டு இறும்பூ தெய்தி) மனோகரி! உன் வல்லமையே வல்லமை. உன் அறிவின் மாண்புதான் என்னே! உன்னை—அருமணி யாகிய உன்னை—அடைந்த எனக்கு இனி ஒரு குறை யுளதோ! வா போகலாம்.

(இருவரும் செல்லுதல்.)

களம் 1. இடம்:—அக்கிராஹாரம்.

அங்கம் 2. காலம்:— முற்பகல்.

(சுப்பண்ண சாஸ்திரியும், அவர் மகனுன சந்தான கிருஷ்ணனும் தங்கள் வீட்டு வாயில் திண்ணை யில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருத்தல்.)

சுப்பண்ண சாஸ்திரி:—சந்தானம்! நேற்றைய இரவு எங்கு சென்றிருந்தாய்? உனக்காக நான் எவ்வளவு நேரம் சாப்பிடாமல் காத்திருந்தேன் தெரியுமா. வயோதிக காலத்தில் என்னை இவ்வாறு வருத்தலாமா. அடிக்கடி என்னை விட்டுப் போகலாமா. இன்னும் சிறு பிள்ளையாகவே இருக்கிறுய் அப்பா. நான் இருக்கும் வரைதான் இதெல்லாம். அப்புறம் யார் உன்னை என்ன கேட்கப்போகிறுர்கள். என்னையோ காடு வாவா என்று கூப்பிடுகிறது. வீடுபோபோ என்கிறது. நான் இருக்கும் வரையும் இவ்வாறெல்லாம் செய்யாதே யப்பா. அது போகட்டும். நான் சொன்னேனே! அதை—என்ன யோசித்தாயா! உனக்குச் சம்மதிதானு!

சந்தானம்:—இல்லையப்பா! நேற்று நம் அகத்துக்குச் சுந்தரேசன் வந்தானே; அவன் சர்க்கஸ் ஆட்டம் பார்க்கவேண்டுமென்று சொல்லி அழைத்துக்கொண்டு போனுன். அவனேடு போனேன். நான் இதுவரையும் தங்களோடு சொல்லாது எங்கேனும் போனதுண்டா! நான் இனி இம்மாதிரி போகமாட்டேன் அப்பா!

சுப்:—சரிதான்; அது கிடக்கட்டும். நீ அவ்வாறு செய்யா யென்று எனக்குத் தெரியும். என்ன அந்த செய்தியைப் பேசாமல் நழுவ விட்டுவிட்டாயே!

சங்:—ஆ! அதுவா! அதைப்பற்றி என்னை ஏனப்பா கேட்கிறீர்கள். தங்கள் விருப்பப்படி செய்கிறது தானே! நான் என்ன மறுக்கவா போகிறேன்.

சுப்:—உன்னைக் கேட்காமலாகிறதா! நீதானே இன்பதுன்பத்தை யனுபவிக்கப் போகிறவன். உன் விருப்பத்தைக் கேட்காது மற்றென் செய்கிறது. இளம் பிள்ளைகள் பேசுவது போலவே பேசுகிறாய்.

சங்:—பெரியவர்களாகிய தங்களுக்குத் தெரியாததா எனக்குத் தெரியப்போகிறது. அதற்கென்று செய்கிறவர்கள் எனக்கு நன்மையானவற்றைத் தானே செய்வீர்கள். அப்படியிருக்க, என் விருப்பத்தை யென்ன கேட்கிறது!

சுப்:—இல்லையப்பா! உலகவழக்கு உனக்குத் தெரியாது. ஒன்றைச்செய்து கொள்பவனுக்குத்தானே அதனுடைய நன்மைதீமையெல்லாம் தெரியும்.—அதிலும் இக்காரியம் சாதாரணமானதா! வாழ்க்கை நன்றாய் நடக்கிறதோ தீதாய் முடிகிறதோ எல்லாம் அதில் தானே இருக்கிறது. ஏதோ நாங்கள் பார்த்தவரையில் எல்லாம் பொருத்தமாகவேயிருக்கிறது. உன்னுடைய அனுமதிதான் வேண்டும். பார்! குஞ்சிதபாதம் என்னுடைய இளம் பருவ நண்பன்: அட்வகேட் பட்டம் பெற்றவன். அவனுக்கு மனோகரி ஒரேயொரு பெண். அவளும் பி. ஏ. வாசித்திருக்கிறாள். நல்ல அழகு.

லக்ஷ்மியேயென்று சொல்லவேண்டும். சங்கீதத்திலும் தேர்ச்சிபெற்றவள். இனிமையான குரல். நற்குண நற்செய்கை வாய்ந்தவள். தாயில்லை. இப்போதிருப் பவள் மாற்றாந்தாய். அவளுக்கு வயதாய்விட்டது. இனிமேல் இவர்களுக்குப் பிள்ளை பிறக்கிறது என்பது என்ன நிச்சயம். ஆதலால் அவனுடைய பொருளுக் கும் நீயே உரியவனவாய். அவனுக்குப்பின் வீட்டுக்கு நீயே தலைவன். இதைவிட இன்னும் என்னவேண்டும்.

(வெங்கடேச பத்தர் தோன்றுதல்.)

பத்:—என்ன ஐயரவாள். மகனுக்கு ஏதோ உப தேசம் செய்கிறீர்கள். அவன் என்ன கேட்கிறான். என்ன வேண்டும் என்று கேட்கிறீரே. நமக்குத் தெரியலாகாதா!

சுப்:—ஒன்று மில்லை பத்தரே! நம் பையனுக்கு விவாகம் செய்ய எண்ணியிருக்கிறோம். அதற்காக அவ னுடைய விருப்பத்தைக் கேட்கிறேன்.

பத்:—ஓஅப்படியா! நல்ல செய்தி! மங்கள முண் டாகுக! ஆமாம். அவன் என்ன சொல்லுகிறான்?

சுப்:—ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறான். நீராகிலும் அவனைக் கேட்டுப் பாருமே.

பத்:—ஆமாம். அவனுக்குப் பெண் எங்கு முடிவு பண்ணியிருக்கிறீர்கள்? வரதக்ஷிணை அதிகம் கொடுப் பார்களா?

சுப்:—உனக்குத் தெரியாததா! நம் குஞ்சிதபாதம் இருக்கிறானே! அவன் ஒரே மகள்...............

பத்:—யார்! எந்த குஞ்சிதபாதம். அட்வகேட்டா! அவருடைய பெண்ணு! (முகத்தை ஒருவாறு சுளித்துக்கொள்ளல்.)

சுப்:—என்ன பத்தரே! அவ்வளவு ஆச்சரியமாகக் கேட்கிறீர்! முகமும் ஒருவாறு மாறிவிட்டதே!

பத்:—(தம் முகவேறுபாட்டை மாற்றிக்கொள்வதற்குச் சிரிப்பை வருவித்து) ஒன்றுமில்லை; ஏதோ நினைத்தேன்; கேட்டேன்.

சுப்:—ஆமாம். அவர்கள் சம்பந்தம் எங்களுக்குப் பொருந்தாதென்று நினைக்கிறீரா! அவன் அட்வகேட். நான் வெறும் சாஸ்திரி என்பதா! என்னய்யா உம் அபிப்பிராயம்? சொல்லுமே. அவள் பி. ஏ. பட்டம் பெற்றிருக்கிறாள். என் மகனும் ஸ்கூல் பைனல் (School Final) வாசித்தில்லையா! என்ன நினைக்கிறீர்?

பத்:—அதெல்லாம் நான் நினைக்கவில்லை சுவாமிகளே! அது கிடக்கட்டும். எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. தயவு செய்து அதைத் தீர்ப்பீரோ! உங்கள் வேதத்தில்—அதாவது சாஸ்திர நீதிகளில்—நாற்பால் குலத்திற்கும் வருணாசிரம தருமம் சொல்லியிருக்கிறதல்லவா?

சுப்:—ஆமாம்.

பத்:—அதில் பிராமணர்களாகிய நீங்கள்—உங்களிலொருவன் மற்ற—அதாவது க்ஷத்திரிய—வைசிய—சூத்திர சாதிகளிலுள்ள பெண்ணொருத்தியைக் கண்டு விருப்பமுற்றான். அவளை அவன் கலியாணஞ் செய்துக்

கொள்ளலாமா? அல்லது காமக்கிழத்தியாக வைத்துக் கொள்ளலாமா?

சுப்:—நாங்கள்—அதாவது பிராமணர்கள்—எந்த சாதியிலுள்ள பெண்களை விரும்பினாலும் அவர்களைச் சேரலாம். க்ஷத்திரிய வைசிய பெண்களாயிருந்தால் கலியாணம்கூட செய்துக்கொள்ளலாம். அவசியமானால் சூத்திரப்பெண்களைக்கூட......................வேதத்தில் சொல்லியிருக்கிறது. மநு நீதியிலும் சொல்லியிருக்கிறது. பிராமணன் விரும்பினால் மற்ற சாதியார்கள் தடுக்கப்படாது. அவன் விருப்பப்படி செய்யவேண்டும். மறுத்தால் பாவம் வந்துசேரும். ஆனால் நாங்கள் அனேகமாக மற்றச் சாதிப் பெண்களை விவாகம் செய்து கொள்வதில்லை. காமக்கிழத்திகளாகத்தான் வைத்துக் கொள்வது. (சிரிக்கிறார்.)

பத்:—ஆமாம். பிராமணப்பெண்களை மற்றச் சாதியிலுள்ளவர்கள் கண்டு ஆசைப்பட்டார்கள். அப்போது அவர்கள் அப்பெண்களை மணஞ்செய்துக் கொள்ளலாமா? அல்லது காமக்கிழத்திகளாக வைத்துக் கொள்ளலாமா?

சுப்:—அப்படி எங்கள் பெண்களைக்கண்டு ஆசைப் பட எந்த சாதியார்க்கும் உரிமை இல்லை. அவ்வாறு ஆசைப்படலுமாகாது. தவறி அவ்வாறு எவராகிலும் விருப்பப்பட்டால் அவர்கள் கண்களை அகழ்ந்தெடுக்கப் படுவார்கள். மற்றும் பல தண்டனைகளை அரசரைக் கொண்டு செய்விப்போம். க்ஷத்திரியராக இருந்தால் மாத்திரம் அவர்கள் விருப்பப்பட்ட எங்கள் பெண்களைக்

கலியாணஞ்செய்துக் கொள்ளலாம். காமக்கிழத்திகளாகவும் வைத்துக்கொள்ளலாம்.

பத்:—ஏனெனில் அவர்கள் அரசர்களாயிற்றே! அதனால் போலும்? நல்ல நீதி! நீங்கள் மற்றச் சாதிப் பெண்களை எவ்வாறாயினும் விருப்பப்படி செய்யலாம். மற்ற சாதியார் உங்கள் பெண்களைக்கண்டு ஆசைப்படலாகாது! சரி இருக்கட்டும். நான்குச் சாதிகளுக்கும் கீழான பறையன்—அதாவது தீண்டப்படாதான் ஒருவன் உங்கள் பெண்களிலொருத்தியைக் கண்டு ஆசைப்பட்டான்? கலியாணஞ்செய்துக் கொள்ளவோ அல்லது காமக்கிழத்தியாகவோ வைத்துக்கொள்ள விரும்பினான்? அப்போது!....................

சுப்:—என்ன அய்யா! நான் தான் சொல்லுகிறேனே! மூன்று பகுதியாருக்குமே செய்யலாகாது! தண்டனையென்று சொன்னால்? மேலுமேலும் கேட்கிறீரே! அவனுக்குத் தூக்குமரந்தான் கதி.

பத்:—கோபியாதீர்! தெரியாமல் கேட்டேன். இக்காலத்துக்குத் தக்கபடி உங்கள் மநுதருமம் மாறியிருக்கிறதோ என்னமோவென்று பார்த்தேன். இப்போது தான்—ஆங்கிலேயர் அரசாட்சிசெய்யும் இக்காலத்தில் தான்—சாதிபேதம்வேண்டாம் மதம்வேண்டாம் என்று சீர்திருத்தக்காரர்கள் (Reformers) சமூக சீர்திருத்தம் செய்கிறார்களே! ஆதி திராவிடன் பெண்ணைப் பார்ப்பனனும், பார்ப்பனன் பெண்ணை ஆதி திராவிடனும், பார்ப்பனன் பெண்ணை இஸ்லாமானவனும், செட்டிமார் பெண்ணைப் பிள்ளைமாரும், நாயுடு பெண்ணைச் செட்டியும் இவ்வாறு கலப்பு விவாகம்செய்துக் கொள்ளுகிறார்

களே!—அதனுல் ஒருவேளை உங்கள் வேதமும் சாஸ்திரமும் நீதியும் மாறிவிட்டதோவென்று கேட்டேன்.

சுப்:—வேதமும் நீதியும் ஒன்றும் மாறவில்லை. மறுக்காலத்தில் எப்படியிருந்ததோ அப்படியே இப்போது மிருக்கிறது.

பத்:—கடைசியாக ஒரு கேள்வி. இதற்குத் தாங்கள் கோபியாமல் விடைசொல்லவேண்டும். ஒரு பிராமணப்பெண். நானே பிராமணனென்று வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு ஒரு பெண்ணிருக்கிருள். அப்பெண் ஒரு தீண்டப்படாதானைக் காதலித்து அவனேடு கள்ள நட்புக்கொண்டிருக்கிருள். அது அறியாத மற்ருெரு பிராமணர் தன்மகனுக்கு என்பெண்ணை வதுவைசெய்ய கேட்கிருர். என் செய்வது? என் பெண்ணின் மனத்தை மாற்றும் மந்திரம் ஏதேனும் இருக்கிறதா! அவள் தீண்டப்படாதானேடு களவொழுக்கம் நிகழ்த்தியிருந்தாளே! அதற்குப் பிராயச்சித்தம் உண்டா? பிராயச்சித்தஞ்செய்து பிராமண மகனுக்கு மணஞ்செய்து தரலாமா!

சுப்:—(கோபங்கொண்டு) என்ன அய்யா! ஏதேதோ உளறுகிறீர்! நீர் பேசுவதன் கருத்து இன்னதென விளங்கவில்லையே?

சங்:—(பத்தரைத் தன் கண்ணை விழித்து எரித்து விடுபவன்போல் வெகுண்டெழுந்து) என்ன சொன்னுய்! குஞ்சிதபாதமய்யரின்மகள் அவ்வாறு இருக்கிருளென்று சொல்லுகிருயா? அதனை நீ உறுதிபடுத்தமுடியுமா?

கென வரையப்படும் கட்டுக்கதை யன்று; புனைந்துரையு மன்று. இது பெரும்பாலும் உலகநடையைத் தழுவி, மக்கள் தங்கள் வாழ்க்கையைச் செம்மையான வழியில் நடத்துதற்குக் கடைப்பிடிக்க வேண்டும் ஒழுகலாறுகளை —இயற்கையாக மக்களிடையே நடைபெறும் வாழ்க்கை நுட்பங்களை—யாங்கள் கண்டவளவில் ஒன்று திரட்டி யமைத்து எழுதப்பட்டதாகும். எனவே, இந்நூல் மக்கள் சமூகத்துக்குப் பெரும்பயன் தருமென்று எதிர் பார்க்கிறோம்.

இந்நாடகநூலுக்கு ஆங்கிலத்திலும், தீந்தமிழிலும் சிறப்புரைகளை நல்கிய அறிஞர் பெருமக்களுக்கு யாங்கள் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். வேண்டுவார் வேண்டுவதே ஈவானாகிய எல்லாம் வல்ல முழுமுதற் பெருமான், இச்சிறு நாடகநூல் வெளிவருதற்குத் துணை புரிந்ததுபோல், இனி முறையே யாங்கள் எழுதி வெளியிட விருக்கும் நூல்களையும் ஒன்றன்பின்னொன்றாக வெளிவரச் செய்து சிறியோங்களின் சிறுதொண்டைப் பொது மக்களுக்கு ஆட்படுத்தி யருள் செய்ய வேண்டுமென்று, அவனது இணை மலரடிகளை இறைஞ்சுகின்றோம்.

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்து
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே.

—மாணிக்கவாசகர்.

பிரமோதூத ஆண்டு
வைகாசித் திங்கள்

ஆசிரியர்கள்.

ஓம் சிவம்.

வசீகர மனோகரி

அல்லது

தீண்டாதார் யார்?

களம் I. இடம்:—மருதவனத்தின் பாங்கருள்ள ஆற்றோரம்.

அங்கம் 1. காலம்:—பிற்பகல்.

(வசீகரன் பிரவேசித்தல்.)

வசீகரன்:—(தனியாக) ஆ! இதுபோதே நான் சிறிது ஒய்வுபெற்றேன். என்ஞான்று எனக்கு நற்காலம் உண்டாகுமோ! ஈசா! எக்கால் என் அடிமைத்தன்மையை ஒழிப்பாயோ! இதோ ஆகாயத்தில் பறக்கும் பன்னிற சிறு பறவைகளுமல்லவோ சுயேச்சையாகக் காலங்கழிக்கின்றன; தத்தம் பேடைகளுடன் கூடிக்குலாவி மகிழ்கின்றன. அவைகள் மகிழ்வதோடு பார்க்கும் பிறரையுங் களிக்கச் செய்கின்றன. நீல நிறம் வாய்ந்த குயில்களும், அதனோடு பொன்னிறமுங் கலந்து அழகுத்திர

ளாய் விளங்கும் மயில்களும், மணிமாடப்புறாக்களும், இன்னும் பலநிறப் பறவைகளும் என்ன காட்சி வழங்குகின்றன. இம்மரங்களைப் பார்! தன்னையொப்பாரும் மிக்காருமில்லை யென்று தருக்குற்று இருக்கும் சில மக்களைப்போல் தலைநிமிர்ந்து ஆடுகின்றன! பல கோடும் கவடுகளும் விட்டுப் பசிய இலைகளைத்தாங்கி விளங்கும் இப்பரிய மரங்களின் காட்சிதான் என்னே! இப்பசிய கொடிகளுமன்றோ இப்பரு மரங்களுடன் போட்டி போட்டுக்கொண்டு அவைகளின்மேல் படர்ந்து, அவைகளினும் தாங்கள் உயர்ந்து நிற்றலைக்காட்டி, இம்மரங்களினும் தாங்கள் தாழ்ந்தனவல்லவென்று சொல்லிச் சில கோபமுறுவனபோல் சிவந்த பூக்களைக் காட்டியும், சில சிரிப்பனபோல் வெள்ளைப்பூக்களைப் பூத்தும் நிற்கின்றன! நாற்கால் விலங்குகளாய மிருகங்கள்—அவைகளும் தங்கள் இச்சையின்வண்ணம் இக்காட்டில் திரிகின்றன! அப்புலியைப்பார்! எவ்வளவு தருக்கோடு செல்கின்றது! யானை மரங்களையெல்லாம் வீசியடித்துக் கொண்டு கம்பீரமாய் நடக்கின்றது. மான்கூட்டம் துள்ளி விளையாடித் துன்பமின்றி யிருக்கின்றன! இவ்வாற்றிலுள்ள மீன் முதலியவற்றைக் காண்போம். வெள்ளித்துண்டங்கள் போன்று தண்ணீரில் மின்னியொளிரும் மீன்களின் வாழ்வுதான் என்ன! இவ்வாறு ஊர்வன, பறப்பன, நடப்பன, திரிவனவாகிய உயிர்களெல்லாம் தன்னிச்சையாய் தன் மனைவி மக்களோடு யாதொரு தாழ்வுமின்றி வாழ—ஆ! (பெருமூச்செறிகின்றான்) இப்பாழும் மனிதருள் எத்துணை கட்டுப்பாடு! உயர்வு தாழ்வு என்ன! மனிதனாய்ப் பிறந்தவன் சுயேச்சையாய் வாழ முடிகின்றதா! ஒருநாளேனும் முழு

இன்பமனுபவிக்கலாகின்றதா! ஒருவரை யொருவர் அடக்கியாள வேண்டுமென்னும் எண்ணம் இம்மனிதக் கூட்டத்துள் இருக்கும்வரையும் இன்பமேது! சுதந்தர மேது! சுகவாழ்வேது! உயர்ந்த சாதியில் பிறந்த ஒருவ னுக்குத் தாழ்ந்த சாதியில் பிறந்த ஒருவன் கட்டுப்பட வேண்டுமாம். அதிலும் இந்த இந்து சமூகத்தில் தான் இவ்விதக் கொடுமையெல்லாம்!—எனக்குத் தாய் தந்தை யர் யார் என்பது தெரியாது. என்னை வளர்த்துவருப வள் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவள். அதனால் நானும் தீண்டப்படாதவனும். பிறருக்கு அடிமைப்பட வேண்டுமாம். யான் உயர்தர (பி. ஏ.) பட்டமும் கட வுள் திருவருளால் பெற்றுவிட்டேன். எனினும் எனக்கு உத்தியோகமேது! நடுவே சாதி வேற்றுமை யிருக்கிறதன்றோ! ஆ! என்னுடைய காதலி—உயிரினு மினிய பெண்ணரசி—என் இன்ப உறையுள்—அவளு மன்றோ—என் சாதியைக் கேட்ட நாள்முதல் ஒருவா ருக நடந்துகொள்ளுகின்றாள். சாதிக்கட்டுப்பாட்டி னால் எத்தனைபேர் உண்மைக் காதலையிழந்து துன்புறுப வர்கள்! அவர்களுக்கு வாணாளெல்லாம் சாணாளாகவல் லவோ முடிகின்றது. மனோகரி—என் உயிர் மனோகரி என்னை மறப்பளா! அவ்வாறு மறப்பளாயின்—சாதிக் கட்டுப்பாட்டினால் வேறு ஒருவனுக்கு மனைவியாவளா யின்—என் நிலை என்னும்! பாழ் நரகமன்றோ! அன்றே யிழந்தேன் என் ஆருயிரை! அப்புறம் இன்பவாழ்வேது! இவ்வுலகேது! எல்லாம் வெறும்பாழ்! அவ்வாறு செய் யாள்! என் அருங்கண்மணியனையாள்! பழைமையை மறப்பளோ! உறுதியைத் துறப்பளோ! என்னைப் புறக் கணிப்பளோ!...........................

(திடீரென மனோகரி பிரவேசித்து.)

மனோகரி:—என்ன சொன்னீர் காதலா! உம்மையு மறப்பனோ! உறுதியைத் துறப்பனோ! நன்று நன்று! ஏனோ இவ்வாறு ஐயுறுகின்றீர்! எக்காலும் உம்மை மற வேன். கனவினும் பிறரை நினையேன்! இவ்வுலகமே பரிசாய்க் கிடைப்பினும். ஈதுறுதியென நினைவீர் நாதா!

வசீகரன்:—கண்மணி! கவலையுறற்க. யான் ஏதோ நினைந்தேன். நம் சமூக நிலையை யாராயுங்கால் நம் உறுதி எவ்வாருமென யோசித்தேனேயன்றி உன்னிடம் ஐயமொன்றுமில்லை!—நீ எவ்வாறு வந்தாய்? நான் இங் கிருப்பது உனக்கு எவ்வாறு தெரியும்? உன்னை உன் தாய் தேடாளா!

மனோகரி:—என் தாய்க்கு வேண்டியன சொல்லி வந்தேன்; ஆதலின் அவள் என்னைத் தேடாள். உம் முகம் என் ஒருவாறு வாட்டமுற்றிருக்கின்றது? காரண மென்னவென யான் அறியலாகாதா! (என்று அவள் வசிகரனின் செந்தாமரையன்ன முகத்தைத் தன் இரு கைகளால் தடவினாள்.)

வசீகரன்:—ஒன்றுமில்லை. மனோகரி! என் முகம் வாட்டமுற்று இருக்கிறது? உனக்கு அவ்வாறு தோன்றுகிறதோ! அது கிடக்கின்றது! வா இப்பசிய புற்றரைமேல் உட்காரலாம்.

மனோகரி:—நாதா! இப்பறவைகளுமன்றோ தன் இனத்தோடு கூடி மகிழ்கின்றன! அக்குயிலைப் பாருங் கள். தன் பேட்டினுக்கு இரை கொணர்ந்து அதன் வாயில் ஊட்டுகின்றது! நமக்கு நன்னாள் வரும் நாள்

எங்நாளோ! (என்று கண்ணீர் ததும்ப ஆர்வமேலீட்டி னல் வசீகரனைத் தழுவி அவன் முகத்தோடு தன் முகத்தைப் பொருத்தல்.)

(இச்சமயம் வெங்கடேச பத்தர் பிரவேசித்தல்.)

வெங்கடேச பத்தர்:—(மனேகரியும் வசீகரனும் ஒருவரையொருவர் தழுவி நிற்றலைக் கண்ணுற்றதும் திடுக்கிட்டு) யாரது! மனேகரியா! நம் குஞ்சிதபாதமய்யரின் மகள் மனேகரியா! அவளா ஆதிதிராவிடனை வசீகரனைத் தழுவி நிற்கின்ருள்! அவன் நம் ஊர்ப்புறத்துள்ள சேரியில் வசிக்கும் ஆதிதிராவிடப் பெண்ணல் வளர்க்கப்படுபவனன்ருே! யான் காண்பது கனவா! உண்மைதானே! (தன் இருகைகளாலும் கண்களைப் பிசைந்துக்கொண்டு பார்த்தல்.) உண்மைதான். என் கண்ணும் பொய்க்கவில்லையே! என்ன அநியாயம். ஒரு பார்ப்பனப்பெண் தீண்டப்படாதானகிய ஆதிதிராவிடப் பையலோடு ஒன்று சேர்ந்திருப்பதா! நன்று நன்று! இவர்களின் கலாசாலை சிநேகம் இவ்வாறு காதலாக முதிர்ந்ததுபோலும்? நல்லவேளையாக நாம் இன்று இக்காட்சியைப் பார்க்க நேர்ந்ததே! நமக்கு நல்லகாலமே! பணவருவாய்க்கு இது ஒரு எதுவாகவே யிருக்கிறது. வருவது தானே வரும். நான் அவர்களிடஞ்சென்று அவர்களைப் பயமுறுத்திப் பார்க்கிறேன். (என்று அவர்கள் பின்புறமிருந்து எதிரேபோய் நிற்கின்ருர்.)

(பத்தரைக் கண்டதும் காதலரிருவரும் துணுக்குற்று ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து நிற்றல்.)

பத்தர்:—வசீகரா! மனேகரி! நன்ருயிருக்கிறது உங்கள் செய்கை! பிள்ளைகளிருந்தால் இவ்வாறல்லவோ

இருக்கவேண்டும். என்ன வேலை செய்கிறீர்கள். எங்கே யாகிலும் இவ்வித அக்கிரமம் நடக்குமோ! இதுதான் (Western Civilisation) தற்கால நவீன நாகரீகமோ! மிக உயர்ந்த ஒரு பார்ப்பனக் குலத்துதித்த பெண், எல்லாரினும் தாழ்ந்த ஆதிதிராவிடனுடன் சிநேகங் கொண்டு தன் தாய் தந்தையர்க்குத் தெரியாது இங்கு வந்து சரச சல்லாபஞ் செய்து மகிழ்கிறது—ஐயோ—எங்கு நடக்கும். அநியாயம்—அநியாயம். குடி முழுகிப் போய் விட்டதே. கடவுள் பொறுப்பானே! ஆ! இவ்வாறு ஒரு குலத்துக்கும் சமூகத்துக்கும் அடாப்பழியை வருவிக்கும் நெறியினீங்கிய செயலைச் செய்யும் உங்களை லேசில் விடுகிறேனா; பார்! எல்லாரையும் கொண்டுவந்து உங்களைச் சித்திரவதை செய்யச் சொல்லுகிறேன். உங்கள் களியாட்ட மெல்லாம் எவ்வாறு ஆகிறது. உம். விடேன்; விடேன். (என்று கர்ச்சனை செய்தார்.)

(இதைக் கேட்டதும் வசீகரனும் மனோகரியும் முன்னினும் அதிகமாகப் பயந்து விதிர்விதிர்த்துப் பத்தரை நோக்கிக் கெஞ்சும் பாவனையாக நின்றார்கள்.)

பத்தர்:—என்ன விழிக்கிறீர்கள்! நம் கள்ள நட்பு வெளியாய் விட்டதே என்று நினைக்கிறீர்களா! நீங்கள் என்ன ஆந்தைபோல் விழித்தாலும் விடமாட்டேன்.

வசீகரன்:—பத்தரே! தயவுசெய்து கோபியாதேயும். நாங்கள் ஒரு கலாசாலை மாணவர்களாதலால் பேசிக்கொண்டிருந்தோம். நீர் ஏதோ தப்பபிப்பிராயம் கொண்டு கண்டவாறு பேசுகிறீரே! இது தகுமா!

பத்தர்:—நன்று நன்று! என்னடா! முழுபூசணைக் காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறாய்! நான் நேரில் கண்டேன். நீங்கள்.................................. கண்டதை ஒரே அடியாக இல்லையென்கிறாயே! இப்படிப்பட்ட பொய்யனாகிய நீ எதைச் செய்யத்தான் துணியமாட்டாய்! காதகா!

மனோகரி:—(இதுகாறும் பதுமைபோல் வாளாவிருந்தவள் துணிந்து) போதுமய்யா! அதிகம் பேசாதேயும். நாக்கை உள்ளிழுத்துப் பேசும். என்னமோ பிரமாதமாக அளக்கிறீரே! பெரியவராயிற்றே என்று பேசாமலிருந்தால் அதிகமோடுகிறீர்! நாங்களெவ்வாறிருந்தால் வழியே போகும் உமக்கென்ன! எல்லாரிடமும் போய்ப் பிதற்றப் போகிறீரா! பிதற்றும். அதற்கொன்றும் அஞ்சப்போவதில்லை.

பத்தர்:—(தன் சாகசம் இனி செல்லாதென்று மெதுவாக) இல்லையம்மா! கோபித்துக் கொள்ளாதே! நீங்கள் இவ்வாறிருப்பதை யாராகிலும் பார்த்தால் ஊரெல்லாம் தூற்றி விடுவார்களேயென்று சொன்னேன். நான் பார்த்தது ஒருவாறு நல்லதாயிற்று. ஏனெனில் நான் யாரிடமும் சொல்லேன். ஏதோ பிள்ளைகள் வாலிபமல்லவா! இவ்வாறுதான் இருப்பார்களென்று எண்ணிப் பேசாமலிருப்பேன். ஊர்வாயை மூட முடியுமா! அதனால் தான் உங்களுக்கு எச்சரிக்கை செய்தேன். வேறொன்றுமில்லை அம்மா.

மனோகரி:—(பத்தரின் உள்ளக் கருத்தையறிந்து) நல்லது ஐயா! உமது கருணைக்கு மிக வந்தனம். (தன் கழுத்திலிருந்த பொன் சங்கிலியைக் கழற்றி யெடுத்து)

இந்தாரும். இதைப் பெற்றுக் கொள்ளும். நீர் இவ்வளவு பெருந்தன்மை வாய்ந்தவராயிருந்தால் இச் செய்தியை—இங்கு நடந்ததை—யாரிடமும் சொல்லா தீர்! அவ்வாறு சொல்லுவீரென்று நான் நினைக்கவில்லை.

பத்தர் :—(மனோகரி கொடுத்த பொன் சங்கிலியை வேண்டா வெறுப்பாக வாங்குவதுபோல் அபிநயித்து வாங்கிக்கொண்டு) நான் யாரிடமும் சொல்லேனம்மா; மனோகரி! என் வார்த்தையை உறுதியாக நினை. நான் அப்பேர்ப்பட்டவனல்ல. வசீகரா! பயப்படாதே! யௌவனம் வாய்ந்த உங்கள் சிநேகத்திற்குப் பங்கஞ்செய்யேன். நீங்கள் சந்தோஷமாக இருங்கள். மற்றவர் கண்களில் படாதீர்கள். அது தான் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது. போய்வருகிறேன். மனோகரி! வசீகரா!

(என்று மெதுவாக அவர்களை விட்டுப்போதல்)

வசீகரன்:—(இதுகாறும் மனோகரியின் சமயத் துக்குத் தக்க பேச்சையும் செயலையும் கண்டு இறும்பூ தெய்தி) மனோகரி! உன் வல்லமையே வல்லமை. உன் அறிவின் மாண்புதான் என்னே! உன்னை—அருமணி யாகிய உன்னை—அடைந்த எனக்கு இனி ஒரு குறை யுளதோ! வா போகலாம்.

(இருவரும் செல்லுதல்.)

களம் 1. இடம்:—அக்கிராஹாரம்.

அங்கம் 2. காலம்:— முற்பகல்.

(சுப்பண்ண சாஸ்திரியும், அவர் மகனை சந்தான கிருஷ்ணனும் தங்கள் வீட்டு வாயில் திண்ணை யில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருத்தல்.)

சுப்பண்ண சாஸ்திரி:—சந்தானம்! நேற்றைய இரவு எங்கு சென்றிருந்தாய்? உனக்காக நான் எவ்வளவு நேரம் சாப்பிடாமல் காத்திருந்தேன் தெரியுமா. வயோதிக காலத்தில் என்னை இவ்வாறு வருத்தலாமா. அடிக்கடி என்னை விட்டுப் போகலாமா. இன்னும் சிறு பிள்ளையாகவே இருக்கிறாய் அப்பா. நான் இருக்கும் வரைதான் இதெல்லாம். அப்புறம் யார் உன்னை என்ன கேட்கப்போகிறார்கள். என்னையோ காடு வாவா என்று கூப்பிடுகிறது. வீடுபோபோ என்கிறது. நான் இருக்கும் வரையும் இவ்வாறெல்லாம் செய்யாதே யப்பா. அது போகட்டும். நான் சொன்னேனே! அதை—என்ன யோசித்தாயா! உனக்குச் சம்மதிதானா!

சந்தானம்:—இல்லையப்பா! நேற்று நம் அகத்துக்குச் சுந்தரேசன் வந்தானே; அவன் சர்க்கஸ் ஆட்டம் பார்க்கவேண்டுமென்று சொல்லி அழைத்துக்கொண்டு போனான். அவனோடு போனேன். நான் இதுவரையும் தங்களோடு சொல்லாது எங்கேனும் போனதுண்டா! நான் இனி இம்மாதிரி போகமாட்டேன் அப்பா!

சுப்:—சரிதான்; அது கிடக்கட்டும். நீ அவ்வாறு செய்யா யென்று எனக்குத் தெரியும். என்ன அந்த செய்தியைப் பேசாமல் நழுவ விட்டுவிட்டாயே!

சங்:—ஆ! அதுவா! அதைப்பற்றி என்னை ஏனப்பா கேட்கிறீர்கள். தங்கள் விருப்பப்படி செய்கிறது தானே! நான் என்ன மறுக்கவா போகிறேன்.

சுப்:—உன்னைக் கேட்காமலாகிறதா! நீதானே இன்பதுன்பத்தை யனுபவிக்கப் போகிறவன். உன் விருப்பத்தைக் கேட்காது மற்றென் செய்கிறது. இளம் பிள்ளைகள் பேசுவது போலவே பேசுகிறாய்.

சங்:—பெரியவர்களாகிய தங்களுக்குத் தெரியாததா எனக்குத் தெரியப்போகிறது. அதற்கென்று செய்கிறவர்கள் எனக்கு நன்மையானவற்றைத் தானே செய்வீர்கள். அப்படியிருக்க, என் விருப்பத்தை யென்ன கேட்கிறது!

சுப்:—இல்லையப்பா! உலகவழக்கு உனக்குத் தெரியாது. ஒன்றைச்செய்து கொள்பவனுக்குத்தானே அதனுடைய நன்மைதீமையெல்லாம் தெரியும்.—அதிலும் இக்காரியம் சாதாரணமானதா! வாழ்க்கை நன்றாய் நடக்கிறதோ தீதாய் முடிகிறதோ எல்லாம் அதில் தானே இருக்கிறது. ஏதோ நாங்கள் பார்த்தவரையில் எல்லாம் பொருத்தமாகவேயிருக்கிறது. உன்னுடைய அனுமதிதான் வேண்டும். பார்! குஞ்சிதபாதம் என்னுடைய இளம் பருவ நண்பன்: அட்வகேட் பட்டம் பெற்றவன். அவனுக்கு மனோகரி ஒரேயொரு பெண். அவளும் பி. ஏ. வாசித்திருக்கிறாள். நல்ல அழகு.

லக்ஷ்மியேயென்று சொல்லவேண்டும். சங்கீதத்திலும் தேர்ச்சிபெற்றவள். இனிமையான குரல். நற்குண நற்செய்கை வாய்ந்தவள். தாயில்லை. இப்போதிருப் பவள் மாற்றாந்தாய். அவளுக்கு வயதாய்விட்டது. இனிமேல் இவர்களுக்குப் பிள்ளை பிறக்கிறது என்பது என்ன நிச்சயம். ஆதலால் அவனுடைய பொருளுக் கும் நீயே உரியவனாவாய். அவனுக்குப்பின் வீட்டுக்கு நீயே தலைவன். இதைவிட இன்னும் என்னவேண்டும்.

(வெங்கடேச பத்தர் தோன்றுதல்.)

பத்:—என்ன ஐயரவாள். மகனுக்கு ஏதோ உப தேசம் செய்கிறீர்கள். அவன் என்ன கேட்கிறான். என்ன வேண்டும் என்று கேட்கிறீரே. நமக்குத் தெரியலாகாதா!

சுப்:—ஒன்று மில்லை பத்தரே! நம் பையனுக்கு விவாகம் செய்ய எண்ணியிருக்கிறோம். அதற்காக அவ னுடைய விருப்பத்தைக் கேட்கிறேன்.

பத்:—ஓஅப்படியா! நல்ல செய்தி! மங்கள முண் டாகுக! ஆமாம். அவன் என்ன சொல்லுகிறான்?

சுப்:—ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறான். நீராகிலும் அவனைக் கேட்டுப் பாருமே.

பத்:—ஆமாம். அவனுக்குப் பெண் எங்கு முடிவு பண்ணியிருக்கிறீர்கள்? வரதக்ஷிணை அதிகம் கொடுப் பார்களா?

சுப்:—உனக்குத் தெரியாததா! நம் குஞ்சிதபாதம் இருக்கிறானே! அவன் ஒரே மகள்...............

பத்:—யார்! எந்த குஞ்சிதபாதம். அட்வகேட்டா! அவருடைய பெண்ணு! (முகத்தை ஒருவாறு சுளித்துக்கொள்ளல்.)

சுப்:—என்ன பத்தரே! அவ்வளவு ஆச்சரியமாகக் கேட்கிறீர்! முகமும் ஒருவாறு மாறிவிட்டதே!

பத்:—(தம் முகவேறுபாட்டை மாற்றிக்கொள்வதற்குச் சிரிப்பை வருவித்து) ஒன்றுமில்லை; ஏதோ நினைத்தேன்; கேட்டேன்.

சுப்:—ஆமாம். அவர்கள் சம்பந்தம் எங்களுக்குப் பொருந்தாதென்று நினைக்கிறீரா! அவன் அட்வகேட். நான் வெறும் சாஸ்திரி என்பதா! என்னய்யா உம் அபிப்பிராயம்? சொல்லுமே. அவள் பி. ஏ. பட்டம் பெற்றிருக்கிறாள். என் மகனும் ஸ்கூல் பைனல் (School Final) வாசித்தில்லையா! என்ன நினைக்கிறீர்?

பத்:—அதெல்லாம் நான் நினைக்கவில்லை சுவாமிகளே! அது கிடக்கட்டும். எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. தயவு செய்து அதைத் தீர்ப்பீரோ! உங்கள் வேதத்தில்—அதாவது சாஸ்திர நீதிகளில்—நாற்பால் குலத்திற்கும் வருணாசிரம தருமம் சொல்லியிருக்கிறதல்லவா?

சுப்:—ஆமாம்.

பத்:—அதில் பிராமணர்களாகிய நீங்கள்—உங்களிலொருவன் மற்ற—அதாவது க்ஷத்திரிய—வைசிய—சூத்திர சாதிகளிலுள்ள பெண்ணொருத்தியைக் கண்டு விருப்பமுற்றான். அவளை அவன் கலியாணஞ் செய்துக்

கொள்ளலாமா? அல்லது காமக்கிழத்தியாக வைத்துக் கொள்ளலாமா?

சுப்:—நாங்கள்—அதாவது பிராமணர்கள்—எந்த சாதியிலுள்ள பெண்களை விரும்பினாலும் அவர்களைச் சேரலாம். க்ஷத்திரிய வைசிய பெண்களாயிருந்தால் கலியாணம்கூட செய்துக்கொள்ளலாம். அவசியமானால் சூத்திரப்பெண்களைக்கூட....................வேதத்தில் சொல்லியிருக்கிறது. மநு நீதியிலும் சொல்லியிருக்கிறது. பிராமணன் விரும்பினால் மற்ற சாதியார்கள் தடுக்கப்படாது. அவன் விருப்பப்படி செய்யவேண்டும். மறுத்தால் பாவம் வந்துசேரும். ஆனால் நாங்கள் அனேகமாக மற்றச் சாதிப் பெண்களை வதுவை செய்து கொள்வதில்லை. காமக்கிழத்திகளாகத்தான் வைத்துக் கொள்வது. (சிரிக்கிறார்.)

பத்:—ஆமாம். பிராமணப்பெண்களை மற்றச் சாதியிலுள்ளவர்கள் கண்டு ஆசைப்பட்டார்கள். அப்போது அவர்கள் அப்பெண்களை மணஞ்செய்துக் கொள்ளலாமா? அல்லது காமக்கிழத்திகளாக வைத்துக் கொள்ளலாமா?

சுப்:—அப்படி எங்கள் பெண்களைக்கண்டு ஆசைப்பட எந்த சாதியார்க்கும் உரிமை இல்லை. அவ்வாறு ஆசைப்படலுமாகாது. தவறி அவ்வாறு எவராகிலும் விருப்பப்பட்டால் அவர்கள் கண்களை அகழ்ந்தெடுக்கப் படுவார்கள். மற்றும் பல தண்டனைகளை அரசரைக் கொண்டு செய்விப்போம். க்ஷத்திரியராக இருந்தால் மாத்திரம் அவர்கள் விருப்பப்பட்ட எங்கள் பெண்களைக்

கலியாணஞ்செய்துக் கொள்ளலாம். காமக்கிழத்திகளாகவும் வைத்துக்கொள்ளலாம்.

பத்:—ஏனெனில் அவர்கள் அரசர்களாயிற்றே! அதனால் போலும்? நல்ல நீதி! நீங்கள் மற்றச் சாதிப் பெண்களை எவ்வாறாயினும் விருப்பப்படி செய்யலாம்.. மற்ற சாதியார் உங்கள் பெண்களைக்கண்டு ஆசைப்படலாகாது! சரி இருக்கட்டும். நான்குச் சாதிகளுக்கும் கீழான பறையன்—அதாவது தீண்டப்படாதான் ஒருவன் உங்கள் பெண்களிலொருத்தியைக் கண்டு ஆசைப்பட்டான்? கலியாணஞ்செய்துக் கொள்ளவோ அல்லது காமக்கிழத்தியாகவோ வைத்துக்கொள்ள விரும்பினான்? அப்போது!....................

சுப்:—என்ன அய்யா! நான் தான் சொல்லுகிறேனே! மூன்று பகுதியாருக்குமே செய்யலாகாது! தண்டனையென்று சொன்னால்? மேலுமேலும் கேட்கிறீரே! அவனுக்குத் தூக்குமரந்தான் கதி.

பத்:—கோபியாதீர்! தெரியாமல் கேட்டேன். இக்காலத்துக்குத் தக்கபடி உங்கள் மநுதருமம் மாறியிருக்கிறதோ என்னமோவென்று பார்த்தேன். இப்போது தான்—ஆங்கிலேயர் அரசாட்சிசெய்யும் இக்காலத்தில் தான்—சாதிபேதம்வேண்டாம் மதம்வேண்டாம் என்று சீர்திருத்தக்காரர்கள் (Reformers) சமூக சீர்திருத்தம் செய்கிறார்களே! ஆதி திராவிடன் பெண்ணைப் பார்ப்பனனும், பார்ப்பனன் பெண்ணை ஆதி திராவிடனும், பார்ப்பனன் பெண்ணை இஸ்லாமானவனும், செட்டிமார் பெண்ணைப் பிள்ளைமாரும், நாயுடு பெண்ணைச் செட்டியும் இவ்வாறு கலப்பு விவாகம்செய்துக் கொள்ளுகிறார்

களே!—அதனல் ஒருவேளை உங்கள் வேதமும் சாஸ்திரமும் நீதியும் மாறிவிட்டதோவென்று கேட்டேன்.

சுப்:—வேதமும் நீதியும் ஒன்றும் மாறவில்லை. மநுக்காலத்தில் எப்படியிருந்ததோ அப்படியே இப்போது மிருக்கிறது.

பத்:—கடைசியாக ஒரு கேள்வி. இதற்குத் தாங்கள் கோபியாமல் விடைசொல்லவேண்டும். ஒரு பிராமணப்பெண். நானே பிராமணனென்று வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு ஒரு பெண்ணிருக்கிருள். அப்பெண் ஒரு தீண்டப்படாதானைக் காதலித்து அவனேடு கள்ள நட்புக்கொண்டிருக்கிருள். அது அறியாத மற்ெருரு பிராமணர் தன்மகனுக்கு என்பெண்ணை வதுவைசெய்ய கேட்கிருர். என் செய்வது? என் பெண்ணின் மனத்தை மாற்றும் மந்திரம் ஏதேனும் இருக்கிறதா! அவள் தீண்டப்படாதானேடு களவொழுக்கம் நிகழ்த்தியிருந்தாளே! அதற்குப் பிராயச்சித்தம் உண்டா? பிராயச்சித்தஞ்செய்து பிராமண மகனுக்கு மணஞ்செய்து தரலாமா!

சுப்:—(கோபங்கொண்டு) என்ன அய்யா! ஏதேதோ உளறுகிறீர்! நீர் பேசுவதன் கருத்து இன்னதென விளங்கவில்லையே?

சங்:—(பத்தரைத் தன் கண்ணை விழித்து எரித்து விடுபவன்போல் வெகுண்டெழுந்து) என்ன சொன்னுய்! குஞ்சிதபாதமய்யரின்மகள் அவ்வாறு இருக்கிருளென்று சொல்லுகிருயா? அதனை நீ உறுதிபடுத்தமுடியுமா?

பத்:—என்ன ஐயரே! பிள்ளையாண்டானும் நீரும் வெகுவாகக் கோபித்துக்கொள்ளுகிறீர்களே! நான் பொதுவாக ஏதோ கேட்டேன். நீங்கள் அதைக் குரோதமாக எடுத்துக்கொண்டீர்கள்போலும்? 'குற்ற முள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்பார்களே! அது போல் ஏதோ உங்களுக்குள் குழறுபாடு இருக்கிறது போலும்? அதற்கு நான் என்ன செய்வது!

சங்:—(மேலும் கோபங் கொண்டு) உன் வார்த் தையே நீ அவ்வாறு தான் நினைத்துச் சொல்லுகிறாய் என்று எடுத்துக் காட்டிவிட்டதே! மனோகரி ஆதி திராவிட நண்பனுடன் கூடியிருந்ததைப் பார்த்தாயா! பார்த்தது உண்மையானால் அதை உறுதிப்படுத்த முடி யுமா! இல்லாவிடில் உன்னைச் சும்மா விடேன். பொய் மொழி புகன்று எங்களை ஏளனஞ் செய்ததற்கு ஈடாக உன் நாக்கை அறுத்து எறிவேன்; ஈதுண்மை.

பத்:—என்ன தம்பி! சும்மா துள்ளிக்குதிக்கிறாய்! ஏதோ நாம் ஏன் பார்த்ததையெல்லாம் சொல்லி இவர்கள் மனதைப் புண்படுத்தவேண்டும். குறிப்பாகச் சொல்லி அவர்கள் சம்பந்தத்தை விட்டொழியச் செய்யலாம். தெரியாமல் குழியில் காலைவைத்து விடப்போகிறார் கள் என்னும் நல்ல எண்ணத்தோடு சொன்னால், 'தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்பது போல், அப்படி செய்து விடுவேன்; இப்படி செய்து விடுவேன் என்று சொல்லுகிறாயே. மனோகரி அப்பறப்பயலோடு கூடிக் குலாவுவதை நேரில் காட்டி னால் எனக்கு என்ன கொடுப்பாய். 2,000 ரூபாய் கொடுப்பாயா!

சங்:—அவ்வாறு என் கண்முன் காண்பிப்பா யானுல் இதற்கு இரட்டிப்பான தொகை கொடுப்பேன். —ஆ! என் அமுத மன்ன மனோகரி அவ்வாறு நடப்பளா! என் மனம் நம்பமாட்டே னென்கிறதே! ஆ! ஈசா! (பெருமூச்செறிகிருன்.)

சுப்:—என் நண்பன் குஞ்சிதபாதத்தின் அருமைச் செல்வி—உரு, திரு, இசை இவற்றிற்கெல்லாம் நிலையம் போன்ற கோமளக் கொழுந்து—அதிலும் பி. ஏ. படித்தவள்—அவளா—ஒரு ஆதிதிராவிடனேடு—தாழ்த்தப்பட்டவன்—தீண்டப்படாதவன் என்று இழிக்கப் படும் கேவலம் பறையனேடு—தகாத செயலைப் புரிந்தொழுகுகின்ருள். உண்மையாகவா! நான் கனு காண்கின்றேனு! ஐயா! உண்மையாகச் சொல்லும். கடவுளறியச் சொல்லும். அப்படித்தானு! (உடல்பதறக் கண்களில் நீரொழுக நிற்கிருர்.)

பத்:—உண்மையே ஐயா! உண்மையே! நான் என் அடாப்பழி சொல்லுகிறேன். என் கண்ணுர மனோகரி ஆதிதிராவிடனுகிய வசி..................காதல் மொழி பல பேசி மார்புறத்.........................., ஒருருவமானதைக் கண்டேன். வேண்டுமானுல் உங்களுக்கும் காண்பிக்கக் கூடும். மனோகரி என்ன! பொதுவாகப் பெண்மக்களே உறுதியில்லாதவர்கள், மனச் சபலமுடையவர்கள். நிறையென்பது சிறிதுங் கிடையாது. பெண்பிறவியே பாவத்தால் வருவது என்று பெரியோர்கள் கூறியிருக்கிருர்கள். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த—ஐம் பெருங் காப்பியங்களி லொன்ருகிய சீவக சிந்தாமணி

என்னும் நந்தாமணியை யளித்த திருத்தக்கதே வருமன்றோ பெண்மையின் நீர்மையைக் கூறுமுகத்தான்,

"பெண்ணெனப் படுவ கேண்மோ!
பீடல; பிறப்பு நோக்கா;
உண்ணிறை யுடைய வல்ல;
ஓராயிர மனத்த வாகும்
எண்ணிப் பத்து அங்கையிட்டால்
இந்திரன் மகளு மாங்கே
வெண்ணெய்க் குன்று எரியுற்றாற் போல்
மெலிந்து பின்னிற்கு மன்றே"

என விளக்கிப் போந்தார். இவர் மாத்திரமோ! குமரகுருபர சுவாமிகளென்னும் உண்மைத்துறவியும்,

"ஏந்தெழில் மிக்கான் இளையான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேளெனினு மாதர்க்
கயலார் மேலாகு மனம்."

என்று அப்பேதைகளின் தகுதியை வெள்ளிடை மலையென விளக்கிக் காட்டினர். அப்படியிருக்க, இம்மனோகரி மாத்திரமென்ன! அந்தரத்தினின்றும் நேரே இறங்கிவிட்டாளா! அவளுக்காகப் பரிந்து பேசுகிறீர்கள். 'பத்துக்கு மிஞ்சின பதிவிரதையில்லை' யென்பார்கள். நீங்களென்னமோ சும்மா அளக்கிறீர்கள். போமய்யா போம்.

சுப்:—சந்:—(வெட்கம் ஒருபுறமும் கோபம் ஒருபுறமும் ஈர்க்கப் பதைத்தெழுந்து) பத்தரே! எமனே

இவ்வாறு உருக்கொண்டு எங்களுயிர்களைக் கொண்டேக வந்தது போன்று நிற்கும் மானிடப்பதரே! உன் பேச்செல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். மனோகரியைப்பற்றிச் சொன்னாயே! அதனை எங்கள் கண்முன் காண்பிக்க வேண்டும். அப்படி காண்பிப்பாயானால் நீ சொன்ன தொகைக்கு இரட்டிப்பான தொகையைக் கொடுப்போம் என்பதை மீண்டும் சொல்லுகிறோம். அவ்வாறு உறுதிப் படுத்தாது போனாயோ! உன்னை லேசில்விட மாட்டோம். தெரிகிறதா! உம். (என்று பற்களை நறநறவென்று கடித்து, கண்களில் கோபத்தணல் வீச, புருவங்கள் நெரிய பத்தரைப் பார்த்தார்கள்.)

பத்:—ஏனய்யா! சும்மா கோபித்துக் கொள்ளுகிறீர்கள். நான் அவ்வற்புதக் காட்சியை உங்கள் கண்முன் காட்டி உறுதிபடுத்தத்தான் போகிறேன். நீங்கள் பணத்தைக் கொடுத்துவிட்டு தலைகவிழ்ந்துக் கொண்டு செல்லத்தான் போகிறீர்கள். அப்படியாகாவிட்டால் நான் உங்களுக்கு அடிமையாகிறேன். முக்காலும் சத்தியம். (என்று சபதம் செய்து செல்லுதல்.)

களம் I. இடம்:—குஞ்சிதபாதமய்யரின் வீடு.

அங்கம். 3. காலம்:—மாலே.

(குஞ்சிதபாதமய்யர் ஒரு சோபாவின்மீது சாய்ந்த வண்ண மிருத்தலும், அவர் மனேவி நீலலோசனி பக்கத்தில் உட்கார்ந் திருத்தலும்.)

நீல:—நாதா! தாங்கள் நம் மனேகரியைப் பற்றி ஒன்றும் முயற்சிக்காமலிருக்கிறீர்கள். அவள் உற்ற வயதையுங் கடந்து விட்டனளே! இன்னும் நாம் பேசாம லிருப்பது தகுதியா! ஏதோ தாங்கள் ஊர் வம்பைப் பார்ப்பதற்கே சரியாக இருக்கிறது. இதை யெல்லாம் எங்கே கவனிக்கப் போகிறீர்கள். நான்தான் சங்கடப் பட்டுக் கொண்டு கிடக்கவேண்டும். பக்கத்து அகத் துப் பங்கஜம், அயலசத்து அமிர்தம், காண்பாரெல்லாம் 'இன்னும் ஏன் உன் பெண்ணுக்குக் கலியாணம் பண்ண வில்லே' என்று அடிக்கடி கேட்கிருர்கள். அவர்களுக் கெல்லாம் என்ன சொல்வது என்று தெரியாது விழிக் கிறேன். என்ன வெட்கமாயிருக்கிறது தெரியுமா! தாங்கள் என்ன! வெளியே போய்விடுகிறீர்கள்.

குஞ்:—நானும் அதுபற்றி யோசித்துக் கொண்டு தான் இருக்கிறேன். நான் இதுவரை பேசாமலிருந்தது அவள் பி. ஏ. பரீக்ஷையில் தேறுவதற்காகத்தான். அதிலும் தேறிவிட்டாள். இனியென்ன!—சுப்பண்ண சாஸ்திரியிருக்கிருனே! உனக்குத் தெரியுமா! அவன்

என்னுடைய இளம்பருவ நண்பன். நல்லவன். வேதம், உபநிஷத், புராணம், இதிகாசம் முதலியவற்றை யெல்லாம் கரைத்துக்குடித்திருக்கிறான். அவன் என்னை அடிக்கடி தொந்திரவுசெய்கிறான். அவனுக்கு ஒருமகன் இருக்கிறானும். அயன் ஏதோ ஸ்கூல் பைனல் வாசித்திருக்கிறானும். (நீலலோசனி புன்சிரிப்பு செய்தல்.) எனக்கு அவனுக்கு மனோகரியைக் கொடுக்க விருப்பமில்லை. எனினும் அதை வெளிப்படையாகச் சொன்னால் சுப்பண்ணுவுக்கு மனத்தளர்ச்சி யேற்படுமென்று ஆகட்டும் பார்க்கலாம் என்று சொல்லி வருகிறேன்.—நம் மனோகரிக்குத் தகுந்த வரனைப் பார்த்துவருகிறேன். இதுவரை கிடைக்கவில்லை. நாளும் வரவேண்டு மல்லவா!

நீல:—நாதா! சுப்பண்ண சாஸ்திரியின் மகன் சந்தானத்திற்கே நம் மனோகரியைக் கொடுக்கலாமே. பையன் நல்லவனும். அழகாகவு மிருப்பானும். அவருக்கு அவனொருவனே மகனும். சுப்பண்ணுவும் என் தாய்க்கு நெருங்கிய உறவினராம். அப்படியிருக்க அவரின் பிள்ளைக்குக் கொடுப்பதில் தடையென்ன? இதை விட்டு விட்டு நாம் அலைவானேன்.

பஞ்:— நீலா! உனக்கு ஒன்றுந் தெரியாது. இதைப்பற்றி நீ யொன்றும் பேசாதே. நான் தான் சொல்லுகிறேன்; அப்பையன் நம் பெண்ணுக்குத் தகுதியானவ னில்லையென்று. அவ்விதமிருக்க, உறவினைப்பற்றி இப்போது யார் கேட்டார்கள். ஏதேதோ உளறிக்கொட்டுகிறாய். இதைப்பற்றி உனக்கொன்றும் கவலையே வேண்டாம். எனக்கு எல்லாம் தெரியும்.—

(காலடி சப்தம் கேட்டல்.) யாரது! அங்கே வருகிறது. (மனோகரி வருதல்.) ஓ! மனோகரியா!

மனோ:—என்ன அப்பா! நான் தான்.

பஞ்:—மனோகரி! இதுவரையும் எங்கு சென்றிருந் தாய்.

மனோ:—அப்பா! காலேஜ் ஹாலில் ஸைன்ஸைப் (Science) பற்றிய ஒரு உபந்யாசம் நடந்தது. அதற் காகப் போயிருந்தேன்.

நீல:—இன்னும் கலாசாலையில் என்ன இருக்கி றது. படிக்கவேண்டியது தான் படித்தாயிற்றே! தின மும் இவ்விதம் தான் ஏதேதோ சொல்லுகிறாள் நாதா! மாலைக்காலமானால் வீட்டில் இருக்கமாட்டேனென்கி றாள். நான் ஏதாகிலுங் கேட்டால் என்மீது மனோகரி கோபித்துக்கொள்ளுகின்றாள். என்ன செய்வது!

மனோ:—போதுமம்மா உன் பிரசங்கம்! இதுபற்றி நீ ஒன்றும் பேசாதேயென்று எத்தனைமுறை உனக்குச் சொல்லியிருக்கிறேன். உனக்கு என்ன தெரியும். உன்னைப்போல் எப்போதும் வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்கச்சொல்லுகிறாயா!—என்ன அப்பா இவள் எப் போது பார்த்தாலும் ஏதேனும் ஒன்றைச்சொல்லிக் கொண்டே இருக்கின்றாள். பழையபடியே இருக்க வேண்டுமாம், அவள் பேச்சை நான் கேட்கவில்லை யென்று இப்போது தங்களிடம் என்னைப்பற்றிப் புகார் செய்கிறாள். நான் வருவதற்கு முன்னும் என்னைப் பற்றிதான் ஏதாகிலும் சொல்லியிருப்பாள்.

பஞ்:—இல்லையம்மா! உன்னைப்பற்றி அவள் ஒன்றுஞ்சொல்லவில்லை. உன் கலியாணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். (மனோகரி திடுக்கிடுதல்.) இதற்குள் நீயும் வந்தாய். நீலா பழைய காலத்துப் பெண்ணல்லவா! அப்படித்தான் பேசிக்கொண்டிருப்பாள். நீ யொன்றும் கோபித்துக்கொள்ளாதே; மனோகரி!

நீல:—நான் பழைய காலத்துப் பெண்தான். இக்காலத்துப் பெண்களைப்போல் ஆண் மக்களைப் போன்று எங்கும் சுற்றிவிட்டு வருபவளல்ல; என்ன என்றால் இதெல்லாம் வெள்ளைக்காரர் நாகரீகமாம். அந்த வெள்ளைக்காரர் படிப்பால்தான் இவ்வளவுதூரம் பெண்கள் கெட்டுவிட்டார்கள். நான் அப்போதே சொன்னேன். நம் குழந்தைக்கு இங்கிலீஷ் படிப்பே சொல்லிக்கொடுக்க வேண்டாம்; சங்கீதமும் கொஞ்சந் தமிழும் தெரிந்தால் போதுமென்று. என் பேச்சைக் கேட்டீர்களா! அதனால் தானே மனோகரி இவ்வாறு கெட்டுவிட்டாள். நம்மை யெதிர்த்துப் பேசுகின்றாள். அவளுக்குச் சமையல்வேலை செய்யத்தெரியுமா என்று கேளுங்கள்.

மனோ:—என்னடி! அம்மா! ஏதேதோ உளறிக் கொட்டுகிறாய். உன் சொல்லே வேதவாக்கெனக்கொண்டு அடிமையைப்போலும், கைதியைப்போலும் வீட்டிலே அடைபட்டுக் கிடந்தேனானால் நான் கெடாமலிருப்பேனோ! உன் புத்திக்கூர்மையை என்னென்று சொல்லுவது! வாலறுந்த நரியொன்று மற்ற நரிகளையும் வாலையறுத்துக்கொள்ளும்படி சொன்னதுபோல் இவள் இங்கி

லீஷ் படிக்காததால் மற்றவர்களும் இங்கிலீஷ் படிக்கக் கூடாதாம். நன்றாயிருக்கிறது இவள்பேச்சு.

பஞ்:—போதும்; உங்களின் வாதத்தை நிறுத்துங் கள். மனோகரி! உன் தாயின் சொல்லைக்கேளாது இவ் வாறு எதிர்த்துப்பேசலாமா! பெண்களெல்லாம் தாயின் சொற்படிதானே நடக்கவேண்டும். அது இருக்கட்டும். இத்தோடு உனது கலாசாலைப்படிப்பை நிறுத்திவிடலா மென்று எண்ணுகிறேன். உன்னுடைய கருத்தென்ன!

மனோ:—(திடுக்கிட்டு) ஏனப்பா! நிறுத்தி விடுகிறீர் கள்?

பஞ்:—உனக்கு வயதாகிவிட்டபடியால் கலியா ணஞ்செய்ய எண்ணி யிருக்கிறோம். அதனால்.........

மனோ:—அதனால் நான் அதிகம் படித்துவிட்டே னென்று நிறுத்திவிடுகிறீர்களா! நன்றாயிருக்கிறது. எனக்கு இப்போது கலியாணத்துக்கு என்ன அவசரம் அப்பா! இதெல்லாம் அம்மாவின் தூண்டுதல்போலும்! அவள்தான் இருக்கிறாளே!

நீல:—பாருங்களேன்! நான் ஏன் சும்மா இருக் கிறேன். என்மீது பழி சுமத்துகிறாள். அவளுக்கு என்மீது நெஞ்சு கொண்டமட்டும் வஞ்சமிருக்கிறது. நான் கெட்டவளென்று தான் பேரெடுத்துவிட்டேனே! மனோகரி! இன்னும் படித்து நீ எங்குசென்று உத்தியோ கம் செய்யப்போகிறாய். காலையில் கலியாணஞ்செய்து கண்ணுக்கழகாகப் பார்க்கலாமென்றால் கலியாணத்துக்கு இப்போது அவசரமொன்று மில்லையாம். தாய் தந்தை யர் சொற்படி பெண் நடக்கிறதா? பெண் சொற்படி தந்தை தாயர் நடக்கிறதா?

பஞ்:—சும்மா இரு நீலா! மனோகரி நாணத்தினால் தனக்குக் கலியாணம் வேண்டாமென்றும், இன்னும் படிக்கவேண்டுமென்றும் சொல்லுகிறாள். வருகிற சித்திரை வைகாசிக்குள் நாம் கலியாணத்தை முடித்துவிட வேண்டும்.

நீல:—நம் சந்தானத்துக்கும் மனோகரிக்கும் தானே!

பஞ்:—(புன்சிரிப்புகொண்டு) நம் மனோகரியின் அபிப்பிராயத்தைக் கேட்போம்.—என்ன மனோகரி! சுப்பண்ணா சாஸ்திரி இங்கு வருவாரே! அவர் மகன் சந்தான கிருஷ்ணன் தெரியுமல்லவா! அவனைக் கலியாணஞ்செய்ய உனக்குச் சம்மதந்தானே!

மனோ:—(துக்கமும் கோபமும் மேலிட்டு) யாரது! சந்தான கிருஷ்ணனா! ஏழெட்டுமுறை ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேறாமல் அழுதுக்கொண்டு கிடந்தானே! அவனா!—என்னமோ! இந்த பாழுங்கலியாணமே எனக்கு வேண்டாம். இதைப்பற்றிய பேச்சும் வேண்டாம்.

நீல:—தைரியத்தைப் பாருங்களேன். தந்தையார் ஏதோ கேட்கின்றாரே! நாம் அதற்குத் தகுந்த பதில் சொல்லவேண்டும் என்றில்லாமல் அலட்சியமாக அவமரியாதையாக இந்தப் பாழுங் கலியாணமே எனக்குவேண்டாம் என்று கூறுகிறாளே! ஆ! பெண் இருந்தாலும் இப்படியல்லவோ இருக்கவேண்டும்.

பஞ்:—நீலா! உன் வாயை அடக்கு. எனக்கே அந்த சந்தான கிருஷ்ணனுக்குக் கொடுக்க விருப்ப

மில்லாதிருக்கும்போது அவளுக்கு விருப்பமிருக்குமோ! நான் ஏதோ அவள் என்ன சொல்லுகிறாள்; பார்க்கலாம் என்று கேட்டேன். நீ அதையே உறுதிப்படுத்தப் பார்க்கிறாய். நீ என்ன தான் தலைகீழாக உருண்டாலும் அந்த பையனுக்கு மனோகரியைக் கொடுப்பேனென்று எண்ணாதே! நான் மனோகரிக்குத் தகுந்த வரனைப் பார்த்துக் கூடிய சீக்கிரம் கலியாணஞ்செய்ய எண்ணி யிருக்கிறேன். அநேகமாக வருகிற சித்திரை வைகாசியிலேயே முடித்துவிடவேண்டும்.

நீல:—(முகத்தைச் சுளித்துக்கொண்டு) எப்படியாகிலுஞ் செய்யுங்கள். கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதுபோலல்லவா உங்கள் செயல் இருக்கிறது. சந்தானத்துக்கு எதில் குறைவு! அழகு இல்லையா! கல்வியில்லையா! என்ன இல்லை! உம். (பெருமூச்செறிதல்.) எனக்கென்ன! யார் தலையில் எவ்வாறு எழுதி இருக்கிறதோ அவ்வாறு தானே நடக்கும்.

மனோ:—(அதிக கோபங்கொண்டு) இராக்ஷஸியே! சும்மா கிடக்கிறாயா என்ன! பாவி! நீ எங்கிருந்து எனக்காக வந்தாயோ!—(தேம்பித் தேம்பி அழுதல்) அப்பா! உங்கள் எண்ணமெல்லாம் வீண் எண்ணமென்றே சொல்லுவேன். (துணிவடைந்து) என் மனத்திலுள்ளதைச் சொல்லுகிறேன். மறைத்து மறைத்து என் வைப்பானேன். நான் ஒருவன்மேல் ஏற்கனவே காதல் கொண்டுவிட்டேன். அவனையன்றி வேறொருவரை நான் கனவிலுங் கருதேன். அவ்வாறிருக்க வேறு வரனைத் தேடுவதில் பயனென்ன!

பஞ்:—(ஆச்சரியமடைந்து) என்ன! ஏற்கனவே நீ ஒருவனிடம் காதல்கொண்டு விட்டாயா! அதனுல் வேறு வரனைத் தேடுவதில் பயனில்லையா!

நீல:—இந்த அக்கிரமத்தை வேறு எங்கு போய் சொல்வது! படிக்கவைத்ததன் லாபத்தைப் பார்த்தீரா! தந்தை தாயர் பார்த்துப் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடி வைப்பதா? பெண்ணே வரனைத் தேடிக்கொள் வதா? எல்லாம் தலை கீழாய் இருக்கிறதே!

பஞ்:—ஆமாம். மனோகரி! நீ யாரைக் காதலித்தி ருக்கிருய். அவரைச்சொல்; பார்க்கலாம்.

மனோ:—நான் காதலித்துள்ள ஆடவன், எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமானவன்; உயர்தர பட் டம் பெற்றவன்; அழகு நிலையமென்னத்தக்கவன்; கலா சாலையில் என்னோடு ஒன்ருய் படித்தவன். அவனுக்குத் தாய் தந்தையர் யார் எனத் தெரியாது. அவன் பெயர் (சிறிது தயங்கி) வ...சீ...க...ர...ன் என்பதாகும்.

பஞ்:—(பெரிதும் வியப்பும் திகைப்புமெய்தி) யார் வசீகரனு! ஆதிதிராவிடப்பையல். ஆதிதிராவிடப்பெண் ணெருத்தியால் வளர்க்கப்படுபவன். அவனு! பரமஏழை. உண்மையைச் சொல் மனோகரி! உள்ளதைச் சொல்.

மனோ:—ஆம் அப்பா! அவனே! அவ்வுத்தமனே! என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன்.

(பஞ்சாப கேசய்யர் சித்திரப்பதுமைபோல் திகைப்புற்று நிற்றல்.)

நீல:—(ஓவென அழத்தொடங்கி) என்ன பறை யனு! பறையனையா கணவனுகக் கொண்டாய்? பேஷ்!

இங்கிலீஷ் படித்ததன் பயனென்ன! இதுதானே! ஐயோ இவ்வாறு கெட்டுவிட்டாய். அடிபாவி! குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பே! இதனை யூரார் அறிந்தால் காரியுமிழ்வார்களே! குடிமுழுகிப் போய்விட்டதே! கடைசியில் இவ்வாறு முடிந்தது. (கணவனைப் பார்த்து) இவ்வளவுக்கும் காரணகர்த்தா நீங்களே! அவளைக் குழந்தை குழந்தையென்று செல்வங்கொடுத்து இவ்வளவுதூரம் கெடுத்துவிட்டீர்கள். இப்போது என்ன செய்யப்போகிறீர்கள்? ஐயோ நான் என் செய்வேன். (கையை முறித்துக்கொள்ளல்.)

பஞ்:—மனோகரி! இவ்வாறு கெடுவாயென்று நான் கனவிலும் நினைக்கவில்லையே! ஒரு பெண்ணென அருமையாக வளர்த்தேன். அதற்குப் பலன் கை மேல் கொடுத்துவிட்டாய். (துக்கம் மேலிட) யாவராலும் தீண்டப்படாதானென வெறுக்கப்படு மொருவனை—அதிலும் ஏழையைக்—காதலனாக வரித்துக்கொண்டாய். உனக்கு ஏன் இவ்வாறு புத்தி போயிற்று. (கெஞ்சுதலாய்) மனோகரி! சொல்லுகிறேன்; கேள். இவனை நீ மறந்துவிடு. ஊராரெல்லாம் இதைக்கேட்டால் நம்மைப் பழிப்பார்கள். நம் குலத்திலேயே நன்றாகப் படித்த—அழகுடைய—அதிலும் செல்வமுடைய ஒருவனைக் கலியாணஞ்செய்து வைக்கிறேன். அம்மா! அதுவே நம் குலத்திற்குப்பெருமையைத் தருவது! உன் எண்ணத்தை மறந்துவிடு. நீ தீர யோசித்துப்பார். வீணாய்க்கெடாதே. நான் உனக்கு நன்மையைச் செய்யும் தகப்பனல்லவா!

மனோ:—என்ன அப்பா! இவ்வாறு பேசுகிறீர்கள். காங்கிரஸில் சேர்ந்து பெரிய பேச்சாளராக விளங்கி,

சீர்திருத்தத் தலைவராகத் திகழ்ந்து—மக்களுள் உயர்வு தாழ்வு கிடையாது. தீண்டப்படாதானென்று நம்முள் ஒருவனை ஒதுக்கிவைத்தல் பாவம். இவ்வேற்றுமை யெல்லாம் ஒழியவேண்டுமானால் யாவரும் உண்ணல் கலத்தல்களில் பேதமின்றி யொழுகவேண்டும். கலப்பு விவாகம் இச்செருக்கை யொழித்தற்கு அடிப்படையானது—என்று முழக்கஞ்செய்யும் நீங்கள் இவ்வாறு பேசுகிறீர்களே! அப்பேச்செல்லாம் அதுவரைக்கும் தான் போலும்! உம்முள் திருத்தமடைய முயற்சிக்காத நீர், உலகத்தைச் சீர்திருத்த முயல்வது நன்று. நீங்கள் எவ்வாறுரையினும் சொல்லிக்கொள்ளுங்கள். என் எண்ணத்தை ஒருக்காலும் மாற்றமுடியாது. என்னைப் பலர் இகழ்ந்தாலும் சரியே! நான் இதையெல்லாம் மதியேன். என் முடிவு இது தான். அப்புறம் உங்களிஷ்டம். (அவ்விடம் விட்டு தன் அறையை அடைதல்.)

நீல:—பார்த்தீரா! நான் சொல்லி வந்ததெல்லாம் அப்போது நாகரீகமற்ற பேச்சாயிருந்ததே! இப்போது பாருங்கள். அதனுடைய பலன் கூடிய சீக்கிரம் கிடைத்துவிட்டது. மனோகரிக்கு ஆங்கில படிப்புவேண்டாம்; வேண்டாம் என்று சொன்னேன். அதையெல்லாம் கேட்டீர்களா! இப்போது அவ்வினை வந்து மூண்டுவிட்டது.

பஞ்:—(தனக்குள்.) உண்மையே! அப்போது நீலா சொன்னதையெல்லாம் நாகரீகமற்ற பேச்சாகவே கருதினோமே! தமிழ்க்கல்வியும் சங்கீதமும் கற்றுக் கொடுத்தால்போதும். வெள்ளைக்காரப் படிப்புவேண்டாம் என்று வாயோயாது கூறினாள். அதை நாம் மதித்

தோமில்லை. பின்னர் கலாசாலைப் படிப்பைப் படிக்கும் போது பெண்கள் வாசிக்கும் கலாசாலையிலாவது அனுப்புங்கள் என்றாள். நாம் ஆண்களுடனே படிக்கவைத்தோம். அதன் பலன் கிடைத்துவிட்டது. இனி என் செய்வது. மனோகரி ஒரே பிடிவாதமாய் இருக்கிறாள். அவள் மனத்தை மாற்றமுடியாது போலிருக்கிறதே! இன்னும் சற்றுப் பொறுத்துப் பார்ப்போம். கடவுள் விட்டபடி ஆகட்டும். நாம் என் செய்வது. (பஞ்சாமகேச ஐயர் போதல்.)

களம் II இடம்:—ஆற்றோரம்.

அங்கம்: 1 காலம்:—மாலை.

(மனோகரி ஆற்றினோரமாக உலவிக் கொண்டிருத்தல்.)

மனோகரி:—(தன்னந்தனியே பேசத் தொடங்கி) நேற்று நடந்த நிகழ்ச்சி என் நெஞ்சத்தைவிட்டு இன்னும் நீங்கவில்லையே! என்கண்முன் நடனஞ் செய்கின்றதே! காதில் என் தகப்பனார் பேசிய வார்த்தைகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. என் தகப்பனார் இவ்விதமிருப்பாரென்று கனவிலு மெண்ணியதில்லை. தேசீய கக்ஷிகளில் தலைசிறந்து விளங்குமிவர்—சீர்திருத்தத்தில் முற்போக்குடையவரென்று பல்லோராலும் புகழப்பட்டுத் திகழுமிவர்—சாதி வேற்றுமை, தீண்டாமை, பெண்ணுரிமை கடிதல், கலப்புவிவாகம் இவைகளைப் பற்றிச் சீரிய முறையில் ஆராய்ச்சிசெய்து அறிஞர் யாவருமொப்பச் சொற் பொழிவு செய்தும், நூல்களெழுதியும் மக்கள் சமரச வாழ்க்கைக்கு அடிகோலுமிவர், இவ்வாறு தன்னளவிலேயே அம்மூட பழக்க வழக்கங்களைவிடாது வைதீகக் கோட்டிகளுக்கு அஞ்சி நடப்பாரானால், மற்றவர்களின் கதி என்ன ஆகும்? இவர் செய்கை சொல்வதொன்றும் செய்வதொன்றுமாக வல்லவோ இருக்கிறது! தன்னைச் சீர்திருத்திக்கொள்ள இயலாத இவரா உலகத்தைச் சீர்திருத்தப்போகிறார்! சீர்த்திருத்தக் காரன் என்று சொல்லிக்கொண்டு பாமர

மக்களை யேமாற்றும் இவர் செய்கை அறக் கொடிது! அறக் கொடிது!—வைதீகக் கோட்டியினரின் எதிர்ப்புக்கு அஞ்சித் தன் சீரிய கொள்கைகளை விட்டுக்கொடுக்கும் இவரின் பேதைமைதான் என்னே!—என் தகப்பனுர் என்ன சொன்னுலும் வசீகரனிடம் கொண்ட காதலை மாற்றவே மாட்டேன். இதனுல் என்ன துன்பம் வந்தாலும் வருக! அதனை நான் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வேன். என் காதலனுல் வரும் துன்பம் எனக்கு இன்பமாகும். இதனைவிட யான் அடையும் பேறு என்ன!—வசீகரன் இன்னும் வரவில்லையே. மணி என்ன இருக்கும்? (மேற்கே அஸ்தமிக்கும் சூரியனைப் பார்த்து.) ஓ! யான் சீக்கிரம் வந்து விட்டேன். இங்கு இருக்கும் கற்பாரை மீது உட்காருவோம். இக்கற்பாரை இங்கு அரசன் உட்காரும் சிம்மாசனம் போன்றிருக்கிறதே! தரையிலெல்லாம் பசிய புற்கள் முளைத்துப் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றது. (கற்பாரைமீது அமர்தல்.) ஆ! இறைவா! என் குறையை முடிக்கும் நாள் எந்நாளோ! உன்னை நம்பினேரை நீ கைவிடுவாயோ! (பாடுதல்.)

"திருவே! யென்செல்வமே! தேனே! வானோர்
செழுஞ்சுடரே! செழுஞ்சுடர் நற்சோதிமிக்க
உருவே! யென்னுறவே! யென்னூனே! யூனி
னுள்ளமே! யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவே! யென்கற்பகமே! கண்ணே! கண்ணிற்!
கருமணியே! மணியாடு பாவாய்! காவாய்,
அருவாய வல்வினைநோ யடையா வண்ண
மாவடுதண் டுறையுறையு மமர ரேறே"

கருணையே வடிவாய பெம்மான் இருக்க, யான் ஏன் அஞ்சவேண்டும்? அவன் கருதுவானுனல் ஒரு விநாடியில் யாவும் முடியும். (அன்பு மேலீட்டால் கண்ணீர் ஒழுக மெய்ம்மறந்து பதுமை போன்று இருந்தவள், எதிரிலுள்ள மாமர மொன்றின் மீது பைங்கிள்ளை யொன்று உட்கார்ந்திருத்தலைக் கண்டு)

"சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனெடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத்தொடுதரளத்
துறையாருங் கடற்றேணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே"

(என்று உளங்கனிந்து கேட்பார் மனம் உருகப் பாடினுள். இதுகாறும் பின்னின்று மஞ்ஜேகரி பாடிய பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த வசீகரன் முன்வந்து)

வசீகரன்:—என்ன இனிய குரல். கண்ணே! கோகிலமும் நின் குரலைக் கேட்டு வெட்க மடையுமெனில் வேறு என் சொல்வது. அப்பர் சுவாமிகளின் அருமைப்பாடலே ஓதுவா ருள்ளத்தை நீராயுருக்கும் தன்மை வாய்ந்தது. அதிலும் நின்வாயால் கேட்டால் உயிரைக் கௌவுமென்று சொல்ல வேண்டுமோ!—காதலி! துளங்குமிளம் பிறையாளன் திருநாமத்தை ஒருகால் பேசினுல் சிறையாரும் மடக்கிளிக்குத் தேனெடுபால் உண்ணத் தருவாயோ! யான் அக்கருணையாளனின் திருநாமத்தைச் சொன்னுல் தேனெடு பால் உண்ணத் தரமாட்டாயோ! அப்பைங்கிள்ளைக்குக் காட்டும் அன்பு கூட எனக்குக் காட்டமாட்டாய் போலும்.

மஞ்ஜேகரி:—(திடுக்கிட்டு எழுந்து) ஆ! காதலா! வந்தனையா! நீ வேண்டுவனவற்றை உனக்குத் தராது

வேறு யாருக்குத் தரப்போகிறேன்? தேனொடு பால் மட்டுமோ தருவேன்! என் உயிரையே கேட்டாலும் தரச் சித்தமாயிருக்கிறேன்.— அன்றே—என்றன் ஆவியும் உடலும் உடைமையும் எல்லாமும் என்னைத் தண்ணளி கொண்டு ஆண்டபோதே கொண்டிலையோ! அங்ஙன மிருக்க, இவ்வாறு கூறுவதேன்?

வசிகரன்:—என் அன்பே! அமுதனையாய். உன்னைக் காதலியாகப் பெற்ற என் புண்ணியமே புண்ணியம். உன்னாலன்றோ யான் இன்புற் றிருக்கிறேன். உன் வதனத்தைக் கண்டபோதே என் கவலையெல்லாம் பறந்தோடுகின்றது. நீ இன்றேல் எனக்கு இவ்வுலகம் வெறும்பாழே.—கண்மணி! உன் மெல்லிடை பசுங் கொடி போன்று தள்ளாடுகின்றது. உட்கார் கரும்பே! (என்று கூறிவந்தவன் காதல் மேலீட்டால் மனோகரியை யணுகி அவளை மார்புறத் தழுவிக் கொவ்வைக்கனி போன்ற அதரங்களில் முத்த மிட்டான்.)

(இச்சமயம் வெங்கடேச பத்தர், சுப்பண்ண சாஸ்திரி, சந்தானகிருஷ்ணன் ஆகிய மூவரும் பிரவேசித்தல்.)

பத்:—(மெதுவாக) இதோ பார்த்தீர்களா! நான் சொல்லியது மெய்யாயிற்று! சபதமெல்லாம் என்னாயிற்று. அய்யரவாள்! வைத்துவிடும் இரண்டாயிர ரூபாயையும். நான் அப்புறம் வீட்டுக்கு வருகிறேன். நான் ஒரு வேலையின் பொருட்டு விரைவாகச் செல்ல வேண்டும். போய்வருகிறேன். (என்று மனோகரிக்கும் வசிகரனுக்கும் தெரியாமல் மறைந்து விடுகின்றார்.)

சுப்:—(மிகப் பதை பதைப் பெய்தி) என்னடா சந்தானம்! அவளா அவ்வாறு இருக்கிறாள். அவள் மனோ

கரிதானு! மனேகரி அவ்வாறு செய்வாளா! என்மனம் நம்பமாட்டேனென்கிறதே! நான் காண்பது கனவா!

சங்:—(கோபமும் அவமானமுமுற்று) அவள்தான். அந்தப் பறப்பயலோடு இருப்பவள். அவளே என் செய்வது? (என்று பல்லே நறநற வென்று கடித்துக் காதலர்களே நெருங்கி) நன்ருயிருக்கிறது உங்கள் செய்கை. மனேகரி! நீ இவ்வாறு கெட்டுவிட்டாய். (இதற்குள் சுப்பண்ணு சாஸ்திரியும் அங்கு வந்து சேர்தல்.)

(இவர்களேக் கண்ட மனேகரியும் வசிகரனும் திகைப் பெய்தி ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து ஓவியப் பதுமைபோல் நின்ருர்கள்.)

சுப்:—குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம் பே! உனக்குப் பறையன்தானு அகப்பட்டான்? அவ னேடு கள்ள நட்புக் கொண்டு சரசசல்லாபஞ் செய்து கொண்டிருக்கிருயா! வெகு நன்று. நீ பி. ஏ. பரீக்ஷை தேறிப் பாழாய்ப் போனது. ஆங்கிலக் கல்வி கற்றதின் பயன் இதுதானே!

சங்:—தகாத செயலேச் செய்யும் இவர்களேக் குத் திக் கொன்று விடட்டுமா! பாவிப்பயல். என்னமாய் இருக்கிருன் பார். இவ்வளவு துணிவு வந்துவிட்டதா உனக்கு! உன்னே லேசில் விடுகிறேனு பார். (என்று வசிகரனேச் சீறி விழித்தான்.)

மனே:—என்ன ஓய். சும்மா ஏதேதோ பிதற்று கிறீர். அதிகமாக ஒன்றும் பேசாதேயும். உம்

முடைய அதிகாரம் இங்கு ஒன்றும் பலிக்காது. தெரியுமா!

சுப்:—மனோகரி! இவ்வளவு துணிவு வந்து விட்டதா! தகாத செயலைச் செய்வது மல்லாது தைரியத்தோடுபேசவும் ஆரம்பித்துவிட்டாயே! இப்படி பேசினால் நாங்கள் பயந்து போய்விடுவோம் என்று நினைக்கிறாயா! உன் தகப்பனாருக்கு உன் செய்கையைச் சொல்லிக் கண்டிக்கும்படியாகச் செய்வது மல்லாது, ஊராரெல்லாம் உன்னைக் காரியுமிழ்ந்து இகழும்படி செய்கிறேன். ஏ! படு பாதகா! உன்னை லேசில் விடுவதில்லை. உனக்குத் தகுந்த தண்டனை செய்து வைக்கிறேன். உன்னைச் சித்திரவதை செய்து கொல்லவேண்டும்.

மனோ:—ஐயா சாஸ்திரியாரே! உங்கள் சாஸ்திரக் குப்பை மூட்டைகளை யெல்லாம் இங்கு அவிழ்க்காதீர்கள். நீர் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். என் தகப்பனாரிடமும் சொல்லுங்கள். ஆனால் என் காதலரை ஏதாகிலும் அவதூறாகப் பேசினீரானால் அப்புறம்...............

சங்:—அப்புறம் என்ன செய்து விடுவாய்? அப்படியே எரித்து விடுவாயா? அன்றி உன் காதலரைக் கொண்டு ஏதாகிலும் செய்யச் சொல்லுவாயா? ஏ! பெண்ணுருவெடுத்த பேயே! உன் தைரியமே தைரியம்.

வசி:—ஐயா! அதிகம் பேசாதேயும். அப்புறம் மரியாதை கெட்டுவிடும். ஒரு பெண்ணை இவ்வாறு பழித்துப் பேசுவது தகாது. வீணாக உமக்கு இடரையுண்டாக்கிக் கொள்ளாதீர்!

சுப்:—ஏ! பஞ்சமப் பயலே! உனக்கு இவ்வளவு அகங்காரமா! எங்கள் பெண்ணைக் கண்டித்தால் நீ யாரடா? காதலிக்குப் பரிந்து பேசுகிருயா? உன்னைச் சுண்ணும்பு கால்வாயில் போட்டுக் கொல்லவேண்டும்.

மனே:—(பொறுக்க முடியாத கோபங் கொண்டு) மூட சிகாமணிகளே! இவ்விடத்தை விட்டுப் போகிறீர்களா என்ன? இனி யேதாகிலும் பேசுவீர்களானல் உங்களுக்குத் தகுந்த பரிசு கிடைக்குமென்பதை நினைவில் வையுங்கள். நீங்கள் செய்வதை யெல்லாஞ் செய்து கொள்ளுங்களேன். இங்கு என்ன வேலை?

(சுப்பண்ணு சாஸ்திரியும் சந்தான கிருஷ்ணனும் தங்கள் பயமுறுத்தல் இனி பயன்படாதென் பதைத் தெரிந்து அவ்விடம் விட்டுச் செல்லுதல்.)

சந்:—(தனக்குள்.) மனேகரியின் செய்கை தான் என்ன! அவளிடம் நான் எவ்வளவு ஆசை வைத்திருந்தேன். அதில் மண்ணைப் போட்டுவிட்டாளே! இனி என் செய்வது! அவள் அழகையும், சாதுரியமான இனிய பேச்சையுங் கேட்க கேட்க ஆசை அதிகரிக்கிறதே அல்லாது குறைந்த பாடில்லையே! அவளை எவ்வாறடைவது? அவளின் சுருண்டு இருண்ட கூந்தலும், தங்கத் தகடுபோல் பிரகாசிக்கும் நெற்றியும், மதனனது பூங்கணைபோன்ற இரு புருவங்களும், செவ்வரி படர்ந்த மாவடு போன்ற கண்களும், எள்ளைப் போன்ற நாசியும், வள்ளைக் கொடி போன்ற காதுகளும், கஞ்சன மன்ன கன்னங்களும், குமுதம் போன்ற துடிக்கு மிதழும்,

பவளப் பெட்டியில் வரிசையாக வைத்த வெண்முத்துப் போன்ற பற்களும், சங்கு போன்ற கழுத்தும், குயிலினு மினிய குரலும் காண்பார் உயிரைக் கொள்ளை கொள் வனவன்றோ! ஒரு நாளாயினும் அவளோடு கூடியிருந் தால் என் பிறப்பு பயன் பெறும். பத்தரைக் கொண்டு தான் இதனைச் சாதித்துக் கொள்ளவேண்டும். அவர் வெகு சமர்த்தர். எப்படியும் என் கருத்தை முடித்து வைப்பார். பார்க்கலாம்.

(இவர்கள் நெடுந்தூரஞ் செல்லும் வரையும் பார்த்துக்
கொண்டிருந்த காதலர்கள், அவர்கள் கண்ணில்
படாது மறையவும், அப்போதே சரியாக
மூச்சுவிடத் தொடங்கினார்கள்.)

மனோ:—அசடுகள் ஒழிந்தன. அவைகள் பிதற் றியதை மனதில் வைக்காதீர்கள். நாதா! வாருங்கள்; போகலாம். (என்று இருவரும் ஒருவர் தோள்மீது மற் றொருவர் கையைப் போட்டுக்கொண்டு செல்லுதல்.)

களம் II. இடம்:—குஞ்சிதபாதமய்யரின் வீட்டு வெளிப்புறம்.

அங்கம் 2. காலம்:—இரவு.

(பத்தர் குஞ்சிதபாதமய்யரின் வீட்டினுள்ளிருந்து வெளியே வந்துக்கொண்டிருத்தலும், சுப்பண்ணு சாஸ்திரியும் சந்தானகிருஷ்ணனும் அவரை எதிர்ப்படலும்.)

சுப்:—யாரது?

பத்:—என்ன ஐயா சாஸ்திரியாரே!

சுப்:—ஓ பத்தரா! என்ன இங்கிருந்து வருகிறீரே; நம் குஞ்சிதபாதத்தைப் பார்த்தீரா, என்ன!

பத்:—பார்க்காம லிருப்பேனு! அதுமாத்திரமோ! ஆற்முரத்தில் நாம்கண்ட காட்சிகளையெல்லாம் வெளிப் படையாகவும் சொன்னேன்.

சுப்:—குஞ்சிதபாதம் என்ன சொன்னுன்?

பத்:—என்ன சொல்வது! இச்சங்கதிகளைக் கேட் டதும் பதைபதைத்துப் போய்விட்டார். கையைப் பிசைந்து கொள்ளுகிருர். பெருமூச் செறிகிருர். "மோசம் போனேன்" என்று அலறுகிருர். அவர் உயிர் அவரைவிட்டுப் போய்விட்டதென்றே சொல்ல

வேண்டும். அவர் என் செய்வார் பாவம்; நல்ல மனிதர்.

சங்:—மனோகரியின் காதலன் ஆதித்திராவிடன் என்பதை அவருக்குத் தெரிவித்தீரா?

பத்:—எல்லாம் தெரிவித்தாயிற்று.

சுப்:—சரி; சந்தானம்! நீ பத்தரோடேயே வீட்டுக்குப் போய்ச்சேர். நான் குஞ்சிதபாதத்தைப் பார்த்து விட்டு வருகிறேன். (அவர் வீட்டினுள் போதல்.)

(சந்தான கிருஷ்ணனும், பத்தரும் தங்கள்
வீட்டை நோக்கி நடத்தல்.)

சங்:—பத்தரே! நீங்களே பந்தயத்தில் வெற்றி பெற்றீர்கள். ஆனால் ஒன்று....................

பத்:—ஆனால் ஒன்று...........என்ன?

சங்:—உங்களிடம் சொல்வதற்கு என்ன; ஆனால் அக்காரியத்தை முடித்துக் கொடுக்கிறேனென்று வாக்குறுதி தருவீரானல் சொல்லுகிறேன். உங்களால் முடியாதது என்ன இருக்கிறது.

பத்:—அது என்ன காரியம். என்னால் அக்காரியம் முடியுமானல் உனக்கு முடித்துக் கொடுப்பதற்கு என்ன தடை. அவ்வாறு செய்து தருகிறேன். சந்தானம்!

சங்:—வாக்குறுதி செய்தபிறகு காரியம் வெற்றி பெற்ற மாதிரிதான். ஐயா! வேறொன்றுமில்லை. மனோகரி இருக்கிறாளே! அவளைப் பலசமயம் பார்த்து

மிருக்கிறேன்; உரையாடியு மிருக்கிறேன். அப்போதெல்லாம் என் மனம் மயங்கியதில்லை. இன்று பார்த்தபோது அவளது கண்கவர் வனப்பும், சொற்சாதுரியமும் என்னை முழுவதும் மாற்றிவிட்டன. அவளுக்கு யான் அடிமையாயினேன். ஆதலால் அவள் ஆதிதிராவிடனோடு கள்ளநட்பு கொண்டிருப்பினுஞ் சரி; அழகு நிலயமாகிய அம்மனோகரியை எவ்வாறேனும் மணமுடித்து வைப்பது உங்களது வேலை. உங்களையே நான் நம்பியிருக்கிறேன்.

பத்:—சந்தானம்! இப்பரந்த உலகத்தில் எத்தனையோ பெண்கள் அழகுக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றனர். அவர்களையெல்லாம் விடுத்து மனோகரியையே மணக்க மனம் கொண்டு இருக்கிறாயே! (தனக்குள்) எப்படியானால் நமக்கென்ன. நம் வருவாய்க்கு ஏதுவாயிருப்பதை ஏன் விடவேண்டும். நமக்கு இப்போது சுக்கிரதிசை என்றே சொல்லவேண்டும். (வெளிப்படையாக) மனோகரி தான் அந்த ஆதிதிராவிடனைக் காதலித்திருக்கிறாளே! அவள் எப்படி உன்னை மணஞ்செய்ய விரும்புவாள். ஏதாகிலும் வழி சொன்னால் அதன்படி செய்கிறேன்.

சங்:—பத்தரே! உமக்குத் தெரியாத வழியா எனக்குத் தெரியப்போகிறது. அந்த ஆதிதிராவிடப் பயல் இருக்கிறானே, அவனைப் பயமுறுத்தி எங்கேயாகிலும் விரட்டி யடித்துவிட்டால் பிறகு மனோகரி வேறுவழியில்லையென்று என்னை மணஞ் செய்துக்கொள்ள சம்மதிப்பாள். அப்படி அவனை விரட்டியடிக்க முடியாவிட்டால் இதோ இந்த கத்தியால் குத்திக் கொன்றுவிட்டுக்

காரியத்தை முடித்துவிடுங்கள். (என்று தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்துப் பத்தர் கையில் கொடுத்தல்.)

பத்:—(ஆச்சரியமுற்று) ஆ! என்ன எண்ணம் கொண்டுவிட்டாய். இவ்வளவு துணிகரம் உனக்கு எங்கிருந்து வந்தது? ஆமாம். நான் வசீகரனைக் குத்திக் கொன்றுவிட்டால் அகப்பட்டுக் கொள்ளமாட்டேனா? நான் எப்படிப்போனால் உனக்கென்ன; உன் காரியம் முடிந்துவிட்டால் போதுமென்றிருக்கிறாய் அல்லவா!

சங்:—சே! அவ்வளவு முட்டாளென்று என்னை நினைத்தீர். உம்மை அவ்வாறு அகப்படும்படி செய்வேனா? நான் சுயநலப் புலியென்று நினைத்தீரா! அந்தக் கத்தியில் என்ன பொறிக்கப்பட் டிருக்கிறது பாரும்.

பத்:—(கத்தியைப் பார்த்து வியப்பெய்தி) மகா சமர்த்தன். எல்லாம் முன்னெச்சரிக்கையாக ஏற்பாடு செய்து வந்திருக்கிறாயே! நல்ல யோசனையே!

சங்:—அப்படியொன்றுமில்லை. இவ்வேற்பாடெல்லாம் உமக்காகவே செய்தது. நீர் மனோகரியைப் பற்றி எங்களிடம் இழித்துப்பேசிச் சபதஞ்செய்துவிட்டு போனீரல்லவா! நீர் சபதஞ்செய்துவிட்டு சென்றபடி மெய்ப்பிக்காவிட்டால் உம்மைக் குத்திக்கொன்று விடுவதென்று இவ்வேற்பாட்டினைச் செய்தேன். ஆனால் நீர் தப்பித்துக்கொண்டீர். உம்முடைய திசை வசீகரனுக்குச் சென்றுவிட்டதுபோலும்! இச்சூழ்ச்சியை யாரும் கண்டுபிடிக்க முடியாது. தற்கொலையென்றே எண்ணுவார்கள்.

பத்:—பலே! எனக்கே வேலை வைக்கப் பார்த்தாயா! பிராமணர்கள் எது செய்வதற்கும் அஞ்சமாட்டார்கள் என்கிறார்களே! அது மெய்யாய்விட்டது. சரி; உன் எண்ணத்தின்படி யாவும் முடித்து வைத்துவிட்டால் பிறகு......................

சங்:—அதெல்லாம் சரியான வெகுமானம் கொடுப்பேன். நான் ஒன்றும் மறக்கமாட்டேன். கூடிய சீக்கிரம் முடித்துவிடவேண்டும். நாளைக்கு உங்கள் வீட்டிற்கு வருகிறேன்.

பத்:—சரி; நாளைக்கு வா. நான் காரியத்தை யநேகமாக முடித்து மனோகரியை என் வீட்டிற்கு அழைத்து வருகிறேன்.

சங்:—உம்மைத்தான் நம்பி யிருக்கிறேன். நாளை அவசியம் வருகிறேன். மனோகரியை அழைத்து வர மறந்துவிடாதீர். போய்வருகிறேன். (சந்தான கிருஷ்ணன் வீட்டுக்குச் செல்கிறான்.)

(பத்தர் போகிற வழியில் வசீகரனைச் சந்தித்தல்.)

வசீ:—உங்களைத்தான் தேடி வருகிறேன். ஐயா!

பத்:—என் வசீகரா! எதற்காக என்னைத் தேடிவந்தாய்?

வசீ:—நீங்கள் மனோகரிக்கும் எனக்குமுள்ள சம்மந்தத்தைத் தெரிவிப்பதில்லை யென்று வாக்களித்தீரே; அவ்வாறு நடந்தீரா! சுப்பண்ண சாஸ்திரியையும் அவர் மகனையும் நாங்கள் கூடுமிடத்தில் கொண்டுவந்து காட்டினீர். உம்முடைய யோக்கியதையே யோக்கியதை!

பத்:—நானு அவர்களைக்கொண்டுவந்து விட்டேன்! (கோபங் கொண்டவர்போல் நடித்து) இவ்வாறெல்லாம் என்னிடம் பேசாதே. எனக்கு இது தானு வேலை? யார் எப்படிப்போனால் எனக்கென்ன!

வசி:—ஐயா பத்தரே! கோபித்துக் கொள்ளாதீர். நீங்கள் தான் அவர்களுக்கு ஒருவேளை சொல்லியிருப்பீரோ என்று நினைத்தேன். இப்போது அதனால் ஒன்றுமில்லை. பெரியவராகிய உம் போன்றவர் கிருபை யிருந்தால்போதும். உங்கள் உதவிதான் வேண்டியிருக்கிறது. மணியாய் விட்டது. போய் வருகிறேன்.

பத்:—போய் வா! வசிகரா! இன்னும் இரண்டொரு நாளில் என்னை வந்து பார். உன்னிடம் ஒரு சங்கதி சொல்லவேண்டி யிருக்கிறது. மறந்து விடாதே! தெரிகிறதா! போய் வா!

வசி:—நான் மறக்கமாட்டேன். அவசியம் வருகிறேன். போய் வருகிறேன். வந்தனம். (இருவரும் பிரிந்து போதல்.)

களம் :—II. இடம்:—பத்தரின் வீடு.

அங்கம்:—3. காலம்:—மாலே.

(சந்தான கிருஷ்ணன் பத்தரின் வீட்டை நாடி வருதல். அச்சமயம் பத்தரின் மகள் சுந்தராங்கி வீணையை மீட்டி பாடிக்கொண்டிருத்தல்.)

சுந்தராங்கி:—(பாடுகிருள்.)

ராகம்—சக்கரவாகம். தாளம்—ஆதி.

(ப) இங்கா தயராலேதா நாபை
இந்த பராமுக மேலநைய (இ)

(அ) பங்கஜாஸந த்யமரவந்தித
பங்கேரு ஹாக்ஷ பதித தைத் யவிக்ஷ. (இ)

(ச) ஸந்ததம்பு நீ ஸத்கதலனு விநி ஸந்தோஷ
முகானு பஜநஸேயுசு
சிந்த தீர்ச்சி நன்னு ப்ரோவுமநிநி நெந்தோ பொகடு
கண்டக
இடு பந்த மியால ஜேஸேவு தெலுபுமு பதிதபாவந
ச்ருத
ஜநாவநி தந்திவரத ஸ்ரீ வெங்கடேச தாநவகுல
பீகரா ஸ்ரீகரா (இ)

(சந்தான கிருஷ்ணன் சுந்தராங்கி பாடுவதை உற்றுக் கேட்டல்.)

சந்:—ஆ! என்ன இனிய குரல். வானலோக மேனகையே இங்கு வந்து பாடுகிறாளோ! இக் கோகிலத்தினுமினிய குரலுடையாள் யாவளோ! இன்னுஞ் சற்று நேரம் அவ்வனிதை பாடுவதை இங்கிருந்தே கேட்டு இன்புறவோம். ஒருவேளை நம்மைக் கண்டால் அவள் பாடுதலை நிறுத்தி விடுதலும் கூடும். (உற்றுக் கேட்டல்.)

சுந்:—(மீண்டும் பாட்டைப்பாடி ஸ்வரத்தோடு கலத்தல்.)

(ப) மகரிஸா மாமபாமபா பா பமகரி ஸரிகா
இங்கா தயரா லேதா நா பை

சந்:—பலே பேஷ்.

சுந்:—மகரிஸா மாமபாம கமபத தாநிதபா பமகரி ஸரிகா
இங்கா தயரா லே தா நா பை.

சந்:—ஆ! இதல்லவோ பாட்டு. என்ன சுகமான சாரீரம்.

சுந்:—மகரிஸா மாமபாம கமபத தாநிதபா பாத பமா மாபமகாரி ஸரிகா
இங்கா தயரா லே தா நா பை.

சந்:—ஆஹா! ஆ! இதல்லவோ சங்கீதம். தியாகராஜய்யரே இங்குவந்து ராமபிரானை நோக்கி யுருகிப் பாடுகிறாரோ! இவ்வளவு இனிமையாக யார் பாடக் கூடும்? பத்தர் சொன்னபடி மனோகரியை யழைத்து வந்திருக்கிறாரோ! அவள்தான் பாடுகிறாள் போலும்.

ஆமாம். இங்கு வேறு யார் இவ்வளவு வல்லமையோடு பாடக் கூடும்? அவளே! மனோகரியே! காமக்களஞ்சிய மாகிய என் கண்மணி மனோகரியே! இப்போதே அவளைச் சென்று காணவேண்டும். இனி என்னால் அவளைக் காணாம லிருக்கமுடியாது. (உள் செல்லு கிறான்.)

சுந்:—(பாட்டை நிறுத்திவிட்டு) ஐயா! தாங்கள் யார்? யாரைத் தேடி வந்தீர்கள்?

சங்:—(காமப் பித்தம் அதிகரித்து விட்டபடியால் சுந்தராங்கியை மனோகரி என்றே எண்ணி) நான் யாரென்று தெரிய வில்லையா? உன்னையன்றி வேறு யாரைத் தேடிக்கொண்டு வரப்போகிறேன். கண்ணே!

சுந்:—என்ன ஐயா! பித்தம் பிடித்தவர்போல் பேசுகிறீர். நீங்கள் யார்? எங்கிருந்து வந்தீர்கள்? யாரைத் தேடிக்கொண்டு வந்தீர்கள் என்றால் ஏதேதோ பிதற்றுகிறீரே! முன்பின் உங்களை நான் பார்த்தது கிடையாது; நீங்கள் யாரென்றும் தெரியாது. அப்படி யிருக்க, என்னைத் தேடிக்கொண்டு தான் வந்தேனென்கி றீரே! நன்றாயிருக்கிறது உமது பேச்சு.

சங்:—மனோகரிக் கண்ணே! உன் சாமர்த்தியமே சாமர்த்தியம். நிறுத்து உன் சாகசத்தை. பத்தர் உன்னை எப்போது இங்கு அழைத்து வந்தார்? அவர் எங்கே? சொல். இனியும் ஒன்றுந் தெரியாதது போல் நடிக்க வேண்டாம்.

சுந்:—இதென்ன ஆச்சரியம். மனோகரியா! அது யார்? நான் மனோகரி அல்ல ஐயா! பத்தரின்.........

ஐயா நான். அவர் ஏதோ காரியமாய் வெளியே சென்றி ருக்கிருர். நீர் வந்த சமாசாரம் என்னவென்று சொன் ஞல் அவர் வந்தவுடன் சொல்லுகிறேன்.

சங்:—ஐயோ! என் ஆருயிர் மனோகரி! இன்னுமா என்னை ஏமாற்றுகிருய்? அது கிடக்கட்டும். காத லியே! நான் வருவதற்குமுன் பாடின பாட்டை இன் னெருமுறை நான் கேட்கப் பாடுவாய். காதற்கரும்பே! செவிக்குத் தீஞ்சுவையை நல்குவாய். அவ்வாறு பாடுவ தற்குமுன் பவளம்போன்ற துடிக்கும் அதரத்தால் ஒரு முத்தம் தந்துவிட்டு செல்வாய். ஏ! அருமைக் கண்ணே!

சுங்:—மனோகரியா! காதலியா! கண்மணியா! முத் தம்கொடுத்துவிட்டுப் பாடுவதா! இதென்ன அக்கிரமமா யிருக்கிறதே! ஒரு பெண் தனியாய் இருக்குமிடத்தில் இவ்வாறு பேசுவது தகுதியல்ல ஐயா! மேலும் நீர் சொல்லும் மனோகரியும் நானல்ல; வேற்றுமைகூடத் தெரியாது பேசுகிறீரே! உமக்குக் காமப்பித்தம் தலைக் கேறிவிட்டது போலும். நீர் என்ன செய்வீர்!—தயவு செய்து நீர் இவ்விடத்தைவிட்டு இக்கணமே சென்று விடும். இனி இங்கு ஒன்றும் வார்த்தையாடவேண்டாம்.

சங்:—என்ன மனோகரி! மிகவும் கோபித்துக் கொள்ளுகிருய். உன்னையன்றி வேறு யாரைக் காதலி யென்றும், கண்மணியென்றும் அழைப்பேன். நீ எவ் விதமான உடையுடுத்துப் பெண்கள் கூட்டத்துள் இருந் தாலும் உன்னை அடையாளம் கண்டுபிடித்து விடுவேனே! அப்படியிருக்க, எனக்கு வேற்றுமை தெரியவில்லையென் றும், மனோகரி நீ யல்லவென்றும் கூறுகிருயே! நீ இன்

னுமா சாகசஞ் செய்கிருய்? உன் விளையாட்டு போதும். பண்ணுறு மொழிக்கிளிப் பாவாய்! நின் கிஞ்சுக வாயால் ஒரு முத்தம்கொடுத்து என்னைக் கட்டியணைவாய் மானே! (என்று கூறிக்கொண்டே அவளை நெருங்கிச் செல்லுதல்.)

சுந்:—ஐயோ! என்ன இக்காதகன் என்னருகில் நெருங்கி வருகிருனே! நான் என்ன செய்வேன். வீட்டில் யாருமில்லையே! என் தகப்பனுர் கூட இங்கு இல்லையே! இவன் கையி லகப்படாது தப்புவதெப்படி? எமன் போல் வழி மறித்து நிற்கிருனே! (என்று புலி வாய்ப்பட்ட மான்போல் மருண்டு இன்னது செய்வதென்று தெரியாது தன் கைகளால் இரு கண்களையும் பொத்திக் கொள்ளுதல்.)

(இச்சமயம் சந்தான கிருஷ்ணன் சுந்தராங்கியை
இரு கரங்களாலுஞ் சேர்த்து இறுகத் தழுவி,
அவள் மெய் பதருறக் கற்பைக் கொள்ளை
கொள்ளுதல்.)

(பத்தர் பிரவேசித்தல்.)

பத்:—(சந்தான கிருஷ்ணன் தன் மகளைப் பலாத்காரமாகச் சேர்தலைக் கண்டதும் வெகுண்டு) ஆ! அயோக்கியப் பயலே! என்னிடத்திலேயே நீ கற்ற வித்தையைக் காட்டிவிட்டாயே! பலே! நீ இவ்வளவிற்கு வந்துவிட்டாயா? (என்று சொல்லித் தன் இடுப்பில் செருகிவைத்திருந்த கத்தியை எடுத்துச் சந்தானத்தை ஓங்கிக் குத்துதல்.)

சந்:—ஆ!—ஐயோ! செத்தேன். (என்று அலறி வீழ்தல்.)

4

பத்:—(இரத்தங்குடித்த புலிபோல வெறி பிடித்து) ஆ! செத்தாயா! ஒழி கழுதையே ஒழி! ஆ! என் மகளே —என்னருமந்த மகளைப் பலாத்காரமாய்ப் புணர்ந்தானே! ஐயோ! கண்மணி! (குனிந்து பார்த்து) அந்தோ! செத்த பிணம்போல் இருக்கிறாளே! மகளே மாண்டாயோ! (மூக்கில் கையை வைத்துப் பார்த்து) மூச்சு இருக்கிறது. மூர்ச்சையா யிருக்கிறாள். தண்ணீர் தெளித்தால் மூர்ச்சை தெளியும். (என்று சுந்தராங்கி மூர்ச்சை தெளியுமாறு வேண்டியன செய்தல்.)

சுந்:—(மூர்ச்சை தெளிந்து) அந்தோ! நான் எங்கிருக்கிறேன். என்ன என் ஆடை குலைந்திருக்கிறதே! கை வளையல்களெல்லாம் கழன்றிருக்கிறதே! கூந்தல் அவிழ்ந்திருக்கின்றதே! என் தேகத்தில் வடுக்கள் காணப்படுகின்றனவே!—ஆம், உண்மையாக அப்படித்தான். ஐயோ! கள்வன் என்னரும் கற்பைக் கவர்ந்து சென்றான்! இனி எவ்வாறு உயிர் வாழ்வேன். உயிரினுஞ் சிறந்த கற்பை யிழந்தும் வாழ வொல்லுமோ! ஒருக்கணமும் தரியேன். எவ்விதமேனும் இம்மாசுற்ற தேகத்தினின்றும் விடுபடவேண்டும். (தன் கைவிரலிலுள்ள வைர மோதிரத்தைப் பார்த்து) நன்று நன்று. இதுவே இச் சமயம் எனக்குப் பேருதவி செய்வது! (என்று கூறிக் கொண்டே அதைக் கழற்றி வாயில் போட்டுக் கொள்ளப்போகும் சமயத்தில்.)

பத்:—ஆ! சுந்தராங்கி! என்ன செய்யத்துணிந்தாய்! (என்று அலறி அவள் கையைப் பற்றப்போக, சுந்தராங்கி அப்பிடிக்கு அகப்படாது அம்மோதிரத்தை வாயில்போட்டு நற நறவென்று மென்றுவிடுதல்.)

சுந்:—அப்பா! இவ்வளவு நேரம், எங்கு சென்றிருந்தீர்! ஐயோ! இது என்ன! இரத்தம் குடித்த புலி போல் நிற்கிறீரே! (சந்தான கிருஷ்ணன் குத்துண்டு கிடத்தலைக் கண்டு) ஐயோ! இதென்ன இவன் ரத்தத்தில் தோய்ந்து கிடக்கின்றானே! யார் இவனைக் குத்தியது? அந்தோ! கடைசியாய் இவன் கதி இவ்வாறு முடிந்தது. இவன் செய்த குற்றத்திற்குத் தகுந்த தண்டனையே பெற்றான். (பத்தர்மேல் ரத்தமிருத்தலைக் கண்டு பிரமித்து) அப்பா! நீரா இவனைக் குத்திக்கொன்றீர்! ஐயோ! யாராகிலும் பார்த்தால் உம் கதி யென்ன ஆகும். (என்று மலைப்போடு கூறிக்கொண்டே வீழ்ந்து இறத்தல். இக்காட்சிகளையெல்லாம் கண்ட பத்தர் பித்தம் பிடித்தவனைப் போல் மூளை கலங்கி ஓடுதல்.)

(இச்சமயம் பத்தரைப் பார்ப்பதற்காக வசீகரன் தோட்டத்தின் வழியாய் பத்தர் வீட்டினுள் செல்லுதல்.)

வசீ:—(உட்புகும்போதே) என்ன இது? யாரோ இருவர் கீழ் விழுந்து கிடக்கின்றனரே! அவர்கள் உடல் பதை பதைக்கின்றதே! (அருகுசென்று) இதென்ன? இவர்கள் குற்றுயிராயன்றோ கிடக்கின்றனர்! அம்மனிதன் கத்தியால் குத்தப்பட்டிருக்கின்றானே! ஐயோ! இரத்தம் பெருகுகின்றதே! (சிறிது பின் வாங்கி) இக்காரியத்தை யார் செய்திருப்பர்? எக்காரணத்திற்காகச் செய்திருப்பர்? இம்மனிதனை எங்கோ பார்த்திருக்கிறதுபோலிருக்கிறதே! இவன் ஏன் இங்குவந்தான்? இப்பெண்மணி யாரோ? இவள் இறந்து கிடப்பதேன்? இம்மனிதனுக்கும் இப்பெண்ணுக்கும் என்ன சம்பந்தம்? பத்தர் எங்கே? (என்று கூறிக்கொண்டே

சுற்றுமுற்றும் பார்த்தான். அச்சமயம் தலைமுதல் கால் வரையுள்ள நீல அங்கியை யணிந்த உருவமொன்று பின் புறமிருந்து வெகுவேகமாக உட்புகுந்து கீழ் வீழ்ந்து கிடக்கும் சுந்தராங்கியைத் தூக்கித் தோளில்போட்டுக் கொண்டு பின்புறமாகவே மீண்டும் போக முயற்சித்தல்.)

வசி:—(இதனைக்கண்டு மேலுந் திகைப்புற்று) இவ் வுருவமென்ன; மனிதனா? ஏன் அப்பெண்ணைத் தூக்கிக்கொண்டு போகவேண்டும்? ஒருவேளை இவ்வுரு வமே இவ்விருவரையுங் கொலை செய்திருக்குமோ? அவ்வாறு கொலை செய்தற்கு என்ன காரணமிருக்கும்? (என்று அவ்வுருவத்தை உற்று நோக்குதல்.)

நீலவுருவம்:—(வசிகரன் சொற்களைக் கேட்டும் பொருட்படுத்தாது, போகும்போது) ஐயோ! கொலை! கொலை!! என்னைக் கொல்ல வருகிறானே! ஐயோ! கத்தி யால் குத்துகிறானே! என்னை இக்காதக னிடமிருந்து காப்பாரில்லையா? ஐயோ! அப்பா! சாகிறேன்! செத் தேன்! (என்று சப்தமிட்டுக் கூவிவிட்டுப் பின்புறமாகப் போய் எங்கோ மறைந்துபோதல்.)

(இக்கூச்சலைக் கேட்டு தெருவழியாய்ப் போய்க் கொண்டிருந்த போலீஸாரிருவர் உள்ளே நுழைதல்.)

முதலாவது போலீஸ்காரன்:—என்ன ஐயா! சுற்று முற்றும் பார்க்கிறீர்! யாருக்குந் தெரியாது ஓடப் பார்க் கிறீரா! உம்.

இரண்டாவது போலீஸ்காரன்:—நெம்பர் 284. ஆளை விடாதே! சீக்கிரம் போ! (இருவரும் வசிகர னிருக்கு மிடத்தில் நெருங்குதல்.)

வசீ:—ஐயா! இங்கு யாரோ இறந்து கிடக்கின்ருர். நான் இங்கு தற்செயலாக வர நேரிட்டது! இவர் எப்படி யிறந்தார் என்று பார்த்தேன். இதற்குள் நீங்களும் வந்தீர்கள்.

1-வது:—என்ன ஓய்! ஒன்றும் அறியாதவரைப் போல் நாடகம் நடிக்கிறீர்! தற்செயலாய் இங்கு வர நேரிட்டதாம். யாரோ இறந்து கிடக்கின்ருராம். இவரை உமக்குத் தெரியாதா?

வசீ:—குத்துண்டு கிடக்கும் அம்மனிதனை எங்கோ பார்த்திருக்கிருப்போல் நினைவிருக்கிறது. ஆனுல் எங்கு பார்த்ததென்றும், அவர் யார் என்றும் தெரியாது.

2-வது:—ஐயோ பாவம். எங்கோ பார்த்ததாக நினைப்பிருக்கிறதாம். ஆனுல் தெரியாதா? ஆ! என்ன சாகசம். ஆளிருந்தாலும் இப்படியல்லவோ இருக்க வேண்டும். (சந்தான கிருஷ்ணன் கொலையுண்டிருக்கு மிடத்தை யணுகி அங்கு வீழ்ந்து கிடந்த கத்தியை எடுத்துப் பார்த்தல்.)

1-வது:—என்ன அது கத்தியா! இதோ காண்பி! பார்க்கலாம். (என்று வாங்கி அதில் செதுக்கப் பட்டிருந்த பெயரைப்பார்த்து வியப்பெய்தி வசீகரனை நோக்கி) ஐயா! உம்முடைய பெயரென்ன?

வசீ:—ஐயா! என் பெயர் வசீகரன் என்பார்கள்.

1-வது:—(மீண்டும் கத்தியில் பதிக்கப் பட்டுள்ள பெயரைப் பார்த்து) நீ கொலை செய்ய வில்லையா? இது உண்மையா?

வசி:—(திகைப்பெய்தி) நான் ஏன் கொலை செய்யப் போகிறேன்? ஏதோ இங்கு வரநேரிட்டது. இக்காட்சியைக் கண்டேன்; அவ்வளவுதான்.

1-வது:— ஒரு சம்பந்தமு மில்லாது நீர் இங்கு வரக் காரணமென்ன?

வசி:—(வந்தகாரணத்தைச் சொல்ல வாயெடுத்தும் அறிவு மயங்கி) அதற்கு யான் பதில் சொல்ல முடியாது.

2-வது:—இங்கு சொல்லாவிட்டால் அங்கு கூறுகிறீர்; நெம்பர் 284, வெறும் பேச்செதற்கு? ஐயா இங்கு ஒன்றும் உண்மையைச் சொல்ல மாட்டார். ஆளை யழைத்துக்கொள்; போகலாம்.

(வசிகரன் இன்னது செய்வதென்று தெரியாது பிரமிப்புடன் நிற்றல்.)

1-வது:—ஏனய்யா! ஆந்தைபோல் விழிக்கிறீர்? நடவும் ஸ்டேஷனுக்கு. (என்று வசிகரன் கையைப் பற்றிக் கொண்டு மற்றவனுடன் ஸ்டேஷனை நோக்கி நடத்தல்.)

களம் III. இடம்:—நீதிமன்றம்.

அங்கம் 1. காலம்:—காலை 10-மணி.

(நீதிபதி, வழக்கறிஞர்கள் (வக்கீல்கள்), இன்டிரா பட்டர்கள், ஜூரர்கள் முதலியோர் அவரவர்கட்குரிய இடங்களில் அமர்ந்திருக்கிறார்கள். பொதுமக்கள் உட்காரும் இடத்தில் (விசிட்டர்ஸ் காலரியில்) குஞ்சிதபாதமய்யர், மனோகரி முதலியவர்கள் ஒரு புறத்திலும், வெங்கடசாமி பத்தர், சுப்பண்ணா சாஸ்திரி முதலியவர்கள் மற்றொரு பக்கத்திலும், இன்னும் பல பொது மக்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். வசீகரன் குற்றவாளியின் கூண்டில் கொண்டுவந்து நிறுத்தப் பட்டான். வழக்கில் சம்பந்தப்பட்ட போலீஸாரிருவரும், மற்றும் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் குழுமி யிருந்தனர்.)

கவர்ன்மெண்ட் ப்ராஸிகூட்டர்:—மேன்மை தங்கிய நீதிபதி யவர்களே! நீதி வாதஞ்செய்யும் வக்கீல்களே! இதோ கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் குற்றவாளி சமீபத்தில் நிகழ்ந்த கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறான். அதில் கொலையுண்ட சந்தான கிருஷ்ணய்யர் என்பவரை வசீகரனென்னும் பெயருடைய இக்குற்றவாளியே கொன்றிருக்கிறானும். இதை 190-வது நெம்பர் போலீஸ் கான்ஸ்டேபிலும், 284-வது நெம்பர் போலீஸ் கான்ஸ்டேபிலும் கண்டு இக்குற்றவாளியைக் கை மெய்யாகப் பிடித்து வந்திருக்கிறார்கள். 'இக்குற்றவாளி சந்தான கிருஷ்ணய்யரைக் கொலைசெய்யத்

துணிந்ததற்கு இவன் காதலித்த பெண்ணை இறந்தவர் திருமணஞ்செய்ய முயற்சி செய்ததே காரணமெனக் கூறப்படுகிறது. இக்குற்றவாளியே அக்கொலையைச் செய்தான் என்பதற்குக் குத்தப்பட்ட க்த்தியில் இவன் பெயர் பொறிக்கப்பட்டிருத்தலும் ஒரு சான்ருக நிற்கிறது. இவற்றை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து மேன்மை தங்கிய நீதிபதியவர்கள் தீர்ப்பு செய்வார்களென்று நம்புகிறேன். (என்று கூறித் தன் இடத்தில் அமர்தல்.)

நீதிபதி:— (வசீகரனைப் பார்த்து) இப்போது உன் மீது கொண்டுவரப்பட்டிருக்கும் கொலை வழக்கில் நீ சம்பந்தப் பட்டிருக்கிருயா? சந்தான கிருஷ்ணனை நீ கொன்றது உண்மை தானு?

வசீ:—மேன்மைதங்கிய நீதிபதியவர்களே! ஆண்டவனறிய நான் அக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவனுமல்ல; நான் சந்தான கிருஷ்ணய்யரைக் கொல்லவுமில்லை.

வக்கீல்:—(சுப்பண்ணு சாஸ்திரியின் வக்கீல் குறுக்கு விசாரணைசெய்ய ஆரம்பித்து) கொலை நடந்த இடத்திற்கு நீ சென்றதில்லையா?

வசீ:—சென்றது உண்மையே.

வக்:—எதற்காகச் சென்ருய்?

வசீ:—(பத்தரைக் காணச் சென்றேன் எனச் சொல்ல வாயெடுத்தவன், அதனைச் சொன்னல் வீண் கேள்விகள் உண்டாகுமென்று கருதி) அங்கு சென்ற காரணத்தைக் கூற முடியாது.

வக்கீல்:—அஃதிருக்கட்டும். குத்தப்பட்ட கத்தி உன்னுடையதா? அல்லையா?

வசீ:—அது என்னுடையதல்லை.

வக்கீல்:—அதில் பொறிக்கப்பட்டிருக்கும் பெயர் உன்னுடையது தானே?

வசீ:—என் பெயரென்பதில் சந்தேகமில்லை.

வக்கீல்:—அவ்விதமிருக்க, அக்கத்தி உன்னுடையதல்லவென்று சொல்வதன் காரணமென்ன?

வசீ:—காரணமொன்றுங் கூறமுடியாது. அக்கத்தி என்னுடையதல்ல வென்பதையும், அக்கொலையை நான் செய்யவில்லை என்பதையும் முக்காலும் உறுதியாகக் கூறுவேன்.

நீதிபதி:—நெம்பர் 190 கான்ஸ்டேபிலைக் கூப்பிடுங்கள்.

கோர்ட்டுச் சேவகன்:—நெம்பர் 190. நெம்பர் 190. (என்று உரக்கக் கூவினன்.)

(190-வது நெம்பர் கான்ஸ்டேபில் சாக்ஷிக்கூண்டில் வந்து சத்தியஞ்செய்து நிற்றல்.)

நீதிபதி:—நீங்கள் குற்றவாளியை எந்த சமயத்தில் கைது செய்தீர்கள்?

190 நெம்பர்:—கொலையுண்டு கிடந்த சந்தான கிருஷ்ணய்யரை விட்டுத் தப்பியோட வழி பார்த்த சமயத்தில் நாங்கள் இவரைக் கைது செய்தோம்.

நீதிபதி:—உங்களைப் பார்த்ததும் குற்றவாளி ஓடினானா? அங்கேயே நின்றிருந்தானா?

190:—ஓடவில்லை. எங்களைப் பார்த்ததும் திகைத்து நின்று விட்டார்.

கவர்ன்மெண்ட் வக்கீல்:—அக்குற்றவாளி தான் அக்கொலையைச் செய்தான் என்று நீ எவ்வாறு சொல்ல முடியும்?

190:—அச்சமயம், கொலை நிகழ்ந்த விடத்தில் அவர் இருந்ததாலும், மற்று யாரும் அங்கு இல்லாமையாலும், கத்தியில் அவர் பெயர் செதுக்கப் பட்டிருந்ததாலும் இவர்தான் செய்திருப்பாரென்று நாங்கள் நம்பிக் கைது செய்தோம்.

கவ. வக்கீல்:—வீட்டினுள் நடந்து கொண்டிருந்த கொலையைப் பற்றி வெளியே சென்று கொண்டிருந்த உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

190:—நானும், நெம்பர் 284-ம் தெருவழியே சென்று கொண்டிருக்கையில் வெங்கடேச பத்தர் வீட்டை நெருங்கியதும், "ஐயோ! கொலை! என்னைக் கொலை செய்கிறார்களே! குத்திவிட்டானே" என்று யாரோ பெருங் கூச்சலிட்டது எங்கள் காதில் விழுந்தது. உடனே நாங்கள் வீட்டினுள் சென்று பார்த்தோம். அச்சமயம் சந்தான கிருஷ்ணய்யர் கத்தியால் குத்துண்டு குற்றுயிரா யிருந்தார். அவரை இக்குற்றவாளி இறங்கிப் பார்த்துவிட்டுப் பின்புறமாக ஓட எத்தனித்தவர் எங்களைக் கண்டதும் திகைத்து நின்று விட்டார். உடனே நாங்கள் அவரைக் கைது செய்தோம்.

(பின்னர் நீதிபதி இக்கொலைக் கேஸை முதலில் விசாரித்துக் குற்றவாளியிடத்தில் வாக்கு மூலம் வாங்கிய சப்இன்ஸ்பெக்டரை அழைத்தலும், அவர் சாக்ஷிக் கூண்டில் வந்து சத்தியஞ் செய்து நின்றார்.)

நீதிபதி:—நீர் ஏதாகிலும் இக்கொலைக் கேஸைப் பற்றிச் சொல்ல வேண்டிய சாக்ஷியங்க ளிருக்கிறதா?

சப். இன்ஸ்:—மேன்மைதங்கிய நீதிபதியவர்களே! நான் அதிகமொன்றுஞ் சொல்லவேண்டியதில்லை. நான் ஸ்டேஷனில் குற்றவாளியை விசாரித்த காலத்தும் இங்கு சொன்னதையன்றி மற்றொன்றும் சொல்லவில்லை. ஆனால், இக்கொலைக்கேஸில் வேறு யாராகிலும் சம்பந்தப் பட்டிருக்கிறார்களா வென்று நான் ஆராய்ந்து பார்த்ததில் ஒருவரும் அகப்படவில்லை. அதனால் இக் குற்றவாளியைத்தவிர அக்கொலையை யாருஞ் செய்யவில்லை என்னும் முடிவுக்கு வந்திருக்கிறேன். எனவே மேன்மை தங்கிய நீதிபதியவர்கள் இதனை இன்னும் ஆராய்ந்து தீர்ப்பு சொல்லுமாறு வேண்டுகிறேன்.

கவ. வக்கீல்:—இக்கொலை நடநதவிடத்தைப் போய்ப் பார்த்தீரா? அங்கு ஆராய்ந்து பார்த்ததில் வேறு யாரும் சம்பநதப்பட்டிருப்பதாக அறிகுறியொன்றுங் கிடைக்கவில்லையா?

சப். இன்ஸ்:—கொலை நடந்த இடத்தைப்போய்ப் பார்த்தேன். இக்குற்றவாளியே கொலைசெய்தவர் என்று உறுதிப்படுத்தற்குத் தக்க ஆதாரங்கள் கிடைத்த தல்லாமல், வேறு யாரும் சம்பந்தப்பட்டிருப்பதாக அறிகுறியொன்றுங் கிடைக்கவில்லை.

கவ. வக்கில்:—கொலை நடந்த அவ்வீடு யாருடையது? அவ்வீட்டிற்குச் சந்தான கிருஷ்ணய்யர் வருவதற்கு என்ன ஏதுவிருந்தது என்பதை யறிந்தீரா?

சப். இன்ஸ்:—அவ்வீடு வெங்கடேச பத்தர் என்பவருடையது என்பதை யறிந்ததோடு, சந்தான கிருஷ்ணய்யர் அவருக்கு நண்பராதலால் அதை முன்னிட்டு அவரைப் பார்க்க அவர் அடிக்கடி வருவதுண்டு என்பதையும் விசாரித்து அறிந்தேன்.

கவ. வக்கீல்:—கொலை நடந்த சமயத்தில் பத்தர் எங்கு போயிருந்தார் என்பதை யறிந்தீரா?

சப். இன்ஸ்:—ஓ! அவர் தம் சொந்த அலுவலை முன்னிட்டு வெளியே சென்றிருந்தாராம்.

கவ. வக்கீல்:—அவரையேன் சாட்சியாக நீர் போடவில்லை?

சப். இன்ஸ்:—அவசியமில்லை யென்று விட்டு விட்டேன்.

கவ. வக்கீல்:—இப்போதாகிலும் அவரைச் சாட்சியாக விசாரித்தல் அவசியமென்று உமக்குத் தெரிகிறதா? அவர் இங்கு வந்திருந்தால் சாக்ஷியாக விசாரிக்கலா மல்லவா?

சப். இன்ஸ்:—தங்களின் உத்திரவு படி செய்பலாம்.

(பத்தரை அழைத்தலும், அவர் சாக்ஷிக்கூண்டில் சத்தியஞ்செய்து நிற்றல்.)

கவ. வக்கீல்:—கொலை நடந்த சமயத்தில் நீர் எங்கு போயிருந்தீர்?

பத்தர்:—(மருள் கொண்டவர் போலிருந்தவர் சிறிது நிதானித்து) என் சொந்த வேலையை முன்னிட்டு வெளிச்சென் றிருந்தேன்?

கவ. வக்கீல்:—உம் வீட்டில் வேறு யாருமில்லையா?

பத்தர்:—(படபடத்த நெஞ்சத்தோடு) என் மகளிருந்தாள். (சிறிது தயங்கி) அவள் இப்போது தன் தாய்க்குத் தாய் வீடாகிய தஞ்சாவூருக்குப் போயிருக்கிறாள். என் மனைவி இறந்து வெகுகாலமாகி விட்டதால் நாங்களிருவரே இதுவரை வசித்துவந்தோம்.

கவ. வக்கீல்:—இறந்த சந்தான கிருஷ்ணய்யரை உமக்குத் தெரியுமா!

பத்:—ஓ! நன்றாகத் தெரியும். அவர் எனது நண்பர். அவர் அடிக்கடி என் வீட்டிற்கு வருவதுண்டு?

கவ. வக்கீல்:—இக்குற்றவாளியை உமக்குத் தெரியுமா?

பத்:—(சிறிது யோசித்து) ஒருவாறு தெரியும்.

கவ. வக்கீல்:—இக்குற்றவாளி உமது வீட்டிற்கு வருவதற்கு ஏதாவது ஏதுவுண்டா?

பத்:—ஒன்றுமில்லை.

கவ. வக்கீல்:—அவ்வாறிருக்க ஏன் அங்கு வந்திருக்க வேண்டுமென்பதை யூகித்துச் சொல்லமுடியுமா?

பத்:—(யோசிப்பவர்போல் அபிநயித்து) எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

கவ. வக்கீல்:—கொலை யுண்டவருக்கும் இக்குற்றவாளிக்கும். எவ்விதத்தில் பகையுண்டாயிருக்கும் என்பதையாகிலும் சிறிது ஆராய்ந்து கூறவியலுமா?

பத்:—ஒரு பெண்ணின் காரணமாகவே இவர்களுக்குள் பகை யுண்டாயிருக்கு மென்று நினைத்தற்கு இடமிருக்கிறது. எனது நண்பராகிய சந்தானகிருஷ்ணய்யருக்கு அவர் தந்தையார் ஒரு பெண்ணை விவாகஞ் செய்ய முடிவு செய்தார். அப் பெண்ணை இக்குற்றவாளி காதலித்திருந்தாராம். தான் காதலித்த பெண்ணை வேறொருவர் திருமணஞ் செய்ய முயற்சிக்கிறார் என்று அறிந்ததும் சினம் மூண்டு சந்தானகிருஷ்ணய்யரைச் சமயம் பார்த்துக் கொன்றிருக்கிறார் என்று கூறப் படுகிறது. இவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

கவ. வக்கீல்:—சந்தானகிருஷ்ணய்யருக்கு வதுவை செய்யப் பேசப்பட்ட பெண் யார் என்பது உமக்குத் தெரியுமல்லவா? அப்பெண் பெயரையும், அப்பெண்ணின் தந்தைதாயர் யார் என்பதையும் கூறமுடியுமா?

பத்:—அப் பெண்ணின் குடும்பம் தருதிவாய்ந்த குடும்பமாதலால் அதைப்பற்றிக் கூற நான் விரும்பவில்லை. மேலும் அவர்கள் முதலிலேயே சப் இன்ஸ்பெக்டர் முதலியவர்களிடம் இக்கொலைக் கேசில் தங்களைச் சம்பந்தப் படுத்தி வெளியில் இழுக்கக் கூடாதென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அப்பெண்ணின் சம்பந்தமாக எதுவும் நான் இதுபோது கூறக் கூடாதவனாக இருக்கிறேன்.

கவ. வக்கீல்:—அது கிடக்கட்டும். இக்கொலையை இக்குற்றவாளிதான் செய்திருக்கக் கூடும் என்பதை நீர் நம்புகிறீரா?

பத்:—(படபடத்த நெஞ்சத்தோடு) இவ்வழக்கு பற்றிய விவரங்களை நோக்க இக்குற்றவாளிதான் அதைச்

செய்திருக்கிறார் என்பதை யுறுதிப் படுத்த ஏது விருக்கிறது.

நீதிபதி:—வசீகரா! இதுவரை கூறிவந்த சாக்ஷிகளின் வாக்கு மூலங்களை மறுத்து நீ யேதாவது கூற முடியுமா? அல்லது வேறு ஏதேனும் சொல்ல விரும்புகிறாயா?

வசீ:—(முன்னரே எதிர்பாராத நிகழ்ச்சிகளால் திகைப்புற்றிருந்தவன், பத்தரின் சொல்லைக் கேட்டதும் கலங்கி) நான் இக்கொலைக் குற்றத்தைச் செய்யவில்லை என்பதைத் தவிர, எனக்கு எதிராகக் கூறிய சாக்ஷிகளின் வாக்குமூலங்களை மறுக்கவோ அல்லது மற்று ஏதேனும் கூறவோ நான் விரும்பவில்லை.

நீதிபதி:—(ஜூரர்களை நோக்கி) இதுவரை இவ் வழக்கின் போக்கை நீங்கள் கவனித்து வந்திருக்கிறீர்கள். இதுபற்றி உங்கள் அபிப்பிராயத்தை நான் அறிய விரும்புகிறேன். ஆதலால் நீங்கள் உங்கட்குரிய நேரம் வரை யோசித்து குற்றவாளி என இங்கு நிறுத்தப்பட்டிருப்பவன் உண்மையாகக் குற்றவாளியா? அல்லயா? என்பதைக் கூற வேண்டுகிறேன்.

(ஜூரர்கள் தங்களுக்குள்ள நேரம் வரை தங்கள் அறையில் சென்று ஆலோசித்து பின்னர் தங்களிடத்து வந்து அமர்தல்.)

நீதிபதி:—வசீகரன் குற்றவாளியா? குற்றவாளி யல்லயா?

தலைமை ஜூரர்:—அவன் குற்றவாளியென்றே யாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்.

(இதைக் கேட்டதும் பத்தர், சுப்பண்ணு சாஸ்திரி, நீலலோசனி இவர்கள் உள்ளுக்குள் சந்தோஷித்தல்.)

நீதிபதி:—(தமது முடிவான தீர்ப்பை யெழுதிப் படிக்க ஆரம்பித்து) குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் பட்டிருப்பவன், சந்தான கிருஷ்ணய்யரைக் கொலை செய்தான் என்பதற்குப் பலமான ஆதாரங்கள் இருப்பதாகச் சாக்ஷிகள் கூறியதாலும், எதிரி அச்சாக்ஷிகள் சொல்லுவனவற்றை மறுத்து ஒன்றும் சொல்லாததாலும், ஜூரர்களும் அவன் குற்றவாளி யென்றே தீர்மானித்திருப்பதாலும், நான் எனது முடிவான தீர்ப்பில் அவனைக் கு...ற்...ற...வா...ளி...யென்றே தீர்மானித்து..................

(இச்சமயம் விசிட்டர் காலரியிலிருந்து, "வசீகரன் குற்றவாளி யல்ல" என்று ஒரு கூக்குரல் உண்டாதலும், நீதிபதி முதல் யாவரும் அத்திக்கைப் பார்க்கலானார்கள்.)

மனோகரி:—(தான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து நடந்து குற்றவாளி கூண்டை நெருங்கி நின்று) மேன்மை தங்கிய நீதிபதியர்களே! இப்போது குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் பட்டிருக்கும் வசீகரன் எவ்விதத்திலும் குற்றவாளியல்ல. நானே சந்தான கிருஷ்ணய்யரைக் கொலை செய்தவள். ஆதலால் நானே அதற்குரிய தண்டனையை யடைய வேண்டியவள் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(யாவரும் இன்னது சொல்வதென்று தெரியாது திகைத்து நிற்றல். குஞ்சிதபாத மய்யரும், நீலலோசனியும் கண்ணீர்விட்டுக் கதறல்.)

சுப்:—(அச்சமயம் தன்னிடத்தைவிட்டு எழுந்து நின்று) மேன்மைதங்கிய நீதிபதியவர்களே! நான் முதலிலேயே மனோகரி தான், என் மகனாகிய சந்தான கிருஷ்ணனைக் கொன்றிருப்பாளென்று நினைத்தேன். ஏனெனில் நாங்கள் என் மகனுக்கு இவளை விவாகஞ்செய்ய நிச்சயித்தபோது, இவள் தான் வேறொருவரைக் காதலித்திருப்பதாகவும், ஆதலால் என் மகனைத் திருமணஞ் செய்துகொள்ள முடியாதென்பதாகவும் கூறி, அப்படி தன் காதலுக்கு யாராகிலும் மாறாக நின்றால் அவர்கள் தன்னால் கொலை செய்யப்படுவது திண்ணம் என்பதாகவும் சபதங் கூறினாள். எனவே இவளே—இம்மனோகரியே என் மகனைக் கொலைசெய்திருப்பாளென்று உறுதியாய்க் கூறுகிறேன்.—குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பவன் தான் இவளுக்குக் காதலனும். வேறு யாருமில்லை. வேண்டுமாயின் அவன் இவளுக்கு உதவியாயிருந்திருக்கலாம். ஆதலால் நீதிபதியவர்கள் இதை நன்கு ஆராய்ந்து முடிவுகூற வேண்டுகிறேன்.

மனோ:—(சுப்பண்ணா சாஸ்திரி தன்மீது அடாப் பழி சுமத்துவது அறிந்தும், தன் எண்ணத்துக்கு இது துணை புரிவதே யென மகிழ்ந்து) இப்போது சுப்பண்ணா சாஸ்திரிகள் கூறிய அத்தனையும் உண்மையே. அவர் வாக்குமூலம் ஒன்றே நான் குற்றவாளி யென்பதை நன்கு உறுதிப்படுத்தும். ஆதலால் வேறு யோசிக்காது எனக்கு அக்குற்றத்திற்குரிய தண்டனையை யளித்து

(வசீகரனைச் சுட்டிக்காட்டி) அவரை விடுதலைசெய்ய வேண்டுகிறேன்.

(இவ்விநோதமான வழக்கைக் கண்டு நீதிபதி முதலியவர்கள் திகைப்பெய்தி, இன்னதுதான் சொல்வதென்று அறியாது வாளாவிருத்தல். எனவே நீதிமன்றம் சிறிதுநேரம் அமைதி குடிகொண்டிருந்தது.)

வசீ:—(தனக்குள்) மனோகரியே ஒருவேளை இக்கொலையைச் செய்திருக்கலாமா? நமக்கு இவன் இடையூறாக இருத்தலால் இவனை ஒழித்துவிட்டால் நன்றாகவிருக்குமென்று துணிந்து கொலைசெய்து விட்டாளோ! அவ்வாறு செய்திருப்பின் நம்மிடம் சொல்லி யிருக்கமாட்டாளா! நீலஅங்கி யுடுத்து அப்பெண்ணையெடுத்துசென்ற உருவம் இவளாகத்தா னிருக்குமா? அப்பெண் யார்? அவளை யேன் இவள் தூக்கிச் செல்லவேண்டும்? அப்பெண் எவ்வாறு இறந்தாள்; ஒன்றும் விளங்கவில்லையே. மனோகரி அக்கொலைக் குற்றத்தைச் செய்தாளோ இல்லையோ? இப்போது அவள்தானே அக்குற்றத்தைச் செய்ததாய் ஒப்புக் கொண்டு தண்டனை கொடுக்க நீதிபதியை வேண்டுதலால், அவள் தண்டனை யடைய நேரினும் நேரும். ஆதலால் அவளை அக்குற்றத்தினின்றும் விடுவிக்க வேண்டும். (நீதிபதியை நோக்கி) மேன்மை தங்கிய நீதிபதியவர்களே! இப்போது குற்றவாளியென்று ஒப்புக்கொண்டு இங்கு வந்திருக்கும் பெண்மணி ஒரு குற்றத்தையுஞ் செய்தறியாள். யானே அக்கொலைக் குற்றத்தைச் செய்தவன். ஆதலால் எனக்கே அக்குற்றத்திற்குரிய தண்டனையை யளித்தல் வேண்டும்.

(இதைக் கேட்டதும், நீதிபதிக்கும், சபையிலிருந்தவர்களுக்கும் ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியம் உண்டாதல்.)

சபையிலிருந்த ஒருவர்:—என்ன இது! இக் கேஸே விநோதமாக விருக்கிறது. குற்றவாளிக் கூண்டில் இருக்கு மிவன் இதுவரை தான் குற்றஞ் செய்யவில்லை என்று கூறிநின்றான். இப்பெண் வந்து குற்றத்தை யேற்றுக் கொண்டதும், இவன் தான் குற்றஞ் செய்ததாக ஒப்புக் கொள்ளுகிறான். என்னமோ! இவ்வழக்கிலிருந்து எனக்கொன்றும் புலப்படவில்லை.

மற்றொருவர்:—இதுவரை குற்றவாளி மீது கொண்டு வரப்பட்ட வழக்கு சாக்ஷிகளாலும், மற்ற ஆதாரங்களாலும் குற்றவாளியைக் கொலை செய்தவனென்றே தீர்மானிக்கச் செய்தது. மனோகரி கூறுவதிலிருந்து பார்த்தால் அவள் குற்றஞ் செய்திருத்தல் கூடுமென்று எண்ணுதற்கு இடமிருக்கிறது. இக் கேஸை நீதிபதியவர்கள் எவ்வாறு தீர்ப்பு செய்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

(இவ்வாறு யாவரும் திகைப்பு கொண்டு வழக்கைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்த சமயத்தில், வெங்கடேச பத்தர் தானிருந்த இடத்தைவிட்டுப் பைத்தியம் பிடித்தவர்போல் கூக்குரலிட்டுக் குதித்து எதையோ பார்த்துப் பயப்படுபவர் போல் பின்னுக்குச் சென்று கொண்டே)

பத்:—ஆ! என்னைக் குத்தாதே! கொலை செய்யாதே! சொல்லி விடுகிறேன். என்ன! பழிக்குப் பழி வாங்கப் போகிறாயா! நான் உனக்கு உதவிகள் பல

செய்யவில்லையா! இருந்தாலும் விடமாட்டாயா? என்னைக் கொல்லாமல் விடமாட்டாயே! ஆனால் நீயேன் என் மகளை...................செய்தாய்? ஐயோ! உன்னைப் பார்க்கப் பயமாயிருக்கிறதே! ஆ! நெருங்கி வருகிறானே! கத்திகொண்டு குத்த வருகிறானே! குத்தவேண்டாம்! என்னைக் கொலை செய்யவேண்டாம். (என்று கூறித் தட்டித் தள்ளாடி விழப்போகும் சமயத்தில் இரு போலீஸார் அவரைத் தாங்கிக் கொள்ளுதல்.)

(பத்தரின் இக் கோலத்தைக் கண்டதும் யாவரும் மேலும் பிரமிப் படைந்து, 'என்ன! இவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ?' என்று எண்ணி மயங்கலானார்கள். நுண்ணிய அறிவுடைய நீதிபதி பத்தரை நடுவே கொண்டுவந்து நிறுத்தும்படி செய்து சாவதானப் படுத்தி அவரை நோக்கி)

நீதிபதி:—ஏன் திடீரென இவ்வித மாறுதலை யடைந்தீர்கள். இங்கு யாரும் உம்மைக் கத்திகொண்டு குத்த வரவில்லையே?

பத்:—குத்த வரவில்லையா? (எதிரே கையைச் சுட்டிக் காட்டி) இதோ வருகிறானே! சந்தான கிருஷ்ணன் என்னைக் கொல்ல வருகிறானே! அவனைத் தடுத்து விடுங்களையா! அவனைக் கட்டிப் பிடித்துக் கொள்ளுங்கள் (என்று சொல்லி முன்னினும் அதிகமாகத் துள்ளிக் குதித்தல்.)

சப். இன்:—(நீதிபதியின் கட்டளைப்படிப் பத்தரை ஆடவொட்டாது பிடித்து) பயப்படாதீர்! நாங்கள் இருக்கிறோம். உம்மை யாருங் குத்திக் கொல்ல வரவில்லை. ஏன் இவ்வாறு அஞ்சுகிறீர்! நீர் சொல்லும்

சந்தான கிருஷ்ணன் யார்? கொலையுண்ட சந்தான கிருஷ்ணய்யரா? அவரா உம்மைக் குத்த வருகிறார்? ஏன்? நடந்ததென்ன சொல்?

பத்:—ஐயா! சொல்லி விடுகிறேன்; என்னை யொன்றுஞ் செய்யவேண்டாம். (எதிரே பார்த்து) சந்தான கிருஷ்ணனும் சொல்லச்சொல்லி வலியுறுத்திப் பயமுறுத்துகிறானே! (என்று முதலிலிருந்து நடந்ததையெல்லாம் யாவருக்குங் கேட்குமாறு சொல்லி) இறந்து கிடந்த என் மகள் சுந்தராங்கியை யாரு மறியாதவாறு எடுத்துச்சென்று சிலரின் உதவியைக்கொண்டு புதைத்து விட்டேன். கடைசியாக சுந்தராங்கியை நீலஅங்கி யணிந்து எடுத்துச் செல்லும்போது கூக்குரலிட்டுப் போலீஸாரை வரும்படிச்செய்தது நானே! வசீகரன் மீது இக்கொலைக் குற்றத்தைச் சுமத்துவதற்கு யான் வேண்டிய சூழ்ச்சி செய்தேன். சந்தான கிருஷ்ணனைக் கொலை செய்தவன் யானே யன்றி வசீகரனுமல்ல; மனோகரியுமல்ல. அவர்கள் உண்மைக் காதலர்க ளாதலால் ஒருவரை யொருவர் காத்தற்குத் தங்கள் மீது குற்றத்தை வலிந்து சுமத்திக்கொண்டிருக்கிறார்கள். கடைசியாக நான் மேன்மை தங்கிய நீதிப தியவர்களுக்கு விண்ணப் பித்துக்கொள்வ தென்னவென்றால், எவ்வாறாயினும் வசீ கரனுக்கும் மனோகரிக்கும் விவாகஞ் செய்வித்து, அவர் கள் மகிழ்ச்சியோடு வாழுமாறு செய்வித்தல் வேண்டும். அவ்வாறு செய்யின் தீங்கினை உள்ளத்தும் நினைந்தறி யாத அவர்களுக்கு நான் செய்த துன்பங்களுச்கு ஒரு பரிகாரமாகும். என் மகள் என்னைக் கூப்பிடுகிறாள். என்னருமை சுந்தராங்கி என்னை அன்போடு அழைக்கி

ருள். போகிறேன், சென்று வருகிறேன். (என்று இருந்தாற்போ லிருந்து மேலே தாவிக் கீழ் வீழ்ந்து இறத்தல்.)

(இவற்றை யெல்லாங் கேட்ட நீதிபதி, வழக்கறிஞர் கள், பொது மக்கள் ஆகிய அனைவரும் வியப்பு ஒரு புறமும், திகைப்பு ஒருபுறமுமாகச் சிறிது நேரம் அசை வற்றிருந்து, பின்பு உண்மை வெளியானமைக்காக ஆனந் தம் மேலிட்டு, அவரவர்கள் தத்தமக்குத் தோன்றியவாறு பேசலானார்கள். குஞ்சிதபாதமய்யர் தன் மகள் குற்றத்தி னின்றும் தப்பியமைக்காக ஒருவாறு சந்தோஷமடைந் தார். சுப்பண்ணா சாஸ்திரி பத்தரின் வஞ்சனையை யறிந்து தன் மகனைக் கொன்ற அவர் இறந்ததற்குச் சந் தோஷங் கொண்டாடினார். ஆயினும் சந்தான கிருஷ் ணன் தன்னையறியாது தீச்செயலைச் செய்யத்துணிந்த தும், அதன் பயனாகக் கொலையுண்டதும் ஆகியவற்றை நினைந்து வருத்தமடைந்து பிறரைப் பார்த்தற்குக் கூசித் தலைகுனிந் திருந்தார். வசீகரனும் மனோகரியும் தாங்கள் இதுவரை நினைந்திருந்தவாறு தங்களுள் எவரும் கொலைக்குற்றஞ் செய்யாமையை யறிந்து வீண்பழியி னின்றுந் தங்களைக் காப்பாற்றிய கருணையங் கடவுளுக்கு வணக்கஞ் செய்தார்கள்.)

நீதிபதி:—(யாவரையும் அமைதியாய் இருக்கச் செய்து) மிகக் குழப்பத்திலிருந்த இக்கொலை வழக்கு வெளிப்படையாயிற்று. இதுவரை இவ்வித விநோத வழக்கு இங்கு வந்தது கிடையாது. மற்றெங்கும் நடந்ததாகவும் நான் கேட்டதில்லை. இதுகாறும் குற்ற வாளியென நாம் எண்ணியிருந்த குற்றவாளிக் கூண்டில்

நிறுத்தப்பட்டவர் ஒரு குற்றமு மற்றவ ரென்பது இப்போது நமக்குத் தெளிவாகிவிட்டது. தானே குற்றவாளி; இவர் குற்றவாளி யல்லவென வலிந்து குற்றத்தை யேற்க முன் வந்த இப்பெண்மணியும் குற்றவாளியல்லவென்பதை யாரும் தடுக்கமுடியாது. உண்மையான குற்றவாளி அதோ வீழ்ந்து இறந்து கிடக்கிறார். அவர் தாம் செய்த குற்றத்திற்குத் தக்க தண்டனையே யடைந்திருக்கிறார். கடவுளே அவருக்குத் தண்டனை யளித்துவிட்டார். வீழ்ந்து இறக்கும்போது அவர் விண்ணப்பித்துக்கொண்ட வேண்டுகோளைப்பற்றி நாம் அனைவரும் ஆராய்ந்து முடிவுக்கு வரவேண்டியது அவசியமாக இருக்கிறது. இக்கொலை எதிர்பாராத விதமாய் தெய்வத் திருவுள்ளத்தின் வண்ணம் நடந்திருக்கிறது. எவரெவர் சூழ்ச்சி செய்தார்களோ அவரவர்களுக்கே அவர்கள் சூழ்ச்சி பயன்பட்டிருப்பதை நோக்க தெய்வத் திருவருளை நாம் வியவாதிருக்க முடியாது. இதோ நம் முன் நிற்கும் காதலர்களுக்காகவே இவை யாவும் நடந்திருக்கிறது. இதுவரை யிருந்தது போல். இனியும் இவர்களை நிற்கவைத்தல் நியாயமாகாது. இவர்களை நான் உட்காருமாறு வேண்டுகிறேன். (என்று வழக்கறிஞர்களும் ஜூரர்களும் உட்கார்ந்திருக்கும் வரிசையில் வசிகரனையும் மனோகரியையும் உட்காரச் செய்தார்.) வசீகரன்மீது வீண்பழி சுமத்திக் குற்றவாளியைப்போல் நடத்தியதற்காக நான் மிக வருந்துகிறேன். இங்கு போலீஸாருக்குக் கூறவேண்டியது தொன்றிருக்கிறது. அவர்கள் எவ்வழக்கையுந் தீர ஆராய்ந்து, புறச்சான்றுகளைக் கொண்டுமிட்டும் ஒருவர்மீது குற்றத்தைச் சுமத்தாது அகச்சான்றுகளை யெவ்வளவுதூரம் ஆழ்ந்து ஆலோ

சிக்கவேண்டுமோ அவ்வளவுதூரம் உண்மையைக்கண்டு பிடித்து உண்மைக் குற்றவாளியைக் கைது செய்யவேண்டும். இனி, எனது தீர்ப்பில் முக்கியமாக ஒன்று குறிக்க வேண்டியிருக்கிறது. இக்கொலை நடந்ததற்குக் காரணம் உண்மைக் காதலரின் உள்ளன்பைக் கெடுத்து அவர்கள் ஒருவரை யொருவர்விட்டுப் பிரியுமாறு செய்தற்கே யாகும். ஆனல் யாவர் இச்சூழ்ச்சி செய்தார்களோ அவர்களே அதற்குரிய பயனை யடைந்தார்கள். முடிவில் உண்மையான தூய காதலே வெற்றி பெற்று ஒளிர்கிறது. இவர்கள் கேவலம் காமத்தினலன்றிக் காதலால் விழுங்கப்பட் டிருக்கிருர்க ளென்பது, இவர்கள் ஒருவர்பொருட்டு மற்ருெருவர் உயிரையும் பொருட்படுத்தாது தாங்கள் செய்யாத குற்றத்தையும் வலிந்து ஒப்புக்கொண்டு தண்டனையை யேற்க முற்பட்டதால் நன்கு புலப்படுகிறது. அவ்வித உண்மைக் காதலர்களின் இடையே சுய நல மிக்க ஒரு சில மக்களால் கட்டிவிடப்பட்ட போலி சாதி வேற்றுமை குறுக்கிடுகிறது. அதனல் அவர்கள் காதல், காட்டில் எரியும் சந்திரன் ஒளியைப் போல் சிறப்புப் பெருமல் இருக்கிறது. காதல், சாதி வேற்றுமையையும், சமூகக் கட்டுப்பாட்டையும் கடந்து ஒளிர்வது. ஒத்த அறிவும், ஒத்த கல்வியும், ஒத்த திருவும் உடையாரிடத்துக் காதல் உண்டாவதன்றி, உயர்ந்த சாதியார், செல்வமுடையார் என்பதை யுட்கொண்டு அவர்களிடத்துக் காதல் உண்டாகாது. இம்மண்ணுலகத்துப் பிறந்த மக்களெல்லாம், எல்லாம் வல்ல முழுமுதற் பெருங்கடவுளால் படைக்கப்பட்டவர்கள். எனவே, அவர்களிடையே உயர்வு தாழ்வு ஏது? தீண்டப்படாதார் யார்? ஒதுக்கப்பட்டார்

யார்? ஒருவருமில்லை. அனைவரும் சகோதரர்களே. ஒரு தந்தையிடத்து உதித்த மக்களுள் உயர்வு தாழ்வு ஏதேனுமுண்டோ? அவர்கள் அறிவினாலோ கல்வியி னாலோ சிறப்பு ஏற்படுவதன்றி மற்றவற்றால் ஏற்றத் தாழ்வு உண்டோ? ஒருவரை யொருவர் அடக்கியாள வேண்டும் என்ற எண்ணம் மக்களிடத்தில் உதித்த போதே இப்போலி சாதிவேற்றுமையும், பிறவேற்றுமை களும் ஏற்பட்டன. இவற்றால் நாளடைவில் ஒற்றுமை குலையலாயிற்று. அதனால் பல பிரிவுகளும், கக்ஷிகளும் எழுந்து, பிணக்கும் போரும் உண்டாகி, மக்கள் சமூ கத்தை மூன்னேற்றமடைய வொட்டாது செய்து வருகி ன்றன. மக்கள் சமூகம் பண்டைய நிலையை யடைய வேண்டுமானால்—அதாவது உயர்வு தாழ்வு இல்லா திருக்க வேண்டுமானால்—நம் நாட்டில் கலப்பு மணங்கள் —காதல்மணங்கள்—நிகழ்தல் வேண்டும். இஃதொன் றே, மக்கள் சமூகத்தை அறிவிலும், ஆற்றலிலும் முன்னேறச் செய்யவல்லது. நான் இப்போது மனோகரி யின் தந்தையாகிய குஞ்சிதபாத மய்யரைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், சாதிக் கட்டுப்பாட்டுக் காகப் பயந்து தன் மகளின் காதலை மாசு படுத்தாது, நாட்டுக்கு வழிகாட்டு முகத்தான், மனோகரியை அவள் உண்மைக் காதலனாகிய வசீகரனுக்குத் திருமணஞ் செய்துவைக்கவேண்டும் என்பதேயாம். என்னுடைய இவ்வேண்டுகோளை அங்கீகரித்து அவர் இவ்விருவர்க ளுக்கும் விவாகம்செய்து வைப்பார் என்று நம்புகிறேன். இதனை என் உத்தியோக முறையிலன்றி—அதிகாரத் தோடன்றி—நட்பு முறையில்—சகோதரமுறையில் சொல்லுகிறேன். மற்றும் இங்கு குழுமியுள்ள அறிஞர்

பெருமக்களும் இவ்வேண்டுகோளை ஆதரிப்பார்களென்று எண்ணுகிறேன்.

(இதைக்கேட்ட நீதிமன்றத்தி லுள்ளார் அனைவரும் ஆனந்தத்தால் ஆரவாரஞ்செய்து, கைகொட்டித் தங்கள் கருத்தொற்றுமையை வெளி யிட்டார்கள். சுப்பண்ணு சாஸ்திரி தாம் எதிர் பார்த்தவாறு நடவாது போகவே, தலைகுனிந்து கொண்டு அவ்விடத்தைவிட்டு மெல்ல நழுவி விட்டார். நீலலோசனி தன் எண்ணமொன்றும் நிறைவேறாது போகவே எவ்வாறாயினுமொழியட்டும் என்று மௌனஞ் சாதித்தாள். குஞ்சிதபாதமய்யர் தம் இருக்கையைவிட்டு எழுந்து நின்று நீதிபதியையும், மற்றமுள்ளவர்களையும் பார்த்து)

குஞ்:—மேன்மை தங்கிய நீதிபதியவர்களே! வழக்கறிஞர்களே! பெரியோர்களே! நான் சீர்திருத்தம், சீர்திருத்தம் என்று கூக்குரலிடும் கூட்டத்தாரில் ஒருவன் என்பதும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவன் என்பதும் உங்கள் அனைவருக்கும் தெரிந்ததாகும். சீர்திருத்த முறைகளைப்பற்றி அழகுபட, நாவன்மையால் பேசும் நான் அவ்வாறு ஒருசிறிதும் நடவாததைப்பற்றி நீங்கள் என்னை எள்ளி நகையாடா திருக்கமுடியாது. நான் என் மகளின்—அருமந்த மகளின்—உண்மை நிலையை—உள்ளக்கருத்தை அறிந்திருந்தும், அவள் விருப்பத்தின் வண்ணம் நடத்திவைக்க முற்படாதது, நான் சாதிக் கட்டுப்பாட்டில் கட்டுபட்டுக்கிடந்ததும், வைதீகக் கோட்டியினரின் எதிர்ப்பிற்கு அஞ்சிக்கிடந்ததுமே காரணமாகும். இப்போது நிகழ்ந்துள்ள நிகழ்ச்சியைப் பார்க்கும்போது, மனோகரியும் வசீகரனும் உண்மைக்காதலால்

ஒன்றுகூடி வாழ்தலே கடவுள் திருவுள்ளமாக விருக்கிறது என்று தெரிகிறது. எனவே, இனியும் என் மகளின் விருப்பத்தை முடிப்பதில் தாழ்க்காது மேன்மை தங்கிய நீதிபதி யவர்களின் வேண்டுதலின் வண்ணம் அவளுக்கும் வசீகரனுக்கும் திருமணஞ்செய்து வைக்கிறேன். இங்கு குழுமியிருக்கும் பெரியாரனைவரும் இம்மணமன்றலுக்குத் துணைபுரிந்து உடனிருந்து நடத்திவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். (என்று தம் இருக்கையில் அமர்ந்தார். அங்கிருந்தார் எல்லாரும் நீதிபதியுட்பட, அவர் பரந்த நோக்கத்தையும், அந் நோக்கம் சாதிக்கட்டுப்பாட்டில் ஒளிந்து கிடந்ததையும், சமயம் வந்தபோது துணிந்து தம் உண்மைக் கருத்தை வெளியிட்டு, அவ்வாறே நடப்பதாக ஒப்புக்கொண்டதையும் கண்டு அவரைப் புகழ்ந்து போற்றினார்கள். வசீகரனும் மனோகரியும் தங்கள் காதல் வெற்றி பெற்றதையும், அவ்வாறு வெற்றி பெறுவதற்கு ஆண்டவன் துணை புரிந்ததையும் நினைந்து கடவுளின் இணையடி மலரை வழுத்தினார்கள். அவர்கள் தங்கள் இருக்கையில் இன்பமே வடிவாய்த் திகழ்ந்திருந்தார்கள்.)

(நீதிமன்றம் முடிவடைதல்.)

களம் III. இடம்:—குஞ்சிதபாதமய்யர் வீடு.

அங்கம் 2. காலம்:—காலை.

(குஞ்சிதபாதமய்யர் வீடு மணப்பந்தர்களாலும், மகர தோரணங்களாலும், வாழை கமுகுகளாலும், அலங்கரிக்கப்பட்டு வெகு அழகாக விளங்கிற்று. ஒருபுறம் இன்னிசை வாத்தியங்களின் முழக்கமும் மற்றொருபுறம் விவாகத்திற்கு வந்திருந்தவர்களுடைய ஆரவாரமுமாக இருந்தது. வீட்டினுள் அமைத்திருக்கும் மண அறையில் வசீகரனும் மனோகரியும் அழகு நிலயங்களென்ன வீற்றிருந்தனர். வழக்கு நடந்த போது வந்திருந்தாரும், வழக்கறிஞர்களும், நீதிபதியும், மற்றும் குஞ்சிதபாத மய்யரின் சுற்றத்தாரில் சிலரும், நண்பர்கள் பலரும், தம்பதிகளுடன் வாசித்திருந்த கலா சாலை மாணவர்களும் விவாகத்துக்கு வந்து குழுமி யிருந்தனர். புரோகிதர் விவாகச் சடங்குகளை யாரம் பித்து நடத்திவந்தார். தக்ஷிணைக்காக வைதீகப் பார்ப்ப னர் சிலரும் வந்து அவருக்கு உதவியாக மந்திரங்களை யோதிக் கொண் டிருந்தனர்.)

(இவ்விதம் திருமணஞ் சிறப்பாக நடந்துக்கொண் டிருக்க, அவ்வீட்டின் வெளிப்புறத்தில் இருந்து மூன்று வைதீகப் பார்ப்பனர் உள்ளே பிரவேசித்தல்.)

குப்பு சாஸ்திரி:—யார் வீட்டுக் கலியாணமா யிருந்தாலென்ன? தக்ஷிணை கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கக்கூடியதா யிருந்தால் போதும்.

நீலகண்ட சாஸ்திரி:—என்ன ஓய்! காய் கறி இல்லாமலா?

அப்பு சாஸ்திரி:—அது இல்லாம லிருக்குமா? அதிருக்கட்டும். உங்களுக்குத் தம்பதிகள் யாரென்று தெரியுமா?—என்ன அக்கிரமம் ஐயா! எந்த ஊரில் அடுக்கும்.

நீல:—அக்கிரமம் என்ன ஐயா? மண மக்கள் யார்? பொருந்தா சம்பந்தமா?

அப்பு:—பொருந்தா சம்பந்தந்தானு?—உமக்குச் சங்கதி தெரியாது போலும்?

குப்பு:—என்ன ஐயா சங்கதி. சங்கதியைச் சொல்லித் தொலையுமே! பீடிகை யெல்லாம் போடுகிறீரே!

அப்பு:—இந்த கலியாணம் நம்மவாள் கலியாணமல்ல.

நீல:—என்ன ஐயா! ஏதேதோ உளறி வழிகிறீர். நம் குஞ்சிதபாதமய்யரின் மகளுக்குத்தானே கலியாணம்?

குப்பு:—மாப்பிள்ளை யாருடைய மகன்?

அப்பு:—அதில் தான் இருக்கிறது விஷயம். மாப்பிள்ளை யிருக்கிறுனே—அவன் (மெல்லிய குரலில்) தீண்டப்படாதவனும். ஆதிதிராவிடப் பெண்ணுல் வளர்க்கப்பட்டவனும். அவனுக்கும் குஞ்சிதபாதமய்யரின் மகளுக்கும் கலாசாலையிலிருந்து சிநேகமாம். சிநேகத்திலிருந்து அது காதலாய் முடிந்துவிட்டதாம்.—சமீ

பத்தில் ஏதோ வழக்கு நடந்ததாம். அதில் நீதிபதியே இந்த ஆதிதிராவிடனுக்கும் இப்பெண்ணுக்கும் விவாகஞ் செய்யும்படிக் கேட்டுக் கொண்டாராம். அந்த நீதிபதிகூட இக்கலியாணத்துக்கு வந்திருக்கிறாராம்.

குப்பு:—ஐயையோ! இதென்ன வெகு மோசமாயிருக்கிறதே! கேவலம் ப...றை...ய...னு...க்...கா—நம் குலத்துப் பெண்ணைக் கலியாணஞ்செய்து கொடுப்பது?

நீல:—நம்மவாள் எல்லாம் இதைக்கேட்டு சும்மாவிருக்கிறார்களா?

அப்பு:—சும்மாவில்லாமல் என்ன செய்கிறது? அவர்களெல்லாங் கூடத்தான் இவ்விவாகத்துக்கு வந்திருக்கிறார்கள்.

நீல:—என்ன இது? உலகமே தலைகீழா யிருக்கிறதே!

குப்பு:—கலியுகம் முடிவடையப் போகிறது போலும்!

அப்பு:—எது எப்படியாகிலும் தொலையட்டும். நமக்கு வேண்டியதென்ன? தக்ஷிணையும், சமாராதனையுந்தானே. உள்ளே வரப்போகிறீர்களா என்ன?

குப்பு:—வராமலென்ன? நமக்கு என்னய்யா வந்தது? யாரை யார் கலியாணஞ்செய்து கொண்டாலென்ன?

நீல:—ஆம். நாம் ஏன் இதையெல்லாங் கவனிக்க வேண்டும்? நாம் வந்த வேலை யென்னவோ அதைப் பார்த்துக்கொண்டு போகலாம்.—நாம் இதுவரை பேசியிருந்ததை யெல்லாம் யாராகிலும் கேட்டிருந்தார்களா—கவனித்தார்களா என்பதை முதலில் பாருங்கள்.

ஏனெனில் நாம் இவ்வாறெல்லாம் பேசி யிருந்தோ மென்று முதலாளியிடஞ் சொல்லிவிட்டால் நமக்குத் தக்ஷிணை கிடைக்காமல் போய்விடும். ஆதலால் அதை நாம் கவனித்தல் வேண்டும்.

குப்பு:—(சுற்றுமுற்றும் பார்த்து) அதெல்லாம் ஒன்றுமில்லை. நாம் பேசியதை யாருங் கேட்கவுமில்லை. வாருங்கள் உள்ளே போகலாம். (மூவரும் உள்புகுதல்.)

(அச்சமயம் வசீகரன் மனோகரியின் கழுத்தில் மாங் கலியத்தைச் சூட்டுகிறான். மங்கல வாத்தியங்கள் முழங்கியது. வந்திருந்தார் மணமக்கள் மீது மலர் மாரி பொழிந்தனர். பெரியோர்கள் ஆசிகூறினர். கற்புடை மகளிர்கள் மணமக்களை வாழ்த்தினர்.)

குப்பு:—(நீலகண்ட சாஸ்திரியின் காதில் மெது வாக) மாப்பிள்ளையைப் பார்த்தால் ஆதிதிராவிடனைகத் தோன்றவில்லையே! பிராம்மண தேஜஸ் முகத்தில் வீசு கிறதே!

நீல:—ஆமாம் செவ்வேள் போன்று சிவப்பாகவும் அழகாகவு மிருக்கும் இவனைப் பார்ப்பன னென்று சொல்லக்கூடுமன்றி, ஆதிதிராவிட னென்று கூறமுடி யாது. எனக்கென்னமோ இன்னும் சந்தேகமாகத்தா னிருக்கிறது. ஒருவேளை நம்ம அப்பு சாஸ்திரி யாரோ கட்டிவிட்ட பொய் மூட்டையை மெய்யென்று நம்பி நம்மிடம் அவ்வாறு சொன்னரோ, என்னமோ!

அப்பு:—(வாயில் கையை வைத்து) பேசாமலிருங் கள். அப்புறம் பேசலாம்.

(விவாகச் சடங்குகளெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய் முடிவடைந்தன. அதன் பின்னர் நீதிபதி

முதலிய பெரியோர்கள் அம் மணத்தைப் பற்றிச் சிறப்பாகக் கூறி மண்மக்களை வாழ்த்தினர். குஞ்சிதபாதமய்யர் வந்திருந்தார் எல்லோருக்கும் நன்றி யறிதல் கூறினர். மணமக்கள் தங்கள் விருப்பத்தை முடித்தற்குக் காரணர்களாயிருந்த நீதிபதி முதலிய பெரியோர்களிடத்துப் பணிவான மொழிகள் கூறித் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்தார்கள்.)

(முடிவில் விவாகத்திற்கு வந்திருந்தார் யாவருந் தங்களைச் சூழ்ந்து அசைவற்று அமைதிநிலவ நிற்க, வசீகரனும் மனோகரியும் அழற்பிழம்பைச் சுற்றிவந்து, அதனுள் ஒளிரும் முழுமுதற்கடவுளை,

"பண்ணி னிசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ் சொல்லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா விறைவா போற்றி
விண்ணு நிலனுந் தீயானாய் போற்றி
மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

என்று போற்றி செய்து வணங்கினர்கள். மற்றவர்களும் மணமக்களைச் சீரும் சிறப்பும் பெற வாழ வைக்க வேண்டுமென்று இறைவனை இறைஞ்சி நின்றார்கள்.)

(பின்னர், வாத்திய முழக்கத்திடையே வசீகரன் மனோகரியை யழைத்துக்கொண்டு மனை புகுதல்.)

முற்றுப் பெற்றது.

சிவம்.